# உதயன்

24 பக்கங்கள்

யாழ். - 20/=
வன்னி - 20/=
கொழும்பு - 30/=

சுடர்: 29 கதிர்: 213 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 13, வெள்ளி 27.06.2014

stay connected with: uthayan.print uthayanprint

*Uthayan - A lively National Tamil Daily*


தடகளப் போட்டிகளில் 19 சாதனைகள்

பக்கம் 23

32°C

தெளிவான வானிலை

காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 26 km/h
ஈரப்பதம்: 50%
காற்றமுத்தம்: 1009 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:22
சூரியஸ்தமனம்: 18:03

# முஸ்லிம்களை தாக்கியோர் தண்டிக்கப்பட வேண்டும்


## அளுத்கம வன்முறைகள் தொடர்பாக வடமாகாண சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 27
தென்னிலங்கையில் நடந்தேறிய வன்முறைகளில் கொல்லப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம். இந்தச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதுடன், அதற்குக் காரணமானவர்கள் உடனடியாகத் தண்டிக்கப்படவும் வேண்டும். - இவ்வாறு வடக்கு மாகாண சபையில் நேற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 11ஆவது அமர்வு நேற்று நடைபெற்றது. அதில் ஆளுங்கட்சி உறுப்பினர் அ.அஸ்மினால் இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது. இந்தப் பிரேரணை மீது இரு மணி நேர விவாதம் நடைபெற்ற பின்னர் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நேற்றைய அமர்வில் பிரேர

20 ஆம் பக்கம் பார்க்க



வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் தரையில் அமர்ந்து தனது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம்.

## சிறப்புரிமை மீறப்படுவதாக கிளர்ந்தெழுந்தார் சிவாஜி

### மாகாண சபையின் நேற்றைய அமர்வில் தரையில் அமர்ந்து போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 27
"வடக்கு மாகாண சபைக்கு முன்னறிவித்தல் கொடுத்து சமர்ப்பிக்கப்பட்டிருந்த மூன்று பிரேரணைகள், சபையின் அமர்வில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதனால் எனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது" - இவ்வாறு தெரிவித்த வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம்சபையின்நடுவே கறுப்புச் சட்டையுடன் நிலத்தில் அமர்ந்திருந்து நேற்றுப் போராட்டம் நடத்தினார்.

வடக்கு மாகாண சபையின் 11ஆவது அமர்வு நேற்று நடைபெற்றது. அமர்வின் நிகழ்சி நிரலில் குறிக்கப்பட்டவாறு பிரேரணைகள் அமர்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. பிரேரணைகள் முடிவுற்றவுடன் சபையில் எழுந்த சிவாஜிலிங்கம், தனது சிறப்புரிமை மீறப்பட்டது

23 ஆம் பக்கம் பார்க்க

## 85 பேருக்கு இம்மாதம் டெங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 27
இம்மாதம் மட்டும் யாழ். மாவட்டத்தில் 85 பேர் டெங்கு நோய் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். யாழ். மாவட்டத்தில் தற்போது டெங்கு வேகமாகப் பரவி வருகின்றது. அதனால் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளனர் சுகாதாரப் பகுதியினர்.

இதுதொடர்பில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்துள்ளார். அதில் கூறப்பட்டுள்ளதாவது,

20 ஆம் பக்கம் பார்க்க



## நைஜீரியாவில் குண்டுவெடிப்பு

15 ஆம் பக்கம் பார்க்க

## பொலிஸ் பாதுகாப்பு இல்லையேல் எனக்கு துப்பாக்கியைத் தாருங்கள்

### மாகாண சபையில் கொந்தளித்தார் அனந்தி

யாழ்ப்பாணம், ஜூன் 27
பொலிஸ் பாதுகாப்பு வழங்க முடியாவிட்டால் எனது பாதுகாப்புக்கு நவீன துப்பாக்கியைத் தாருங்கள். எனது பாதுகாப்பை நான் பார்த்துக் கொள்கின்றேன் - இவ்வாறு ஆவேசமாகத் தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன்.

20 ஆம் பக்கம் பார்க்க

## ரூ.12 லட்சத்து 57 ஆயிரம்

### வடக்கு மாகாண சபை மாதம் ஒன்றுக்குச் செலவிடும் வாடகை இது

யாழ்ப்பாணம், ஜூன் 27
வடக்கு மாகாணத் திணைக்களங்கள், அமைச்சுக்கள், அமைச்சர்களின் வதிவிடங்கள் மற்றும் முதலமைச்சர் அலுவலகம் என்பவற்றின் வாடகைக்காக மாதாந்தம் செலவிடப்படும் தொகை 12 லட்சத்து 57 ஆயிரத்து 500 ரூபாவெனத் தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

25.09.2013 ஆம் திகதியிலிருந்து வடக்கு மாகாண சபை மற்றும் சபை சார்ந்த அமைச்சுக்களின் காரியாலயங்கள், முதலமைச்சரின் காரியாலயம், ஏனைய திணைக்களங்கள் மற்றும் இதர அலுவலகங்களுக்கும் முதலமைச்சர், அவைத் தலைவர், அமைச்சர்களது வதிவிடங்களுக்கும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட கட்டங்கள், வீடுகள் தொடர்பான விடயங்கள், அந்தக் கட்டங்கள், வீடுகளின் விலாசங்கள், உரிமையாளர்களின் பெயர்கள், அவற்றுக்கு கொடுக்கப்படும் வாடகைத்

23 ஆம் பக்கம் பார்க்க

## குருநகர் பகுதியில் வாள்வெட்டு

யாழ்ப்பாணம் ஜூன் 27
யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் நேற்றுமாலை வாள்வெட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது என்று கூறப்படுகின்றது. குறித்த சம்பவத்தில் காயமடைந்த பெண் ஒருவர் உட்பட மூவர் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிய வந்தது. சம்பவம் குறித்த மேலதிக தகவல்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. (ற-4)

## அடித்து கொலை செய்தவருக்கு 17 ஆண்டுகளின் பின்னர் தூக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 27
குடும்பஸ்தர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் ஒன்றின் விசாரணைகள் முடிவடைந்துள்ள நிலையில், குற்றவாளியாக இனங்காணப்பட்டவருக்கு சம்பவம் நடந்து 17 ஆண்டுகளின் பின்னர்

20 ஆம் பக்கம் பார்க்க

### அணைந்தன மின்குமிழ்கள்

"மரணம் விளைவித்த குற்றத்துக்காக உமக்கு ஏன் மரண தண்டனை விதிக்கக் கூடாது?" என்று பிரதீஸ்வரனைப் பார்த்து நீதிபதி கேட்டார். அதற்கு அவர் "நான் சிறுவயதாக இருக்கும்போது அறியாது செய்துவிட்டேன். நீங்கள் தான் கருணைகாட்டவேண்டும்" என்று கூறினார்.

20 ஆம் பக்கம் பார்க்க

## மூன் குழுவினர் முடித்த இடத்தில் ஆரம்பிக்க வேண்டும் விசாரணை

### சர்வதேச மன்னிப்புச் சபை வேண்டுகோள்

AMNESTY INTERNATIONAL

நியூயோர்க், ஜூன் 27
ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை மூன்று நிபுணர்களை நியமித்

20 ஆம் பக்கம் பார்க்க



## போஹோ ஹராம்....

12 ஆம் பக்கம் பார்க்க

## மூவர் நியமனத்துக்கு அமெரிக்கா வரவேற்பு

கொழும்பு, ஜூன் 27
இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தவுள்ள ஐ.நா. விசாரணைக் குழுவுக்கு ஆலோசனை வழங்குவதற்கென நிபுணர்கள் மூவர் நியமிக்கப்பட்டுள்ளமையை பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகியன வரவேற்றுள்ளன.

இலங்கையில் உண்மையைக் கண்டறியவும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் இத்தகைய பொறிமுறைகளே உதவும் என்றும் அவை தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதிப்

20 ஆம் பக்கம் பார்க்க

# ஆளாளுக்கு விசாரணை யார் கூறும் முடிவை ஏற்பது? வடக்கு மாகாண சபையில் நேற்று இப்படி ஒரு குழப்பம்

தி.அமுதன்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சு ஒரு விசாரணை செய்து அறிக்கை சமர்பிக்கும் போது, ஆளுநர் அது தொடர்பில் இன்னொரு விசாரணை செய்தார். அப்படிஎன்றால் இவற்றில் யாருடைய விசாரணை - முடிவை ஏற்றுக்கொள்வது? சுகாதார அமைச்சு குற்றவாளி என்று சொல்பவரை ஆளுநர் குற்றவாளி இல்லை என்று சொன்னால் எவரின் தீர்ப்பு சரியானது? என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் எழுப்பிய கேள்விகளால் நேற்றைய சபை அமர்வு காட்டமானது. சுகாதார அமைச்சர் கூறிய பதிலுடன் அந்த காட்டம் தணிந்து வாட்டி வதைத்த வெய்யிலோடு உறுப்பினர்கள் மீண்டும் சூடாகினர்.

வடக்கு மாகாணசபையின் 11 ஆவது அமர்வு நேற்று கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது. அமர்வு 9.30 மணிக்கு ஆரம்பிக்க வேண்டியபோதும், மின்சாரம் தடைப்பட்டிருந்ததால் முற்பகல் 10.44 க்கே ஆரம்பமானது. வடக்கு மாகாண பேரவைச் செயலகத்துக்குச் சொந்தமான மின்பிறப்பாக்கியும் பழுதடைந்திருந்தமையால், சபை அமர்வுகளை உரிய நேரத்தில் ஆரம்பிக்க முடியவில்லை.

இலங்கை மின்சார சபை வழங்கிய மின் ஒலி,ஒளி வசதிகளுக்கு மட்டுமே போதுமானதாக இருந்தது. சபாமண்டபத்தின் குளிரூட்டிகள் பயன்படுத்தப்படவில்லை. இதனால் உறுப்பினர்கள் கடும் வெக்கைக்குள், கையில் கிடைத்ததை வைத்து விசிறிக் கொண்டே அமர்வில் பங்கெடுத்தனர்.

ஆரம்பத்தில் அவைத் தலைவரின் அறிவித்தலைத் தொடர்ந்து, நியதிச் சட்டம் இந்த அமர்விலும் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்று அவர் அறிவித்தார். இதன் பின்னர் வழமை போன்று பிரச்சினை கிளம்பத் தொடங்கியது. நாடாளுமன்றத்தில் அஸ்வர் எம்.பி அடிக்கடி ஒழுங்குப் பிரச்சினை கிளப்புவது போல, இங்கு எதிர்கட்சித் தலைவர் தவராஜாவும் அடிக்கடி ஒழுங்குப் பிரச்சினை கிளப்பினார்.

இந்த மன்றுக்கு உறுப்பினர்கள் ஓர் ஒழுங்கான ஆடை அணிந்து வரவேண்டும் என்று அவர் தொடங்கினார். இதன் போது அவைத் தலைவர் உள்ளிட்ட எல்லோரது கண்களும், உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் மீது திரும்பியது. அவர் மாத்திரம் அவைக்கு கறுப்புச் சட்டை அணிந்து வந்திருந்தார். சுதாகரித்துக் கொண்ட அவைத் தலைவர், உறுப்பினர்களுக்கு என்று சுய கௌரவம் இருக்கின்றது. அவர்கள் அதனை மதித்து அடுத்த அமர்விலிருந்து நடப்பார்கள் என்று சொல்லி சமாளித்தார்.

இருப்பினும் சீறி எழுந்த சிவாஜிலிங்கம், கறுப்பு கோர்ட் போட்டு வரலாம் என்றால் ஏன் கறுப்புச் சட்டை போட்டுக் கொண்டு வரக் கூடாதென்று சரியான பதிலடியையும் கொடுத்தார். சர்சையுடன் ஆரம்பமான அமர்வு அதன் பின்னர் சற்று அமைதியாக நகர்ந்தது.

தென்பகுதியில் முஸ்லிம் மக்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் கண்டனத் தீர்மானம் ஆளுங்கட்சி உறுப்பினரான அஸ்மினால் கொண்டு வரப்பட்டிருந்த நிலையில், எதிர்கட்சியைச் சேர்ந்த 3 முஸ்லிம் உறுப்பினர்களும் சபைக்கு நேற்று வரவில்லை.

அதன் பின்னர் கேள்வி நேரத்தில், ஆளுங்கட்சி உறுப்பினர் ரவிகரனால் சமர்பிக்கப்பட்ட கேள்விகள் கேட்கப்பட்டன. அதற்கு முதலமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோர் பதிலளித்தனர்.

இதன் போது சுகாதார அமைச்சர் வழங்கிய பதிலில் மீளவும் ரவிகரன் சில கேள்விகளைத் தொடுத்தார். அதாவது வடக்கு மாகாண சுகாதார அமைச்சு ஒருவிசாரணைசெய்து அறிக்கை சமர்பிக்கும்போது, ஆளுநர் இன்னொரு விசாரணை செய்தால் யாருடைய விசாரணையை ஏற்றுக்கொள்வது?

சுகாதார அமைச்சு குற்றவாளி என்று சொல்பவரை ஆளுநர் குற்றவாளி இல்லை என்று சொன்னால் யாருடைய விசாரணை- முடிவு நடைமுறைப் படுத்தப்படும் என்று வில்லங்கமான கேள்வியைத் தொடுக்க, சுகாதார அமைச்சர் சத்தியலிங்கமோ அப்பாவித்தனமாக, அதற்கு அரசியலமைப்பைத் தான் பார்க்க வேண்டும் என்றார்.

இதன் போது ரவிகரன், தண்டனை பெறுகின்ற உத்தியோகத்தர்கள் எல்லாரையுமே முல்லைத்தீவுக்கு அனுப்புகின்றீர்கள். அப்படியானால் அங்குள்ள மக்கள் தண்டனை பெற்றவர்களா? என்றும் கேட்டு வைத்தார்.

இதன் பின்னர் எதிர்கட்சித் தலைவரினால், முதலமைச்சரிடம் கேட்கப்பட்ட வாடகை தொடர்பிலான விவரங்களை முதலமைச்சர் சொல்லி முடித்தார். இதன் பின்னர் உப கேள்வி இல்லை என்று எதிர்கட்சித் தலைவர் தெரிவித்தார். இதன் போது சிவாஜிலிங்கம் மற்றும் சயந்தன் ஆகியோர் எழுந்து நின்று சில கேள்விகள் கேட்க முற்பட, எதிர்கட்சித் தலைவர், இதனை விவாதமாக்க சட்டத்தில் இடமில்லை என்று குறிப்பிட்டார். இதன்போது சயந்தன், சம்பந்தப்பட்ட உறுப்பினர் உப கேள்வி கேட்காவிட்டால் வேறு இரு உறுப்பினர்கள் உப கேள்விகள் கேட்கலாம் என்று, எதிர்கட்சித் தலைவர் தவராஜாவுக்கு விளக்கினார்.

இதன் பின்னர் சிவாஜிலிங்கம், வாடகைகள் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டுத்தான் கொடுக்கப்படுகின்றதா? அல்லது அதிகாரிகள் தமது எண்ணத்துக்கு வாடகைகளைக் கொடுக்கின்றார்களா? என்று கேள்வி எழுப்பினார். இதன்போது அவைத் தலைவர் குறுக்கிட, இந்த விடயங்களில் ஏன் வெளிப்படைத்தன்மையாக நடக்க மறுக்கின்றீர்கள் என்று காட்டமாகவே கேட்க, முதலமைச்சர் எழுந்து இது தொடர்பில் அடுத்த அமர்வில் பதிலளிப்பதாகத் தெரிவித்தார்.

இதன் பின்னர் அவையில் பிரேரணைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

அளுத்கம சம்பவம் தொடர்பில் அஸ்மின் பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றினார். இதன்போது பொலிஸார் முன்னிலையிலேயே தாக்குதல் நடத்துவதைத்தான் இலங்கை அரசு ஆசியாவின் ஆச்சரியம் என்று குறிப்பிடுகிறது என்றார். அத்துடன் முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகளைக் கண்டிப்பதாகவும் தெரிவித்தார். இந்தக் கண்டனத் தீர்மானத்தின் மீது ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பலர் உரையாற்றினார்கள். கடந்த காலங்களில் முஸ்லிம்கள் சிங்கள அரசுகளுடன் சேர்ந்து தமிழ் மக்களுக்கு எதிராச் செயற்பட்டனர் அதற்கான பலாபலன்களை அனுபவித்தனர். இனிவருங் காலங்களிலாவது தமிழ்த் தேசிய இனத்துடன் முஸ்லிம்கள் சேர்ந்து செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

இந்தப் பேச்சுக்களின் போது, உறுப்பினர் இ.ஆர்னல்ட், அளுத்கமவில் முஸ்லிம் பெண்மணி ஒருவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் எங்கே என்று கேட்டதை நினைவூட்டினார். அதே சமயம்,உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன், பிரபாகரன் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்ட போது, முஸ்லிம்கள் சிங்களவர்களுடன் சேர்ந்து வெடி கொழுத்தியதையும் ஞாபகப்படுத்தினார்.

இரண்டு தடவை முரணான இரு விடயத்துக்காக அவைக்கு பிரபாகரன் வார்த்தைகளில் வந்து சென்றார்.

உறுப்பினர் விந்தன் உரையாற்றும் போது, கிழக்குமாகாணத்தில் முஸ்லிம் முதலமைச்சர் இருக்கின்றார். ஆனால் அங்கு பிரேரணை நிறைவேற்றப்படவில்லை. அத்துடன் அங்கு எந்த எதிர்ப்பும் தெரிவிக்கப்படவில்லை என்று சொல்ல, அதனை மறுத்த அவைத் தலைவர் சிரித்துக் கொண்டே, அங்கு உறுப்பினர்கள் செங்கோலுடன் சென்றதையும் எதிர்ப்புத் தெரிவித்ததையும் சுட்டிக்காட்டினார்.

எதிர்கட்சித் தலைவர் சி.தவ்ராஜா உரையாற்றுகையில் , 1990 ஆம் ஆண்டு முஸ்லிம்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட போது எமது கட்சி அவர்களுக்கு புத்தளத்தில் 240 பேர்ச் காணி வாங்கி 130 முஸ்லிம்களை குடியமர்த்தியது என்றும், ஆனால் அன்று குரல் கொடுக்காமல் மௌனிகளாக இருந்தவர்கள் இன்று முதலைக் கண்ணீர் வடிப்பதைப் பார்த்து தனக்கு முதலைக் கண்ணீர் வருவதாகவும் குறிப்பிட்டார்.

இதன் போது சிவாஜிலிங்கம், கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், முஸ்லிம் அமைச்சரை ஜனாதிபதி கதிரையால் தாக்க முற்பட்ட போது உங்கள் அமைச்சர் என்ன செய்து கொண்டிருந்தார் என்று கேட்டார். ஆனால் அதற்குப் பதிலளிக்காமல் மௌனம் காத்தார் தவராஜா.

இதன் போது அவைத் தலைவர், முஸ்லிம்கள் அன்று வெளியேற்றப்பட்ட போது பல தமிழ்த் தலைவர்கள் குரல் கொடுத்தனர் என்று சொன்னார். அதன் பின்னர் சிவாஜிலிங்கம் மற்றும் சித்தார்த்தன் ஆகியோரும் தமது இயக்கங்கள் அன்றைய சூழலில் முஸ்லிம்களுக்கு உதவி செய்தன என்றும் தெரிவிக்க, அந்தர் பல்டி அடித்த எதிர் கட்சித் தலைவர், தொப்பி அளவானவர்கள் போட்டுக் கொள் ளட்டும் என்று தெரிவித்து அமர்ந்து கொண்டார்.

முல்லைத்தீவில் சிங்களவர்கள் மேற்கொள்ளும் சட்டவிரோத மீன்பிடி தொடர்பில் ஆளுங்கட்சி உறுப்பினர் ரவிகரன் சமர்ப்பித்த பிரேரணையை வழிமொழிந்த பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன், ரவிகரனது பிரேரணையை ஆதரித்ததுடன், தமிழ் மக்கள் செய்கின்ற தவறுகளையும் சுட்டிக்காட்டினார்.

இதன் போது வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் டெனீஸ்வரனும் பதிலளித்தார். சகல மாகாணங்களினதும் மீன்பிடி அமைச்சர்கள் அடுத்த மாதம் முதலாம் திகதிமத்திய அமைச்சருடன் கலந்துரையாடல் நடத்துவர் என்றார். இந்தச் சந்திப்பில் முல்லைத்தீவுப் பிரச்சினை மற்றும் இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் ஆராயப்படும் என்றும் தெரிவித்தார்.

இதன் பின்னர் வடக்கின் விளையாட்டுத்துறை தொடர்பில் பிரேரணை சமர்ப்பித்த ரவிகரன், எங்களது இளைஞர்கள் பயிற்சியுடன் இருந்தால் எதையும் சாதிப்பார்கள். அதனால்தான் 9 நாடுகள் சேர்ந்து எங்கள் இளைஞர்களுடன் போராட வேண்டியிருந்தது என்று தெரிவித்தார்.

அடுத்து பிரதி அவைத் தலைவர், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மைதானம் வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தார். அத்துடன் உறுப்பினர் சிவாஜிலிங்கம், வடக்கு மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் யாருடைய சொல் கேட்டுச் செயற்படுகின்றார் என்று கேள்வியையும் தொடுத்தார். பசுபதிப்பிள்ளை, விந்தன் என்று உறுப்பினர்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களை அடுக்கிச் சென்றனர்.

இதன் பின்னர் ஆர்னல்ட் பதிலளித்தார். வடக்கு மாகாண சபையை நாம் பொறுப்பேற்றதன் பின்னர் தொழில்நுட்பகுழுவை உருவாக்கியுள்ளோம். விரைவில் வடக்கு மாகாணம் முன்னிலை பெறும் என்று குறிப்பிட்டார். இதன் பின்னர் பதிலளித்த கல்வி அமைச்சர், என்மீது குற்றச்சாட்டுக்களை அடுக்கியிருக்கிறார்கள். எனது அமைச்சுக்குட்பட்ட குறித்த விளையாட்டுத்துறைக்குப் பொறுப்பான உறுப்பினராக நியமிக்கப்பட்ட ஆர்னல்ட் பதிலளித்தது போல அடுத்த கூட்டத்தில் மற்றையவர்களும் பதிலளிக்க வேண்டி வரும் என்று உறுப்பினர்களை மறைமுக மிரட்டலுடன் சாடினார்.

நீண்ட காலத்தின் பின்னர் எதிர்கட்சி உறுப்பினர் அங்கஜன் சபைக்கு வந்திருந்ததுடன் அவர் பிரேரணையும் சமர்பித்திருந்தார். அவர் தனது பிரேரணையை வாசிக்கும் போது ஸ்ரீலங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்கத்தினூடாக பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் கொடுப்பது பற்றி பேசியதும், அதனை ஆளுங்கட்சி உறுப்பினர்கள் மறுதலித்தனர்.

சர்வேஸ்வரன் எழுந்து, இது எங்களை அவமதிக்கின்ற செயல். நாம் இந்தப் பிரேரணையை வழிமொழிய முடியாது. எழுத்தில் ஏற்கனவே தந்தவாறு தான் முன்வைக்க வேண்டும் என்று விடாப்பிடியாக இருந்தார். இதன் போது தவராஜா ஓர் ஒழுங்குப் பிரச்சினையை கிளப்பினார். பிரேரணை முன்மொழியப்பட்டால் அதன் பின்னர் அது வழிமொழியப்பட்ட பின்னரே விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். இறுதியில் எழுத்திலுள்ளவாறு பிரேரணை வழிமொழியப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அடிக்கடி எதிர்கட்சித் தலைவர் தவராஜா எழுந்து கொண்டேயிருந்தார். இதன் போது அவைத் தலைவர் இந்த சபையில் அடிக்கடி எழுந்துஅமர்வதில் ரவிகரன் முதலிடம் சிவாஜி இரண்டாமிடம் நீங்கள் மூன்றாம் இடம் என்றார். அத்துடன் அவையில் அதிகளவு பிரேரணை கொண்டு வருவதற்காக ரவிகரனுக்கு பதக்கம் கொடுக்க வேண்டும் என்றும் நக்கலாகச் சொல்ல, ரவிகரனும் நான் கதைக்கிறதை கேட்டுக் கொண்டிருக்கின்ற உங்களுக்கும் பதக்கம் தரவேண்டும் என்று பதிலுக்குச் சொன்னார்.

இதன் பின்னர் உரையாற்றிய உறுப்பினர் சர்வேஸ்வரனும் பிரபாகரனைக் கொண்டு வந்தார். நாட்டிலேயே மோசமான திணைக்களம் கல்வித் திணைக்களம் என்றும், தான் ஒரு முறை சிங்களப் பகுதியில் கல்வித் திணைக்களத்துக்குச் சென்ற போது அங்கு ஒரு சிங்களப் பெண்மணி அங்குள்ள அதிகாரிகளைப் பார்த்து உங்களுக்கு பிரபாகரன் இருந்தால்தான் சரி என்று சொன்னார். அந்தளவுக்கு மோசமான நிலையிலேயே கல்வித் திணைக்களம் இருக்கின்றது என்பதைக் குறிப்பிட்டார்.

எதிர்கட்சி உறுப்பினர் அங்கஜன் கொண்டுவந்த மற்றொரு பிரேரணையை, சபையில் எல்லோரும் ஏற்றுக் கொண்ட போதும் கல்வி அமைச்சர் அதனைத் தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அதற்கான நியாயமான காரணங்களை சபையில் முன்வைத்தார். எதிர்கட்சி உறுப்பினர் அங்கஜனும், திருத்தங்களுடன் அடுத்த அமர்வில் சமர்பிப்பதாகத் தெரிவித்தார்.

இதன் பின்னரே சபையில் மோதல் தொடங்கியது. உறுப்பினர் சிவாஜிலிங்கம், தனது சிறப்புரிமை மீறப்பட்டதாகத் தெரிவித்து போர்க் கொடி தூக்கினார். தான் அனுப்பிய பிரேரணைகள் சபையின் இன்றைய நிகழ்சி நிரலில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்று பிரச்சினையைத் தொடக்கினார். இதன் போது அவைத் தலைவர் அது கட்சித் தலைமைத்துவத்தோடு சம்பந்தப்பட்ட முடிவு என்று தெரிவித்தார்.

இதன் போது எதிர்கட்சித் தலைவர், உங்கள் உள்கட்சி விவகாரங்களை இங்கு கொண்டு வர வேண்டாம் என்று நல்ல சூடு போட்டார். இதன் பின்னர் சிவாஜிலிங்கம், சபாமண்டபத்தின் நடுவில் அமர்ந்து கொண்டார். பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன், நாம் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொன்ன விடயங்களைத் தான் உறுப்பினர் தனது பிரேரணையாகக் கொண்டு வந்துள்ளார் என்று தெரிவித்தார். அத்துடன் நாம் மக்களிடம் இதைச் சொல்லி வாக்குக் கேட்டு விட்டு தற்போது மௌனியாக இருப்பது நல்லதல்ல என்றும் கடுமையாகச் சாடினார். இதன் போது முதலமைச்சரும் கட்சித் தலைமையிடம் கேட்டு, குறித்த பிரேரணைகளை எடுக்கலாம் என்று தெரிவித்தார்.

இதன் போது எதிர்கட்சி உறுப்பினர் தவநாதன், அவர் கட்சிக் கட்டுப்பாட்டை மீறிச் செயற்பட்டால் நீங்கள் கட்சி யாப்புக்கு அமைய அவர் மீது ஒழுக்காற்றுநடவடிக்கை எடுக்கலாம். ஆனால் அவரது சிறப்புரிமையை மீற முடியாது. அவருக்கு பிரேரணை கொண்டு வருவதற்கு உரித்து இருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

இதன்பின்னர் ஒருவாறு சிவாஜிலிங்கத்தை, ஏனைய சக உறுப்பினர்கள் கூட்டி வந்து ஆசனத்தில் அமர்த்தினர். இதன் போது அவைத் தலைவர், அவர் பேப்பர் செய்திக்காகத் தான் செய்தவர் என்று சிவாஜிலிங்கத்தின் மீது சீறி விழுந்தார்.

இதன் பின்னர் திருமதி அனந்தி சசிதரன் தனது பொலிஸ் பாதுகாப்பு மீளப் பெறப்பட்டது தொடர்பில் கருத்துத் தெரிவித்தார். இதன் போது அவர் தனது பாதுகாப்புக்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்று நவீன துப்பாக்கி வாங்கித் தருமாறு கேட்டார். இதன் போது ஆளுங்கட்சி உறுப்பினர்கள், அவர் ஏற்கனவே பயிற்சி எடுத்திருக்கிறதால துப்பாக்கி மாத்திரம் வாங்கிக் கொடுத்தால் போதும் என்றனர். இதன் போது கஜதீபனும், அப்படியென்றால் தனக்கும் ஒரு துப்பாக்கி வாங்கித் தருமாறு கோரினார்.

இந்தச் சர்ச்சைகள் முடிந்து, நேரமும் 2 மணியைத் தாண்டிய நிலையில் உறுப்பினர்கள் பசியுடன் இருந்தனர். இதனை அடிக்கடி அவைத் தலைவரும் நினைவூட்டிக் கொண்டிருந்தார். இறுதியில் ஆளுங்கட்சி உறுப்பினர் திருமதி குணசீலனுக்கும், சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்துக்கும் இடையில் கடுமையான மோதல் வெடித்தது.

ஆளுங்கட்சி உறுப்பினர் சில குற்றச்சாட்டுக்களை பகிரங்கமாக முன்வைத்தார். சுகாதார அமைச்சு சுகாதார அமைச்சரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றதா என்ற கேள்வியுடனேயே தொடங்கினார். மன்னார் மாவட்டத்தில் குறித்த ஒரு வைத்திய அதிகாரியை மாற்றுவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்கவில்லை என்பதே அவரது குற்றச்சாட்டாக இருந்தது. அவரும் தனது பேச்சில், மீண்டும் ஒரு முறை எங்கட கட்சிக்கும் பிரபாகரன் தேவைப்படுகின்றார் என்று சொன்னார். உரிய பதில் கிடைக்காவிட்டால் ஊடகங்களுக்கு தெரிவிப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று அவர் சொல்லி முடிய சுகாதார அமைச்சர் எழுந்தார்.

எழுந்த வேகத்துக்கு, இனி ஏன் ஊடகங்களுக்கு கொடுக்க வேண்டும். அதுதான் ஏற்கனவே ஊடகங்களில் வந்து விட்டது என்று தெரிவித்து, இணையத்தளத்தில் வெளியான செய்தியைக் காண்பித்தார். அத்துடன் மேற்படி விடயம் தொடர்பில் தன்னால் எடுக்கப்பட்ட நடவடிக்கையை அவர் விவரித்தார். அத்துடன் இந்த விடயத்தில் என்ன நடந்திருக்கின்றது என்று கேள்வி எழுப்பின உறுப்பினருக்கு எல்லாம் தெரியும். மேலும் நீங்கள் சுகாதார அமைச்சின் குழுவில் இருக்கின்றீர்கள். குறித்த இடமாற்றம் நடைபெறாவிட்டால் அதற்கு நீங்களும் தான் பொறுப்பு என்று பழியை எல்லோருக்கும் பகிர்ந்தளித்தார் சுகாதார அமைச்சர். சேம்ஸ் சைட் கோல் அடிக்க வேண்டாம் என்றும் அவர் தெரிவித்தார்.

உறுப்பினர் குணசீலன் தன் மீதான குற்றச்சாட்டுக்களை மறுத்ததுடன் நேரம் 2.30 மணியை நெருங்கிக் கொண்டிருக்க அவைத் தலைவர் அவசர அவசரமாக கூட்டத்தை அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரையில் ஒத்திவைத்தார்.

## அச்சுவேலியில் கைக்குண்டு மீட்பு

யாழ்ப்பாணம்,ஜூன் 27
ஆயுதங்களை தம்வசம் வைத்திருப்பவர்கள் இராணுவத்திடம் அவற்றை ஒப்படைக்க வேண்டும் என்று வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தை அடுத்து கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக அச்சுவேலி பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.
யாழ். அச்சுவேலி, ஆவரங்கால் பிரதான வீதியில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் கைக் குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.
பஸ் தரிப்பிடத்தில் நின்ற மக்கள் அங்கு கைக்குண்டு ஒன்று இருப்பதை அவதானித்து அச்சுவேலி பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில், இந்த கைக் குண்டை மீட்டுள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். (வ-106)

## மகாதேவா ஆச்சிரம சிறுவர் இல்ல படிப்பு மண்டபம் நாளை திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 27
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடக்கு மாகாண முகவர்களின் உதவியுடன் கிளிநொச்சி மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்தில் புனரமைக்கப்பட்ட படிப்பு மண்டபம் நாளை சனிக்கிழமை திறந்து வைக்கப்படும்.
நிகழ்வில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை முகாமையாளர் எஸ்.எம்.சி.பீ.சமரக்கோன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு படிப்பு மண்டபத்தை திறந்து வைப்பார்.
கூட்டுத்தாபனத்தின் வடக்கு பிராந்திய முகாமையாளர் எஸ்.சிவதரன், முன்னாள் வடக்கு பிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன், கரைச்சி பிரதேச சபைத் தலைவர் வி.குகராசா, கரைச்சி பிரதேச செயலர் ஜி.நாகேஸ்வரன், கட்டளைத் தளபதி கேணல் சுஜித் குலசேகர ஆகி யோர் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (வ-17)


# டெங்குக் கட்டுப்பாட்டு பணிகளை முன்னெடுக்குக

## உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூன் 27
நாட்டில் டெங்குக் காய்ச்சலின் தாக்கம் அதிகரித்துள்ளதால் டெங்கு கட்டுப்பாட்டு வேலைத் திட்டங்களைச் செயற்படுத்துமாறு உள்ளூ ராட்சி மாகாண சபைகள் அமைச்சு சகல உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கும் மிகவும் அவசர கடிதம் மூலம் அறிவித்துள்ளது.
டெங்கு மீண்டும் பரவுவதைத் தடுப்பதற்கான செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி டெங்கு நுளம்பு உருவாகாமல் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவித்துள்ளார்.

**பற்றைகளாகக் காணப்படும் காணிகளைத் துப்புரவாக்குமாறு காணி உரிமையாளர்களுக்கு காலக்கெடு வழங்கியுள்ளது**

பாடசாலைகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றில் உள்ளூராட்சி பிரிவுகள் மூலமாகத் துப்புரவு ஏற்பாட்டு வேலைத்திட்டங்களை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.
சாவகச்சேரி நகரசபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவை ஏற்கனவே டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையாக சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பற்றைகளாகக் காணப்படும் காணிகளைத் துப்புரவாக்குமாறு காணி உரிமையாளர்களுக்கு காலக்கெடு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-9)



கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் இராஜ கோபுரத்தின் கட்டுமானப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (வ-17)

# திருட்டுப் பொருள்கள் எதேச்சையாகச் சிக்கின

## சந்தேகநபரை தேடிச் சென்றவேளை

தென்மராட்சி, ஜூன் 27
திருட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பாக சந்தேக நபரைக் கைது செய்யச் சென்ற பொலிஸார் மற்றொரு திருட்டுடன் தொடர்புடைய பொருள்களைக் கைப்பற்றியதுடன் நபரையும் கைது செய்தனர்.
இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது:-
சரசாலைப் பகுதியில் கடந்த மார்ச் மாதம் வீட்டில் தனித்திருந்த வயோதிபப் பெண்ணொருவரைக் கட்டி வைத்துவிட்டு, அங்கிருந்து ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் அங்கிருந்தகையடக்கத்தொலைபேசி, சிடி பிளேயர் உட்பட பல பெறுமதிமிக்க பொருள்களையும் திருடிச் சென்றிருந்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வந்த வேளையில் நேற்றுமுன்தினம் கிடைத்த இரகசியத் தகவலொன்றையடுத்து ஒரு இடத்துக்குச் சென்று ஒருவரைக்கைது செய்ததுடன்திருட்டுப்போன கையடக்கத் தொலைபேசி மற்றும் சீடி பிளேயர்ஆகியவற்றைமீட்டனர். தங்க நகைகளுடன் அவரது சகோதரி தலைமறைவாகியுள்ளார்.
குறித்த வீட்டில் மேலும், சோதனைகளை மேற்கொண்ட வேளையில் அங்கு கடந்த ஜூலை மாதம் சாவகச்சேரி நகர்ப்பகுதியில் உள்ள தொலைபேசி விற்பனை நிலையத்தில் திருட்டுப்போன பொருள்களில் சிலவற்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.
இது தொடர்பாக தொலைபேசி விற்பனை நிலைய உரிமையாளர் வரவழைக்கப்பட்டு பரிசோதித்த போது கடையிலிருந்து திருட்டுப்போன தொலைபேசிகளின் இலக்கங்கள் ஒத்துப்போனமை உறுதியாகியுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே விளக்கமறியலில் இருவர் உள்ள நிலையில் குறித்த நபரைப் பொலிஸார் நேற்று முன்தினம் இரவு நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர். குறிப்பிட்ட நபரை எதிர் வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.(வ-9)

# பிரதேச சபையினால் பற்றைகள் துப்புரவு

தென்மராட்சி, ஜூன் 27
கைதடி எரிபொருள் நிலையத்துக்கு முன்பாக காணப்பட்ட பற்றைகள் சாவகச்சேரி பிரதேச சபையினரால் நேற்று முன்தினம் புதன்கிழமை துப்புரவு செய்யப்பட்டுள்ளது.
மறைவிடமாகக் காணப்பட்ட பற்றைகளுக்கு அருகில் இருந்து மது அருந்தி விட்டு வீதியில் செல்வோர் மீது தகாத வார்த்தைகளைப் பிரயோகிப்போர் தொடர்பாக பிரதேச மக்கள் பிரதேச சபையிடம் முறையிட்டதை அடுத்து உள்ளூராட்சி வார நிகழ்வாக பற்றையின் ஒரு பகுதியை வெட்டித் துப்புரவு செய்துள்ளனர்.
அண்மையில் கைதடி சந்தியருகே மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் குறித்த பற்றைக்குள் மறைந்திருந்த இருவரை வாளால் வெட்டிக் காயப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (வ-9)

## இணையத்தில் பாடவிதானங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 27
பட்டதாரி உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் பரீட்சைக்கான பாட விதானங்களும், நேர அட்டவணையும் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (WWW.GSGUNP.ORG) என்னும் இணையத்தளத்தில் அவற்றைப் பார்வையிட்டு ஆவணப்படுத்தி பரீட்சைக்குத் தோற்றுமாறு வடமாகாண பட்டதாரி உத்தியோகத்தர்கள் தொழிற் சங்க செயலாளர் கே. எஸ். மயூரன் அறிவித்துள்ளார். (ஓ-9)

# மயக்க மருந்து விசிறி வீட்டில் திருட்டு

நள்ளிரவு வேளை வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் வீட்டிலிருந்தோர் மீது மயக்க மருந்தை விசிறி அவர்களை மயக்கமடைய வைத்து விட்டு பெருந்தொகைப் பணத்தையும் நகைகளையும் அபகரித்துச் சென்ற சம்பவம் கைதடிச் சந்தியில் உள்ள தங்கராசா என்பவரின் வீட்டில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது:-
குறித்த வீட்டிலுள்ளோர் இரவு உணவின் பின்னர் தாயும் பிள்ளையும் வீட்டினுள்ளும் தந்தை வெளி விறாந்தையிலும் உறங்கியுள்ளனர்.
அவ்வேளை அங்கு வந்த திருடர்கள் கணவன் மீது மயக்க மருந்தை விசிறி அவரை மயக்கமுறச் செய்துள்ளனர்.
வீட்டின் திறப்பை எடுத்து வீட்டினுள்ளே சென்று ஏனையவர் மீதும் மயக்க மருந்தை விசிறி ஒரு லட்சம் ரூபா பணம் 10 பவுண் நகை என்பவற்றை அபகரித் துச் சென்றுள்ளனர்.
காலை மயக்கம் தெளிந்து எழுந்த பின்பே திருட்டுச் சம்பவம் குறித்து தெரியவந் துள்ளது. சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸில் முறையிடப்பட்டது. மேற்படி திருட்டு மேற்கொள்ளப்பட்ட முறையை பார்க்கும் போது வீட்டாருடன் நன்கு பழகுவோரே திருட்டை மேற்கொண்டிருக்கலாமென வீட் டார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். (வ-288)

# குத்தகைப் பணத்துடன் தண்டமும் சேர்த்து அறவிட முடிவு

வலி.தென்மேற்கு, ஜூன் 27
வலி.தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள பொதுச் சந்தைகளுக்குரிய குத்தகைப் பணத்தை உரிய காலத்துக்குள் செலுத்தத் தவறுபவர்கள் மீது தண்டப் பணமும் சேர்த்து அறிவிடப்படவுள்ளது. இதற்கான தீர்மானம் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
பிரதேச சபைக்குச் சொந்தமான சந்தைகளைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் ஒரு வருடத்துக்குரிய குத்தகைப் பணத்தை ஒவ்வொரு கந்தாயமாகப் பிரித்து நான்கு மாதங்களுக்கு ஒரு தடவை பிரதேச சபைக்குச் செலுத்த வேண்டும். சந்தைகளைக் குத்தகைக்கு எடுத்த சிலர் சந்தைகளில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி அவற்றை நிவர்த்தி செய்து தருமாறு கூறி கந்தாயத்துக்குரிய பணத்தைச் செலுத்தாமல் காலம் கடத்தி வருகிறார்கள். சம்பந்தப்பட்டவர்களின் செயற்பாடு குறித்து பிரதேச சபையின் நிதிக் குழுவில் ஆராயப்பட்டு வழங்கப் பட்ட பரிந்துரைகளுக்கமையவும் ஒவ் வொரு கந்தாயத்துக்குரிய குத்தகைப் பணத்தை குறிப்பிட்ட காலத்துக்குள் செலுத்தத் தவறுபவர்கள் மீது வட்டியுடன் சேர்த்து தண்டமாக அறவிட வேண்டுமென்று பொதுச்சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தத் தீர்மானத்துக்கு அமைய வட்டியுடன் சேர்த்துக் குத்தகைப் பணம் அறவிடுவதற்கான ஒழுங்குகளைப் பிரதேசசபை மேற்கொண்டுள்ளது. (ஓ-115)

## ஆயுதங்களுடன் தகரப்பெட்டி மீட்பு

தென்மராட்சி, ஜூன் 27
தோட்டம் செய்வதற்காக விவசாய நிலத்தை பண்படுத்திய வேளையில் ஆயுதங்களுடன் தகரப் பெட்டி ஒன்று மீட்கப்பட்டது.
அதைத் திறந்து பார்த்தபோது 6 கிரனேட்டுக்கள், மகசின், ரவைகள் போன்றவை கிறீஸ் பூசப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கெற்பேலி மேற்கில் இடம்பெற்றது. இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து அங்கு வந்த பொலிஸார் அந்த ஆயுதங்களை எடுத்துச்சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## பருவகாலச் சீட்டு வழங்கல்

இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு) முல்லைத்தீவு சாலையில் 24 வருடங்களின் பின்னர் மீண்டும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களுக்கான பருவகாலச் சீட்டு வழங்கல் இன்றிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது. (வ)

நுளம்புகளின் தொல்லைக்கு ஒரே தீர்வு.....
சொல்பெக் EW 050

ரூ.600/-
Hayleys AGRICULTURE
ஹேலீஸ் அக்றிகல்ச்சர் சென்ரர்
87, பலாலி வீதி, கோண்டாவில், யாழ்ப்பாணம்
தொ.பே: 021 2053997/ 0777288337

# மருத்துவர் மீது நடவடிக்கை மத்திய அரசே எடுக்க முடியும்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜூன் 27

வைத்தியர்களை இடமாற்றுவதோ அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதோ மத்திய அரசாலேயே முடியும். மாகாண சுகாதார அமைச்சால் எதுவும் செய்ய முடியாது - இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம்.

வடக்கு மாகாண சபையில் உறுப்பினர்களால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள நிலையில் தொடர்ந்தும் இவர் தொடர்பிலான, குற்றச்சாட்டுக்கள் மக்கள் பிரதிநிதி என்ற வகையில் எனக்கு மக்களால் முன்வைக்கப்படுகின்றன.

எனவே குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இவர் மீது விசாரணை மேற்கொள்ளப்படுகின்றதா? அவ்வாறாயின் விசாரணையின் தற்போதைய நிலை என்ன? என்பது பற்றியும், விசாரணை முடிவுற்றதாயின் அவர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பிலும் சுகாதார அமைச்சரிடம், வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் கேள்வி எழுப்பி யிருந்தார்.

அதற்குப் பதிலளித்த சுகாதார அமைச்சர்,

"மாகாண மட்டத்தில் எமது அமைச்சினால் - திணைக்களத்தினால் அவர் மீது விசாரணை மேற்கொள் ளப்பட்டது. இருப்பினும் வைத் தியர்களுக்கான நியமன அதிகாரம் மத்திய சுகாதார அமைச்சின் செயலாளருக்கே உண்டு. எனவே அவருக்கு எமது விசாரணை அறிக்கையை அனுப்பியுள்ளோம். அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் குறித்த பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரினாலும் தனியானதொரு விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பிலான அறிக்கை, பிரதம செயலாளர் ஊடாக எமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது"- என்று தெரிவித்தார்.

இதேவேளை, மற்றுமொரு ஆளுங்கட்சி உறுப்பினரான ஞா.குணசீலன், மன்னார் மாவட்டத்தில் குறித்த ஒரு வைத்திய அதிகாரியை மக்கள் மாற்றுமாறு கோரிக்கை விடுத்தும் சுகாதார அமைச்சர் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்று குற்றஞ்சாட்டினார்.

அதன் போது பதிலளித்த சுகாதார அமைச்சர், குறித்த வைத்திய அதிகாரியை இடமாற்றுவதற்கு தன்னால் அனுப்பப்பட்ட கடிதத்தை சபையில் காண்பித்தார். அத்துடன் குறித்த வைத்தியர் இடமாற்றத்தை எதிர்த்து மனுத்தாக்கல் செய்துள்ளார். மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரிடம் அவர் தாக்கல் செய்த மனுவுக்கு இதுவரை பதிலளிக்கப்படவில்லை. இதனால் அவரையும் இடமாற்றம் செய்வதற்கு மத்திய சுகாதார அமைச்சின் செயலாளரின் ஒப்புதல் தேவை என்று குறிப்பிட்டார். (ற-5)



## தடையையும் மீறி நாடகம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ். பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் பிரிவு மாணவர்களால் நேற்று நடத்தப்பட இருந்த நாடகத்தை நிறுத்துமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் விடுக் கப்பட்டிருந்தபோதும், நாடகம் நடத்துவது தமது உரிமை என்று தெரிவித்த மாணவர்கள் திட்டமிட்டவாறு அதனை நடத்தி முடித்துள்ளனர்.

மாணவர்கள் குறித்த நாடகத்தை நடத்துவதற்கான அனுமதியை நேற்று முன்தினமே பெற்றிருந்தனர். ஆனால் நேற்று முற்பகல் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. குறித்த நாடகம் பல்கலை நிர்வாகத்துக்கு எதிரானதாக அமைந்துள்ளது என்றும் - அரசியல் கலந்துள்ளது என்றும் தெரிவித்தே நாடகத்தை நடத்த வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஆயினும் அவற்றை மறுத்துள்ள மாணவர்கள் திட்டமிட்டவாறு நாடகத்தை நடத்தி முடித்துள்ளனர். (ற-4)

## ஆசிரியர் சங்க மாநாடு இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 27

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் 57 ஆவது பேராளர் மாநாடு காலி விளையாட்டு மண்டபத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது. போலியான கல்வி அபிவிருத்திக்காக பிள்ளைகளையும் ஆசிரியர்களையும் அதிபர்களையும் அழுத்தத்துக்கு உள்ளாக்காதே எனும் தொனிப்பொருளில் இந்த மாநாடு இடம்பெறுகிறது. அத்துடன் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இன்று இடம் பெறவுள்ளது (ற-4)

## பதிவு சஞ்சிகை இன்று வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்.பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் பிரிவின் நான்காம் வருட மாணவர்களின் ஏற்பாட்டில் 'பதிவு' சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதனும் சிறப்பு விருந்தினராக பல்கலையின் தமிழ்த்துறைத் தலைவரும் ஊடகக் கற்கைகள் பிரிவு இணைப்பாளருமான பேராசிரியர் கி.விசாகரூபனும் கௌரவ விருந்தினராக சிரேஷ்ட மாணவ ஆலோசகரும் வரலாற்றுத் தறைத் தலைவருமான பேராசிரியர் ப.புஸ்பரட்ணமும் கலந்து கொள்ளவுள்ளனர். பல்கலையின் சந்தைப்படுத்தல் துறை தலைவர் இ.ரட்ணம் சஞ்சிகையை மதிப்புரை செய்வார். (ற-4)

## கந்தசுவாமி கோயில் கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 27

அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு ஆரம்பக் கிரியைகள் நாளை காலை 5.41 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.(ற)

## விபத்தில் சென்.ஜோன்ஸ் மாணவன் சாவு



யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற விபத்தொன்றில் அந்தப் பாடசாலையின் மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளான். மாணவன் மீது வீதியில் சென்ற மினி பஸ் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. சுன்னாகத்தைச் சேர்ந்த 16 வயதுடைய அலோசியஸ் வின்சன் மனோராஸ் அன்ரன் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்தவனாவான்.

குறித்த மாணவன் க.பொ.த. சாதரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ளதால், பாடசாலை முடிந்த பின்னர் நடைபெற்ற விசேட வகுப்பில் கலந்துகொண்டு விட்டு வெளியேவந்து வீதியைக் கடக்க முற்பட்டபோதே இந்த விபத்து நடந்தது என்று கல்லூரி ஆசிரியர் ஒருவர் கூறுகின்றார்.

விபத்தில் தலையில் படுகாயமடைந்த மாணவன் உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். ஆயினும் சிகிச்சை பயனளிக்காது அங்கு உயிரிழந்தார்.

அதேவேளை, பஸ்ஸுக்காகக் காத்திருந்த மாணவன், கச்சேரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸைக் கண்டதும், பஸ்ஸைப் பின் தொடர்ந்து நடுவீதியால் சென்று, பஸ்ஸின் முன்பக்கமாகச் சென்று நிறுத்தினார் என்றும், அதன் போது வேகக்கட்டுப்பாட்டினை இழந்த பஸ் அவர் மீது மோதியது என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

தற்போது குறித்த பஸ்ஸின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ற-4,106)

## புனரமைப்புப் பணிகள் அளுத்கமவில் ஆரம்பம்



கொழும்பு, ஜூன் 27

அளுத்கம மற்றும் பேருவளை ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட அமைதியின்மையால் சேதமடைந்த வீடுகள் மற்றும் கட்டடங்களை புனரமைக்கும் பணிகள் நாளை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதற்காக இராணுவம், விமானப்படை மற்றும் கடற்படை உறுப்பினர்கள் அடங்கிய 07 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன என்று மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரகோன் குறிப்பிட்டார். ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய, இதற்காக 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலொன்றில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டதாக அமைச்சர் கூறினார். சேதமடைந்த கட்டடங்களை புனரமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் குணரத்ன வீரகோன் மேலும் கூறினார். (ற-5)



தாதியர்களுக்கு பிரசவம் தொடர்பான பயிற்சி நெறிகள் வழங்குவதை நிறுத்துமாறு கோரியும் பேராதனை வைத்தியசாலையில் சக உத்தியோகத்தர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டித்தும் அரச குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர்கள் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ற-4)

## ஆளணியை நிரப்ப அனுமதிக்காவிடில் வடக்கு மாகாண சபை முன் போராட்டம்

### யாழ். மாநகர சபை முதல்வர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், ஜூன் 27

மாநகர சபையில் ஆளணி நிரப்புவதற்கு மாகாண சபையின் அனுமதி தேவை. நிரந்தர நியமனங்கள் வழங்குவதற்குரிய அனுமதியை வழங்காவிட்டால் மாகாண சபைக்கு முன்னால் நின்று போராட்டம் நடத்துவதற்கு முடிவு எடுக்கப்படும் என்று யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையில் தற்காலிக தொழிலாளர்களாக கடமையாற்றியவர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றது. இதில் ஏற்கனவே நீண்டகாலமாகப் பணிபுரிந்த பணியாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குதவற்கு சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்கட்சி உறுப்பினர் சு.சோதிலிங்கம் கோரிக்கை முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்த மாநகர சபை முதல்வர்,

நியமனங்கள் சபையில் நியதிகளுக்கு அமைவாகவே வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் குறிக்கப்பட்ட ஆளணிகளையே அந்தந்த துறைகளில் நியமிக்க வேண்டும் என்று மாகாண சபை தெரிவித்துள்ளது. உறுப்பினரின் கோரிக்கையை மாகாண சபைக்கு அனுப்பி வைப்போம். சபை அதற்கு அனுமதி வழங்காவிட்டால் வட மாகாண சபைக்கு முன்னால் போராட்டம் நடத்த சபை தீர்மானிக்கும்"- என்று தெரிவித்துள்ளார். (ற-14)

# பொருளாதாரச் சுமையை மறைக்க இனவாதத்தை தூண்டுகிறது அரசு

## ஜே.வி.பி கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு.ஜூன் 27

நாட்டில் வாழும் ஒரு குடும்பத்தின் மாதாந்த செலவு 50 ஆயிரம் ரூபாவையும் தாண்டியுள்ளதுடன் அரசு இந்த பொருளாதார பிரச்சினையை மூடி மறைப்பதற்காக நாட்டுக்குள் இனவாதத்தை தூண்டி வருகிறது என்று ஜே.வி.பி கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் கே.டி. லால்காந்த தெரிவித்தார்.



லால்காந்த

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான்கு பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றின் மாதச் செலவு 50 ஆயிரத்து 260 ரூபா வரை உயர்ந்துள்ளது. இவ்வாறான நிலையில், அரசு

**தற்போது இந்த செலவு 50 ஆயிரம் ரூபாவையும் தாண்டியுள்ளது.**

சம்பளத்தை அதிகரித்து நாட்டில் சிறந்த பொருளாதார நிலைமையை உருவாக்குவதற்குப் பதிலாக நாட்டில் இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டி விட்டு பிரச்சினையில் இருந்து தப்பிச் செல்கிறது.

2005 ஆம் ஆண்டு ராஜபக்ஷ அரசு இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் போது, நான்கு பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றின் மாதாந்தச் செலவு 25 ஆயிரத்து 344 ரூபாவாக இருந்தது.

தற்போது இந்தச் செலவு 50 ஆயிரம் ரூபாவையும் தாண்டியுள்ளது. 2006 ஆம் ஆண்டுக்கு பின்னர், அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களின் சம்பளம் 5 சதத்தால் கூட அதிகரிக்கப்படவில்லை -என்றார். (ச)

## வன்முறை சம்பவ அறிக்கை கையளிப்பு

கொழும்பு.ஜூன் 27


பேருவளை, அளுத்கம பகுதிகளில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொண்ட விசாரணை அறிக்கை அடுத்தவாரம் அரசிடம் கையளிக்கப்படஉள்ளது.

இந்த அறிக்கையில் தேசிய, மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் குறித்தும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று மனித உரிமை ஆணைக் குழு, ஆணையாளர் பிரதீபா மஹாநாம தெரிவித்தார்.

மேல் மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர், உயர் பொலிஸ் அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள், சிவில் அமைப்புகள். மதத் தலைவர்கள், காயமடைந்தோர், பாதிக்கப்பட்டோர் என சகல தரப்பினரையும் சந்தித்துச் சாட்சிகளும் தகவல்களும் பெறப்பட்டன என்று அவர் கூறினார்.

அளுத்கம, தர்காநகர் பகுதியில் மோதல்கள் ஆரம்பமான அன்றே மனித உரிமை ஆணைக்குழு பிரதிநிதிகள் அந்தப் பகுதிக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் 3 நாள்கள் காலை முதல் இரவு வரை தகவல்களை நேரில் பெற்றுள்ளனர்.

அதனடிப்படையில் அறிக்கை தயாரிக்கப்பட்டு தேவையான பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்தார். இனியும் இவ்வாறான அசம்பாவிதங்கள் நடைபெறாதிருக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக அவர் கூறினார். (ச)



மாலைதீவுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும்,அவரது பாரியாரான முதற்பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷவும் நேற்றுமுன்தினம் மாலைதீவு விமான நிலையத்தைச் சென்றடைந்தனர். அவர்களை மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லாஹ் யமீன் அப்துல் கையூம், அவரது பாரியாரான பாத்திமா இப்றாஹீம் ஆகியோர் வரவேற்றபோது...

## பல்கலைப் பேராசிரியர்க்ள் போராட்டம் நடத்தத் திட்டம்

கொழும்பு.ஜூன் 27

பல்கலைக்கழக பேராசிரியர்கள் போராட்டம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளனர். அரசிடம் தம்மால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு உரிய பதிலளிக்கப்படவில்லை என்ற காரணத்தால் இவ்வாறு போராட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தொழிற்சங்க நடவடிக்கை எடுப்பது தொடர்பில் பல்கலைக் கழக பேராசிரியர் ஒன்றிய தொழிற்சங்கம் கூட்டமொன்றை எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை நடத்த உள்ளது.

கல்வித்துறைக்கு மொத்த தேசிய உற்பத்தியில் 6சத வீதம் ஒதுக்கீடு செய்தல், ஆய்வுப் பணிகளுக்கான கொடுப்பனவுகளுக்கு நிபந்தனை விதிக்கக் கூடாது, தனியார் பல்கலைக் கழகங்களை அமைப்பதற்கு உயர்கல்வி அமைச்சு வழங்கிய அனுமதியை மீளப் பெறுதல் உட்பட சில கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக் கழக பேராசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். (ச)

## காலிமுகத் திடலில் தொழுகை நடத்த அனுமதிக்க வேண்டும்

### அசாத் சாலி கோரிக்கை

கொழும்பு.ஜூன் 27

நாட்டில் வாழும் முஸ்லிம் மக்கள் காலிமுகத் திடலில் தொழுகையை நடத்த அனுமதி வழங்கப்பட வேண்டும் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான அசாத் சாலி கோரிக்கை விடுத்துள்ளார்



அசாத் சாலி

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அளுத்கம, பேருவளை மற்றும் தர்கா நகர்ப் பகுதிகளில் ஏற்பட்ட மோதலுடன் சம்பந்தப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள பொதுபல சேனாவுக்கு எதிராக இதுவரை சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

பொதுபல சேனா அமைப்பு கண்டிநாத ஆலயத்தில் மனவுறுதி பூசையை நடத்தியுள்ளது. இந்தப் பூசைக்கு அனுமதி வழங்க பொலிஸார் மறுத்த நிலையில், பாதுகாப்பு அமைச்சு அதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தாக்த் தகவல்கள் வெளியாகி இருந்தன. -என்றார். (ச)

## ஆஸி. வழங்கிய படகு கொழும்புத் துறைமுகத்தில்

கொழும்பு.ஜூன் 27

இலங்கைக் கடல் எல்லைப் பாதுகாப்புக்கென இலங்கை கடற்படைக்கு ஆஸ்திரேலியா அன்பளிப்புச் செய்த இரண்டாவது கண்காணிப்புப் படகு நேற்றுமுன்தினம் புதன் கிழமை காலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

பி 351 ரகத்தைச் சேர்ந்த இந்தப் படகு 38.2 மீற்றர் நீளம் கொண்டது.



துறைமுகத்தில் தரித்து நிற்கும் படகு

இலங்கையின் கடற்பிரதேசங்களைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளுக்காக கடற்படையினர் குறித்த படகைப் பயன்படுத்தவுள்ளனர்.

ஆஸ்திரேலியாவுக்கு சட்ட விரோதமாக படகுகளில் செல்வோரைத் தடுக்கும் நடவடிக்கைகளில் இலங்கைக் கடற்படை ஆற்றும் பணிகளைக் கௌரவிக்கும் முகமாகவே இந்தப் படகு இலங்கைக்கு வழங்கப் பட்டுள்ளது.

சகல வசதிகளும் கொண்ட இது போன்றதோர் படகொன்றை கடந்த ஏப்ரல் மாதமும் ஆஸ்திரேலிய அரசு இலங்கைக்கு அன்பளிப்புச் செய்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (ச)

## சட்டத்தின் ஆட்சியை உரிய முறையில் செயற்படுத்த வேண்டியது அவசியம்

### முஸ்லிம்கள் மீதான வன்செயல் குறித்து பிரிட்டன் தூதரிடம் ஹக்கீம் சுட்டிக்காட்டு

கொழும்பு.ஜூன் 27

சட்டத்தையும், ஒழுங்கையும் சரிவர நிலைநாட்டுவதிலும், சட்டத்தின் ஆட்சியை உரிய முறையில் செயற்படுத்துவதிலும் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை இந்த நாட்டின் சிறுபான்மை சமூகத்தினரான முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்டுவரும் இனவாத வன்செயல்கள் வெகுவாக உணர்த்துகின்றன என்று நீதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தம்மைச் சந்தித்த பிரிட்டிஷ் தூதுவர் ஜோன் ரெங்கினிடம் நேரில் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் தூதுவர் ஜோன் ரெங்கின், அமைச்சர் ஹக்கீமை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 'தாருஸ்ஸலாம்' தலைமையகத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் சந்தித்து கலந்துரையாடினார்.

போர் முடிவுக்கு கொண்டுவரப் பட்டு இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்துக்கான முயற்சிகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டு வரும் இந்தக் காலகட்டத்தில் தீவிரவாத அமைப்புகள் சில இந்த நாட்டு முஸ்லிம்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்துவதை மிதவாத பௌத்தர்கள் கூட ஆதரிப்பதில்லை என்று அமைச்சர் ஹக்கீம் கூறினார்.

இலங்கை அரசைக் காப்பாற்றுவதற்காக தாம் ஜெனிவாவுக்குச் சென்றுதமது பங்களிப்பை உரிய விதத்தில் செய்ததாகவும் அமைச்சர் கூறினார்.



பிரிட் டிஷ் தூதருடன் ஹக்கீம் கலந்துரையாடியபோது...

அடிப்படைவாத முஸ்லிம்களின் செயற்பாடுகள் இங்கு அதிகரித்து வருவதாகக் கூறப்படுவதற்குக் காரணம் இஸ்லாத்தின் மீதான பீதியேயாகும்.

அவ்வாறு கூறப்படுவதில் உண்மைத்தன்மை இருக்குமானால், போரின் பின்னர் மும்மடங்காகியுள்ள உளவுப் பிரிவினரால் அத்தகையோரைக் கண்டுபிடிப்பது பெரிய விடயமாக இருந்திருக்காது என்று அமைச்சர் ஹக்கீம் மேலும் தெரிவித்தார். (ச-சி)

# கதிர்காமம் முருகனுக்கு கிழக்கில் பஸ் சேவைகள்

## நாளை முதல் 13 ஆம் திகதி வரை

களுவாஞ்சிகுடி.ஜூன் 27

நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ள கதிர்காம முருகன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நாளை முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை கதிர்காமத்துக்கான விசேட பஸ் சேவை கிழக்குப் பிராந்திய அனைத்துச் சாலைகளிலிருந்தும் நடத்தப்படும் என்று கிழக்குப் பிராந்திய செயலாற்றுப் பணிப்பாளர் செ.கனகசுந்தரம் தெரிவித்தார்.

கிழக்கின் எந்தச் சாலையிலிருந்தும் பிரயாணிகள் சாலை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு எந்த நேரமும் இந்த விசேட பஸ் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அவர் கூறினார்.

கதிர்காமத்துக்கான இருவழிப் பயணத்துக்கான சாதாரண கட்டணங்களை முழுமையாகச் செலுத்துமிடத்து மட்டுமே இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்ளலாம். இது தவிர வழக்கமான கதிர்காமத்துக்கான பஸ் சேவைகளும் இடம்பெறும் என்று அவர் தெரிவித்தார்.

நாளை சனிக்கிழமை தொடக்கம் கிழக்குப் பிராந்தியத்துக்கான கரும பீடம் ஒன்று கதிர்காமம் பஸ் நிலையத்தில் திறந்து வைக்கப்படும் என்று அவர் கூறினார். இந்தக் கரும பீடமும் அடுத்த மாதம் 13 ஆம் திகதிவரை திறந்திருக்கும்.

இந்தக் கரும பீடம் மூலம் ஆசனப்பதிவு, பஸ்சேவை ஒழுங்கு செய்தல் என்பவற்றை மேற்கொள்ள முடியும் என்று அவர் கூறினார். (ச-32)



மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் ஏற்பாட்டில் தேசிய போசாக்கு மாதத்தை முன்னிட்டு பாட்டாளிபுரம் கிராமத்தில் போசாக்குத் தொடர்பான விழிப்புணர்வு நடை பவனியொன்று இடம்பெற்றது . இந்த நிகழ்வில் பாட்டாளி புரம் பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டனர். (ச-40)

# யோகேஸ்வரன் எம்.பிக்கு எதிராக விசமப் பரப்புரை

## கண்டிக்கிறது பத்திரகாளி அம்மன் ஆலய நிர்வாகம்

மட்டக்களப்பு,ஜூன் 27

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனுக்கு எதிராக விஷமிகள் சிலர் பரப்புரை செய்து வருகின்றனர் என்று வாழைச்சேனை, புதுக்குடியிருப்பு பத்திரகாளி அம்மன் ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் புதுக்குடியிருப்பு பத்திரகாளி அம்மன் ஆலய நிர்வாகத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றார் என்று குற்றஞ்சாட்டி வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரம் குறித்தே ஆலயநிர்வாகம் இவ்வாறு கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்ற ஆலய வருடாந்தப் பொதுக் கூட்டத்தின்போது நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் இரண்டாவது தடவையாகவும் புதுக்குடியிருப்பு பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

எனினும், எமது ஆலய வளர்ச்சியில் பெறாமை கொண்ட சிலர் அதனைக் கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

அவரை இழிவு படுத்தும் விதத்தில் துண்டுப் பிரசுரங்களை சிலர் வெளியிட்டு வருகின்றனர் என்று நிர்வாகம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-32)

# வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் மஹிந்த அரசு

## பாலமுனையில் ரில்வின் சில்வா காட்டம்

மட்டக்களப்பு.ஜூன் 27

அளுத்கம, தர்காநகர் பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் பின்னணியில் அரசே உள்ளது. இந்த நாட்டில் இனவாதத்தை உருவாக்கி இனங்களை மோத விடுகின்ற வேலையை ராஜபக்ஷ குடும்பம் மேற்கொண்டு வருகின்றது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.



அலுவலகத்தை ரில்வின் சில்வா திறந்து வைத்தபோது..

மக்கள் விடுதலை முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகம் பாலமுனை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அளுத்கம, தர்கா நகர் பகுதிகளில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு முழுப் பொறுப்பையும் அரசே ஏற்க வேண்டும். இனங்களை மோதவிட்டு அதனூடாக அரசியல் நடத்தும் வேலைகளையே இந்த அரசு செய்து வருகின்றது.

ஊழல், மோசடி, வன்முறை என்பவற்றை மேற்கொள்ளும் இந்த அரசுக்குத்தான் அமைச்சர்களான ஹக்கீம், றிசாட் பதியுதீன் போன்ற பலர் இன்று ஆதரவளிக்கின்றனர்.

இன்று மக்கள் மாற்றத்தை நோக்கி சென்று கொண்டிருக்கின்றனர். மக்கள் விடுதலை முன்னணியின் பக்கம் மக்கள் நாளாந்தம் வந்துகொண்டிருக்கின்றனர்.

இனவாத, மதவாத அடிப்படைவாதிகளால் இழைக்கப்படும் துரோகத்தை வளர்க்கும் பொறியில் மக்கள் சிக்கி விடக்கூடாது.

பொறுமையாகவும் அமைதியாகவும் பொறுப்புடனும் செயற்பட வேண்டும்.

சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற வேறுபாட்டுக்கு அப்பால் தேசிய ஒற்றுமைக்காக ஒன்று படவேண்டும்.

இலங்கையில் ஏழைகள் அதிகம் நிறைந்த மற்றும் வறுமை கூடிய முதலாவது மாகாணம் ஊவா மாகாணமாகும்.

இந்தப் பட்டியலில் இரண்டாமிடத்தை கிழக்கு மாகாணமும் மூன்றாமிடத்தை வடக்கு மாகாணமும் பெறுகின்றன- என்றார். (ச)

# வன்முறையை கண்டித்து கல்முனையில் பிரேரணை

அண்மையில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட இன வன்முறைகளைக் கண்டித்து கல்முனை மாநகர சபையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை மாநகரசபையின் மாதாந்த அமர்வு நேற்றுமுன்தினம் மாலை 4 மணிக்கு சபை முதல்வர் சட்டத்தரணி நிசாம் காரியப்பர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போதே அளுத்கம, தர்காநகர், பேருவளை, வெலிபன்ன மற்றும் நாட்டின் பல பாகங்களிலும் முஸ்லிம்கள் மீது நடத்தத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து கண்டனப் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணை தொடர்பாக முதல்வர் உரையாற்றியபோது:-

1983 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு ஏற்பட்ட நிலைபோன்று இன்று முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதுபோன்ற சம்பவங்கள் யாருக்கும் ஏற்படக்கூடாது. அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்தால் இதுபோன்ற கசப்பான சம்பவங்கள் ஏற்படாது. இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

நாட்டின் தலைவர் இங்கு இல்லாத வேளையில் முஸ்லிம்களுக்கு எதிராக இந்தச் செயற்பாடு இடம்பெற்றமை குறித்து மிகவும் நிதானமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது.

இன்னுமொரு இனத்தை நசுக்கும் நோக்குடன் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடும் பௌத்த சிங்கள இனவாதக் குழுக்களைத் தடை செய்ய அரசு முன் வர வேண்டும்- என்றார்.(ச)

31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
ஹெமி குகேந்திரன்

ஜனனம்
02.03.1994

மரணம்
28.05.2014

பூமியிலே வாழவென்று சாமி உன்னை அனுப்பிவைத்தான்
பாதியிலே போவாயென்று பாவி ஏன்ரா சொல்லவில்லை
பதினொரு வருடங்கள் நீ பிணியுடன் தானிருந்தாய்
அணியுடன் அன்னம் கூட நல்லதாய்க் கண்டிருக்காய்
மதி உள்ள பிள்ளை ஐயா விதி உன்னை விடவில்லை
சதிசெய்து சிரித்ததுபோல் புதைகுழியில் ஏன் புகுந்தாய்
இருபது வயதினிலே இறைவனை நீ கண்டுவிட்டாய்
இருப்பவரின் கன்னங்களில் கண்ணீராய் வடியவிட்டாய்
இனியுனக்கு விண்ணுலகில் தனியதொரு இராட்சியந்தான்
இறைவனவன் அடியிருந்து இன்பமாய் வாழ்ந்திடுவாய்

எமது பெருஞ்செல்வம் ஹெமி அவர்களின் மீளாப்பிரிவால்
ஆழ்ந்த துயருற்றிருக்கும்

இல.64, டீ. ஸேரம் வீதி, கல்கிசை, கொழும்பு. (49335)(45.3.6)
குடும்பத்தினர்.

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
பொன்ரதம் விவேகானந்தன்



பிறப்பு
14 ★ 08 ★ 1948

இறப்பு
27 ★ 06 ★ 2010

பிரிந்து சென்று நான்கு ஆண்டுகள்
ஓடி விட்டன ஆனால் உம் நினைவு
எங்களை விட்டுப்பிரியவில்லை தினம் தினம்
ஒவ்வொரு செயலும் உம்மை நினைப்பூட்டுகிறது.

உம் நினைவால் தினம் வாடும்
கணவர் தி.விவேகானந்தன்
சகோதர, சகோதரிகள், மைத்துனர்கள்,
மருமக்கள், பேறாமக்கள், சித்தி.

சொர்ணவடலி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (49343)(4.3.6)

# அடிப்படைவாத குழுக்களின் செயற்பாட்டை நிறுத்துங்கள்

## அமைச்சர் விமல் வேண்டுகோள்

கொழும்பு.ஜூன் 27
நாட்டின் அமைதிக்கு தடை ஏற்படுத்தும் வகையில் செயற்படும் அடிப்படைவாத குழுக்களின் செயற்பாடுகளை நிறுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் விமல் வீரவன்ஸ வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு. கிராண்ட்பாஸ் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டுஉரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர்களுக்கு மக்கள் மத்தியில் பேதங்களை ஏற்படுத்தும் தேவையுள்ளது.

பேதங்களை ஏற்படுத்துவதன் மூலமே அவர்களின் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கம் நிறைவேறும்.

அளுத்கம, பேருவளை, தர்கா நகர் பகுதிகளில் அண்மையில் ஏற்பட்ட சம்பவங்களை



எடுத்துக் கொண்டால், சிலர் இந்த சம்பவங்களால் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இவ்வாறான சம்பவங்கள் நடப்பதை அவர்கள் விரும்புகின்றனர்.

சம்பவங்களை வைத்து அவர்கள் தமது அரசியல் நோக்கங்களைநிறைவேற்றிக்கொள்வர். இலங்கையில் ஏதாவது துரதிர்ஷ்வசமான சம்பவம் நடந்தவுடன் இலங்கை பிரச்சினைகள் நிறைந்த நாடு என்று நவநீதம்பிள்ளை அறிக்கை வெளியிடுகிறார்.

ஒரு புறம் பொதுபல சேனா என்ற அமைப்பு தீ மூட்டுகிறது. மறுபுறம் அடிப்படைவாத அமைப்புகள் தீ மூட்டுகின்றன - என்றார். (ச)

## சிந்தனை செய்

உலகில் உள்ள அனைத்தும் மூன்று பிரிவுகளுக்குள் அடங்கும். தானே அறியும் பொருள், அது பதி. அறிவித்தால் அறியும் பொருள், அது பசு. அறிவித்தாலும் அறியமாட்டாதது, பாசம். பதியினைப்போல் பசு, பாசம், அநாதி என்பார் திருமூலர். பதியாகிய இறைவன் இன்பவடிவினன். பசு ஆகிய ஆன்மா பாசத்தில் கட்டுண்டு துன்பத்தை அனுபவிக்கிறது. ஆன்மாக்களுக்கு அருள் வேண்டி இறைவன் அருட்திருமேனி தாங்கி தனு, கரண, புவன போகங்களைப் படைத்தருளினான். எழுவகைப் பிறப்பினுள்ளும் மனிதப் பிறவியே மேலானது. மனிதன் என்ற சொல்லுக்கு நினைப்பவன் என்று பொருள். விலங்குகள் சிந்திப்பதில்லை. ஆதலால் அவற்றின் வாழ்வு ஒரே மாதிரியாக அமைந்திருக்கின்றது. மனிதன் பல விதத்திலும் முன்னேறிவிட்டான். ஆனால்சமய நெறியில் முன்னேற்றம் காணப்படவில்லை? நான் யார்? இந்தப் பிறவி எதற்காகக் கிடைத்தது? போன்றவற்றைச் சிந்திக்க வேண்டும். கிடைத்த இந்தப் பிறவி மூலம் இம்மைக்கும் மறுமைக்கும் வேண்டிய நன்மைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதற்குச் சிந் திக்க வேண்டும். "சிந்திக்கிலேன் நின்று சேவிக்கிலேன்" என்பார் அருணகிரிநாதர். "சிவாய நம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயமொரு நாளும்இல்லை" என்பது ஔவைப்பிராட்டி வாக்கு. ஏனைய சிந்தனை பிறவிக்கு வித்தாகும் சிவ சிந்தனை. சிவநாம சிந்தனை ஒன்றே உய்தி தரவல்லது. சிறு தெய்வ வணக்கத்தை விடுத்துச் சிவனைச் சிந்தித்து வந்திப்பதே நன்மை பயக்கும்.

ஞானக்கதிர்

## விளையாட்டு விழா

அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூக நிலையத்தின் மழலைகள் பூங்கா சிறார்களின் விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு நிலைய மைதானத்தில் இடம்பெறும்.

நிலையத் தலைவர் மா.மெய்யழகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு நிலையத்தின் சுவீடன் நாட்டு இணைப்பாளர் வேதநாயகம் இளங்கோ முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார். (க-9)

# காரைதீவு பிரதேச சபை பட்ஜெட் நிறைவேற்றம்

## பொது பல சேனாவுக்கு எதிராகவும் கண்டனத் தீர்மானம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள காரைதீவு பிரதேச சபை வரலாற்றில் இருமுறை தோற்கடிக்கப்பட்டு தவிசாளரின் பதவி பறிபோகக் காரணமாயமைந்த 2014 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வருகைதந்த அனைத்து உறுப்பினர்களின் சம்மதத் துடன் ஏகமனதாக நிறை வேற்றப் பட்டது. மூன்றாவது தவிசாளரான யோகரெத்தினம் கோபிகாந்நேற்றுமுன் தினம் புதன் கிழமை தனது கன்னி அமர்வுக்குத் தலைமை தாங்கி பட் ஜெட்டைச் சமர்ப்பித்தார்.

சபையில் சமுகமளித்திருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப் பினர் சு.பாஸ்கரன், முஸ்லிம்காங் கிரஸைச் சேர்ந்தஎம்.எ. பாயிஸ்ஆகியோர் தவிசா ளரின் பட்ஜெட்டுக்கு ஆதரவும் வாழ்த்தும் தெரிவித்து உரை யாற்றினர்.

அதன்படி வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது தவிசாளர் உள்ளிட்ட அனைத்து உறுப்பினர்களும் கைகளை உயர்த்தி ஆதரவு தெரிவித்தனர்.

சபையில் பொதுபலசேனாவுக்கு எதிராகக் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. ஐ.நா.விசேட விசாரணைக்குழுவை நாட் டுக்குள் அனுமதிக்க வேண்டும் என்ற தீர் மானமும் நிறைவேற்றப்பட்டது. (ச)

# மறைந்த அமிர்தலிங்கத்துக்கு சிலை வைப்பதற்குத் தீர்மானம்

## வலி.மேற்கு பிரதேச சபையில்

யாழ்ப்பாணம். ஜூன் 27
மறைந்த முன்னாள் நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்துக்கு விரைவில் சிலை அமைக்கப்படவுள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபையின் ஆளும் தரப்பு, எதிரணி என இரு சாராரும் மறைந்த அமிர்தலிங்கத்துக்கு சிலை வைப்பதற்கு முழுமையான சம்மதம் தெரிவித்துள்ளனர். அத்துடன் இவ்விடயம் குறித்து சபையில் விசேட தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபை வளாகத்தினுள் சிலை வைப்பதற்கு அனுமதி கோரி வடக்கு முதல்வருக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆறு மாத காலமாக மறைந்த எதிர்க் கட்சித் தலைவருக்கு சிலை வைப்பது தொடர்பாக வலி.மேற்கு சபையினர் ஆராய்ந்து வந்ததுடன் மேற்படி சிலையை சபை வளாகத்தினுள் வைப்பதா? இல்லாவிடில் வலி. மேற்கு பிரதேச சபையின்வேறு பொருத்தமான இடங்களில் வைப் பதா? என்று ஆராயப்பட்டது.

இதன் முடிவில் சபை வளாகத்தினுள் வைப்பதற்கு பெரும்பாலான உறுப்பினர்கள் ஆதரவுதெரிவித்ததைத் தொடர்ந்து இந்தமுடிவுஎட்டப்பட்டது. (வ-41)

# குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கையை எடுங்கள்

## அமெரிக்காவின் பிரதி உதவி இராஜாங்கச் செயலர் தெரிவிப்பு

அளுத்கம வன்முறைகளுக்குப் பொறுப்பான குற்றவாளிகள் மீது உடனடி நடவடிக்கை எடுப்பதை இலங்கை அரசு உறுதிப்படுத்த வேண்டும் என்று தெற்காசியாவுக்கான அமெரிக்காவின் பிரதி உதவி இராஜாங்கச் செயலர் அப்துல் கெசாப் தெரிவித்தார்.

இலங்கை நிலைவரம் குறித்து ஆராயவென இலங்கை வந்து சென்ற அவர் தனது பயணம் தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே இவ்வாறு கூறினார். இது குறித்து அவர் மேலும் தெரி வித்ததாவது:-

இலங்கையில் அமைதி குழம்பிய சூழல் ஒன்றுக்குள் நான் அங்கு தங்கியிருந்தேன்.

அங்கு மதங்களுக்கிடையே குழப்பம் ஏற்பட்டிருந்தது.

ஆர்ப்பாட்டம், எதிர்ப்பு நடவடிக்கைகளால் தோன்றிய வன்செயல்கள் நடந்திருக்கின்றன. இந்தச் சம்பவங்கள் குறித்து இலங்கை அரசு பொறுப்பான விசாரணை நடத்தவேண்டும்-என்றார். (ச)





### காணி விற்பனைக்கு

அபூபக்கர் வீதி தொடக்கத்திலிருக்கும் இலவத்துறை என்று அழைக்கப்படும் 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 789 3125

(49116)
(12.3.6)

### தேவை

'ஹமடா 700' ஓவ்செற் அச்சு இயந்திரத்தை இயக்குவதில் முன் அனுபவமுள்ள மெசின் மைண்டர் தேவை. நேரில் வரவும்.

சரவணா அச்சகம்,
233, ஆஸ்பத்திரி வீதி, சத்திரச்சந்திக்கு அருகில்,
யாழ்ப்பாணம்.

(49363)
(12.3.6)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்




ஞானமுத்து ஜெபநேசன் -J.P.
(S.L.P.S-2-II,BED,Dip. in Management,
PGD Edu. Management)
அதிபர்- மு/இரணைப்பாலை
றோ.க.ம.வி.

கடந்த (25.06.2014) புதன்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் முன்னிலையில் மாவட்ட சமாதான நீதிவானாக எமது பாடசாலை அதிபர் மதிப்பிற்குரிய ஞா.ஜெபநேசன் அவர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவரை எமது பாடசாலைச் சமூகம் சார்பாகப் பாராட்டுவதோடு, எந்நாளும் சீரும் சிறப்புடனும் வாழ மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

என்றும் மன மகிழ்ந்து வாழ்த்தும்
ஆசிரியர் நலன்புரிசங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
மு/இரணைப்பாலை றோ.க.ம.வி.

(c.14806)
(453.6)

### கனடா ஜெயசாயி சூப்பர் சென்ரர்




இடம் மாற்றுவதை
முன்னிட்டு
15.06.2014 முதல்
இருப்பகற்றல்.
கொள்வனவு செய்யும்
அனைத்து விதமான
ஆடைகளையும் அதன்
விலையில் இருந்து
½ வாசி விலைக்கு
பெற்றுக் கொள்ளலாம்.
இல. 114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9396

### அனுமதியற்ற கட்டடங்கள்

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கட்டப்படும் கட்டடங்களிலும் மதில்களிலும் சில அனுமதி பெறப்படாமை அவதானிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அனுமதி பெறாமல் கட்டும் கட்டடங்களின் உரிமையாளரில் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளதென்பதை கட்டடங்கள் கட்டும் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

தவிசாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.

(சி.14804)
(45.6.3)

### After A/L மருந்தாளர் பாடநெறி Pharmacy Course (For External Pharmacist's Exam

இலவச கருத்தரங்கு

தகைமை: க.பொ.த.(உ/த)
கணித/விஞ்ஞான பாடத்தில் சித்தி.
இடம்: 70, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: 28.06.2014 மு.ப.9.00

தொடர்புகளுக்கு: 076 668 8287

05.07.2014 இல் ஆரம்பமாகும் புதிய மருந்தாளர் பாடநெறி தொடர்பான விரிவான ஆலோசனைகள் வழங்கப்படும்.

# சமய சந்நிதிகளில்...

தென்மராட்சி, ஜூன் 27
மீசாலை பன்றிக்கேணி முருகன் ஆலய திருவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 17 தினங்கள் இடம்பெறும். எதிர்வரும் 14 ஆம் திகதி கதிர்காமத் தீர்த்தத் திருவிழாவன்று தீர்த்தத் திருவிழா இடம்பெறும். பண்டிதர் து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் திருவிழா கிரியைகள் நடைபெறும். (ஒ-9)

* * *

சுன்னாகம், ஜூன் 27
சுன்னாகம் கந்தரோடை கொற்றன்கட்டு ஞான வைரவர் ஆலய வருடாந்த பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. வைரவப் பெருமானுக்கு விசேட பூஜைகள் நடைபெற்று வீதியுலா இடம்பெறும். (ஒ)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 27
யாழ். வண்ணை அங்குசபாசப்பிள்ளையார் (கீரிப்பிள்ளையார்) ஆலய தீர்த்தோற்சவம் இன்று நடைபெறவுள்ளது. காலை 9.30 மணிக்கு நடைபெறும் அபிஷேகத்தைத் தொடர்ந்து பெருமான் தீர்த்தமாடுதல் இடம்பெறும். மாலை 6 மணிக்கு இடம்பெறும் வசந்த மண்டபப் பூசையை அடுத்து பெருமான் தெருவீதியுலா வருதலும் நிகழவுள்ளது.
இந்தத் தெருவீதியுலா வழமைபோல் நாவலர் வீதி, கே.கே.எஸ்.வீதி - சிவன் வடக்கு வீதி, மானிப்பாய் வீதி, பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை வழியாக மீண்டும் நாவலர் வீதி வழியாக ஆலயத்தை வந்தடையும். (ஒ)

* * *

உரும்பிராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. திருவிழா தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறும். (ஒ)

* * *

நெல்லியடி, ஜூன் 27
பொலிகண்டி தல்லியம்பதி வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட காண்டாமணிக்கும், மணிக்கூட்டு கோபுரத்துக்கும் குடமுழுக்கு விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறும். (ஒ)

# தொண்டர் படையை சேர்ந்த பெண் மீது தாக்குதல்

கிளிநொச்சி, ஜூன் 27
கொக்காவில் இராணுவ முகாமில் பணியாற்றும் தொண்டர் படையைச் சேர்ந்த தமிழ்ப் பெண் ஒருவரும், அவரது மைத்துனரும் தாக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் கிளிநொச்சி புதுமுறிப்புப் பகுதியில் நடந்துள்ளது.
கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் தனது பணியை முடித்துவிட்டு சிவில் உடையில் தனது மைத்துனருடன் மோட்டார் சைக்கிளில் குறித்த பெண் பயணித்துக் கொண்டிருந்தார். அப்போது எதிரே வந்த உழவு இயந்திரத்தில் வந்தவர்களுக்கும் இவர்களுக்கும் சமிக்ஞை விளக்கு ஒளிர விட்டமை தொடர்பாக வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. அதன் பின்னரே இவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்று கூறப்படுகின்றது.
கண்ணகை புரம், முக்கொம்பன், கிளிநொச்சியைச் சேர்ந்த சௌந்தரராஜா திரிசிகா (வயது -24) என்ற பெண்ணே தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் என்றும் இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிய வருகின்றது. (ற-18)



குடும்ப வறுமை காரணமாக தமது உயர்கல்வியை இடை நிறுத்திய ஆழியவளையைச் சேர்ந்த மாணவியொருவருக்கு அவரது கல்வியைத் தொடரும் பொருட்டு டென்மார்க்கில் வசிக்கும் வசீகரன் கௌசல்யா தம்பதியினர் வழங்கிய நிதி உதவியை சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் தலைவர் சி.கஜேந்திரகுமார் வழங்குகின்றார். (க-402)

# ஒருங்கிணைப்புக் குழு

வவுனியா, ஜூன் 27
வவுனியா பொது மருத்துவமனையில் உத்தியோகத்தர்களுக்கான ஒருங்கிணைப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் கு.அகிலேந்திரன் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-
வவுனியா பொது மருத்துவமனையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்துவதற்கும், வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் நலனைப் பேணுவதற்குமாக இந்த ஒருங்கிணைப்புக்குழு உருவாக்கப்பட்டுள்ளது.
இந்தக் குழுவில் மருத்துவர்களின் சார்பில் பணிப்பாளர் என்ற வகையில் மருத்துவர் கு.அகிலேந்திரன், மருத்துவர் தொழிற்சங்கத்தின் சார்பில் மருத்துவர் எம்.அனஸீம் ஆகியோர் தெரிவாகினர்.
ஏனைய தொழிற் சங்கங்களின் சார்பில் அவற்றின் பிரதிநிதிகளும், நான்கு மதங்களையும் சேர்ந்த மதத் தலைவர்கள் உட்பட 12 பேர் கொண்ட குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-402)

# டிப்ளோமாதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்கு 190 தேசிய போதனாக்கல்வி டிப்ளோமாதாரர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இவர்களில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த டிப்ளோமாதாரிகளுக்கு பாடசாலைத் தெரிவை மேற்கொள்வதற்காக இன்று வெள்ளிக்கிழமையும், ஏனைய வெளி மாவட்ட டிப்ளோமாதாரிகளுக்கு எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை செம்மணி வீதி, நல்லூரில் அமைந்துள்ள வடமாகாணக் கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவிருக்கும் நேர்முகத்தேர்வில் கலந்து கொள்பவர்கள் தங்கள் பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றின் மூலப் பிரதி மற்றும் போட்டோ பிரதிகளுடன் தவறாது சமுகமளிக்குமாறு வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். பெயர் விவரங்களை இல 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள உதயன் பிரதான பணிமனையில் பார்வையிடலாம். (க)


## கரப்பந்தாட்டப் போட்டி

கூவில் தீபஜோதி சனசமூக நிலையத்தின்
40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு
கழகம் நடத்தும்
கரப்பந்தாட்டப்போட்டி
நாளை (28.06.2014) சனிக்கிழமை
இரவு 7.00 மணிக்கு
ஆரம்பமாகவுள்ளதால் பங்குபற்ற விரும்பும்
கழகங்கள் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: 077 895 2358, 077 112 7755
தீபஜோதி வி.க.
கூவில் புலோலி தென்மேற்கு, புலோலி.
(45985) (4.3.6.)


# கல்லூரி தினம்

நெல்லியடி, ஜூன் 27
கரவெட்டி திரு இருதயக் கல்லூரியின் கல்லூரி தினம் இன்று வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபர் இ.ராகவன் தலைமையில் காலை 7 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மருதங்கேணி பங்குத்தந்தை அ. எல்மோ கலந்து கொள்ளவுள்ளார். (ஒ- 109)

* * *

### பரிசளிப்பு விழா

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் தேவராணி நவரத்தினம் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் க. வி. விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ- 109)

### செயற்குழு கூட்டம்

யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளதால் அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (க)


## வேலையாள்கள் தேவை

நெல்லியடியில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு
உணவு பரிமாறுபவர்
சிற்றுண்டி, கொத்து றொட்டி
தயாரிப்பாளர்கள் தேவை.
தங்குமிட வசதியுண்டு.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
(48884) (4.3.6.)
தொடர்பு: 077 716 2904, 077 757 4752



## O/L - 2014 மாணவர்களே!

இறுதிப் பரீட்சைக்கான
விண்ணப் படிவத்தைப்
பூர்த்திசெய்துள்ள உங்களுக்கு
ஓர் நற்செய்தி!

கடந்த வருடம் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் '9A' சித்திபெறக் காரணமாக இருந்த 'வெற்றிப்படி' கையேட்டின் 1 தொடக்கம் 20 வரையான கையேடுகளின் தொகுப்பு உங்கள் நலன் கருதி மிகக் குறைந்த விலையான (50% கழிவில்) ரூ.300க்குப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகுப்பில் ஒவ்வொரு பாட மாதிரி வினாத்தாள்கள் 10க்கும் அதிகமாக உள்ளதுடன் (விடைகளுடன்) இலங்கையின் பிரபல ஆசிரியர்களின் வேறுபட்ட கோணங்களிலான வினாத்தாள்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

★ ஒகஸ்ட் 10ஆம் திகதி மட்டுமே இந்த அரிய வாய்ப்பு.

★ வரையறுக்கப்பட்ட சொற்ப பிரதிகளே இருப்பதால் முந்திக் கொள்பவர்கள் மட்டுமே பெற்றுக்கொள்ளமுடியும்.

★ பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு உறுதிப்படுத்திய பின்பு உங்கள் பிரதேச முகவரிடம் ரூபா 300 ஐ முற்பணமாகச் செலுத்தி இரண்டு நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகொள்ளவேண்டிய இலக்கங்கள்:
வடமாகாணம்: 0776669617/ 0771945812/ 0774228102
ஏனைய மாவட்டங்கள்: (சி.14551) (45.0.3)
0115737592/ 0718628379/ 0716850005








# சேமக்காலைக்கு உரிய காணி விரைவில் மக்கள் பாவனைக்கு

## நல்லூர் பிரதேச சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 27

கோண்டாவில் பகுதியில் கிறிஸ்தவ மக்களுக்கான சேமக்காலைக்குரிய காணியில் இரண்டு வாரங்களுக்குள் எல்லைகள் அமைத்து அதைப் பாவனைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்க நல்லூர் பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்களுக்கான கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை பிரதேசசபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமையில் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச சபை எல்லைக்குள் கிறிஸ்தவ மக்களுக்கான சேமக்காலை இல்லாததால் கிறிஸ்தவ மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் அவர்களுக்கென ஒரு சேமக்காலையை அமைக்க பிரதேச சபையின் ஆரம்பகால கூட்டத்திலேயே தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. எனினும் அது இதுவரை கவனிக்கப்படவில்லை என்று உறுப்பினர் கி.தர்மரட்ணம் சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

**சேமக்காலைக்கான காணியில் ஒரு பகுதியாக 3 பரப்பு ஏற்கனவே பெறப்பட்டுள்ளதாகவும், அதனுடன் இணைந்த மேலும் 3 பரப்புக்காணி இதுவரை கிடைக்காததே தாமதத்துக்கு காரணம்.**

சேமக்காலைக்கான காணியில் ஒரு பகுதியாக 3 பரப்பு ஏற்கெனவே பெறப்பட்டுள்ளதாகவும். அதனுடன் இணைந்த மேலும் 3 பரப்புக்காணி இதுவரை கிடைக்காததே தாமதத்துக்கு காரணம் என்று தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

தற்போது கிடைத்துள்ள காணியில் சேமக்காலைக்கான உரிய நடவடிக்கைகளை முதலில் மேற்கொள்ளலாம் என்று உறுப்பினர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து இரு வாரங்களுக்குள் உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. (வ-7)

# யாழ்.- மாவிட்டபுரம் இடையே இரவு 8.30 வரை பஸ் சேவை

## திருவிழாக் காலத்தில் இடம்பெற ஏற்பாடு

வலி.வடக்கு, ஜூன் 27

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயவருடாந்ததிருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம்- மாவிட்டபுரம் வரையான இ.போ.ச. பஸ் சேவைகள் இரவு 8.30 மணிவரை நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த காம்யோற்சவம் அடுத்த மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகி 26ஆம்திகதி இறுதி நாள் உற்சவமான தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளது. திருவிழாக் களை சிறப்பாக நடத்துவது குறித்த கலந்துரையாடல் வலி. வடக்கு பிரதேச செயலக மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன் போது கூட்டத்தில் கலந்து கொண்ட பலரும் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய இரவுத் திருவிழாவில் கலந்து கொள்ளும் அடியவர்களின் நன்மை கருதி பஸ் சேவைகளை இரவு 8.30 மணிவரை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

அதைத் தொடர்ந்து இலங்கை போக்குவரத்து சபையுடன் கலந்துரையாடி இதனை நடைமுறைப்படுத்துவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. (வ-86)



யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துவரும் விபத்துக்களை தவிர்க்கும் நோக்கில் யாழ்.பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸ் தலைமைப் பொறுப்பதிகாரி சமிந்த சில்வா தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழிப்புணர்வூட்டும் நிகழ்வில் யாழ். பொது நூலகத்தின் முன்பாகவுள்ள வீதியில் வீதிச் சமிக்ஞைகளை எவ்வாறு முறைப்படி பின்பற்றுவது குறித்து விளக்கமளிக்கப்பட்டபோது. (வ-106)

# அளுத்கம வன்முறைகளுக்கு யாழ். மாநகர சபை கண்டனம்

## பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்கவும் கோரிக்கை

யாழ்ப்பாணம்.ஜூன் 27

அளுத்கமவில் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற வன்முறைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும் என்று யாழ். மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

யாழ்.மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சபை மண்டபத்தில் இடம்பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் கடந்த 21 ஆம் திகதி யாழ். நகரில் நடத்தப்பட்ட கண்டனஆர்ப்பாட்டம் அரசியல் சுய இலாபங்களுக்காக நடத்தப்பட்டதாக ஆளுங்கட்சி உறுப்பினர் சராபுல் அனாமால் கூட்டத்தின் ஆரம்பத்தில் எடுத்துக் கூறப்பட்டது.

இதனை ஆளுங்கட்சி உறுப்பினர்களும், எதிரணி உறுப்பினர்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. எதிரணி உறுப்பினர்கள்அளுத்கம சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்ததை அடுத்து சபையில் இந்தத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. 1990ஆம் ஆண்டு நடைபெற்ற பிரச்சினைகளின் போதும் இதுவரை 38 இளைஞர்கள் கடத்தப்பட்டுள்ளார்கள். காத்தான்குடியில் முஸ்லிம்கள் தொழுகை நேரம் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். இத்தகைய சம்பவங்கள் நடைபெற்ற காலத்தில் முஸ்லிம்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்காத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், அளுத்கம சம்பவத்துக்கு மட்டும் அரசியல் சுய இலாபங்களுக்காக முதலைக் கண்ணீர் வடித்து ஐ.நா.சபை மற்றும் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு தாம் குரல் கொடுப்பதாக எடுத்துக்கரட்டவே ஒரு கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். பாதிக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுக்கவில்லை. இது அரசியல்சுய இலாபத்துக்கானது என்றுஆளுங்கட்சிஉறுப்பினர் சராபுல் அனாம் தனது கருத்தை சபையில் முன்வைத்தார்.

இதனை எதிர்த்து எதிரணி உறுப்பினர் நடராஜா இராஜதேவன், அரசியல் வரலாறு தெரியாமல் சபையில் பேச வேண்டாம் கடந்த காலங்களில் விரும்பியோ விரும்பாமலோ நாம் ஆயுதப் போராட்டத்தை எதிர்கொள்ள வேண்டிய காலகட்டத்தில் அரசியல் கட்சிகள் இருக்கவில்லை. ஆயுதக் கட்சிகள்தான் செயற்பட்டன. ஆனாலும் முஸ்லிம்களுக்கு குரல் கொடுத்த தமிழ் தலை வர்கள் இருந்தார்கள் என் பதை மறக்க வேண்டாம் என்று நினைவுபடுத்தினார்.

தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமை நீண்டகாலமாக இருந்து வருகிறது அமிர்தலிங்கம் போன்றோர் முஸ்லிம்களுக்காக குரல் கொடுத்தார்கள். 1990 ஆம் ஆண்டு ஆயுதத்துக்கு பயந்து மக்கள் வாய்திறக்க முடியாமல் மெளனமாக இருந்தார்கள்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலும் தீவிரவா தத்தை உருவாக்கக்கூடிய வர்கள் இருக்கின்றனர். இந்தப் பிரச்சினைக்கு அரசு இன்னும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கவில்லை என்பதே எமது குற்றச்சாட்டு என்று பிரதி மேயர் றமீஸ் தெரிவித்தார்.

ஆளுங்கட்சி உறுப்பினர் சராபுல் அனாம் கூறிய கருத்தை சபை ஏற்றுக் கொள்ளவில்லை. அளுத்கம சம்பவத்தை மனிதாபிமான ரீதியில் ஏற்றுக் கொண்டு சபையில் தீர்மானமாக சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதுடன் நட்ட ஈடும் வழங்க வேண்டும் என்று முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தீர்மானமாக நிறைவேற்றினார். (வ-14)

# சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுப் பேரணி நேற்று

யாழ்ப்பாணம், ஜூன் 27

சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுப் பேரணி நேற்றுவியாழக்கிழமை தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களால் நடத்தப்பட்டது. 'வேள்ட் விஷன்' நிறுவன அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலய முறைசாராப் பிரிவினரால் ஏற்பாடு செய்யப் பட்ட பேரணி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் ஆரம்பித்து ஏ-9 வீதி வழியாக சாவகச்சேரி பஸ் நிலையம் வரை இடம்பெற்றது.

சிறுவர் உரிமைகள் தொடர்பான கோஷங்கள் மாணவர்களால் வீதியெங்கும்முழக்கமிடப்பட்டன. "பூப்போன்ற மனங்களில் கற்களால் எறிவதை தவிர்ப்போம்", "சிறுவர் நாட்டின் செல்வங்கள்; பேணிப் பாதுகாப்பது எமது கடமை.", அனைத்து சிறார்களினதும் உடல், உள ஆரோக்கியத்தை மேம்படுத்துவோம்", "ஒவ்வொருவரும் சிறுவர் உரிமைகளை அறிந்து மதித்து நடப்போம்", "பாலியல் துஷ்பிரயோகத்தை இல்லாதொழிப்போம்", "பிள்ளைகளின் நலன் நாடும் மனப்பாங்கை எல்லோரிடமும் உருவாக்குவோம்"போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கிய வண்ணம் நீண்ட பேரணியாக மாணவர்கள் சென்றனர். (வ-9)



பேரணியாகச் சென்ற மாணவர்கள்

# பனை உற்பத்திகளுக்கு கிராக்கியும் பற்றாக்குறையும்

யாழ்ப்பாணம், ஜூன் 27

யாழ்.குடாநாட்டில் பனம் உற்பத்திப் பொருள்களான ஒடியல், பனாட்டு, ஒடியல்மா கிராக்கியும் பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது.

பனம் பொருள்கள் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியே இதற்கு முக்கிய காரணமாகக் கூறப்படுவதாக பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்தார். போதிய மழைவீழ்ச்சி இன்மையால் இந்த வீழ்ச்சி ஏற்பட்டது. (க-17)

# புல்லாந்திக்குளத்தைப் புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை

தென்மராட்சி, ஜூன் 27

சாவகச்சேரி கல்வயல் பகுதியில் உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் அந்தப் பகுதியில் உள்ள புல்லாந்திக் குளத்தை புனரமைத்துத் தருமாறு உரிய அதிகாரிகளைக் கோரியுள்ளனர்.

வருடந்தோறும் அந்தக் குளத்திலிருந்து நீர் பெற்று உப உணவுப் பயிர் வகைகளைப் பயிரிட்ட விவசாயிகள் இந்த வருடம் போதிய மழை வீழ்ச்சி இல்லாததால் குளத்தில் நீர் வற்றியதால் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள வில்லை. இருப்பினும் தோட்டப் பயிர்ச் செய் கைக்காக குளத்தில் காணப் பட்ட சேறு சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்ட போதிலும் குளம் நீரின்றி வறண்டு காணப்படுகிறது.

குளம் நீரின்றி காணப்படும் இந்தக் காலப் பகுதியில் இயந்திரத்தின் மூலம் குளத்தை ஆழமாக்கித் தருமாறு விவசாயத் திணைக்களம், உள்ளூராட்சி திணைக்கள அலுவலகங்கள், பிரதேச செயலகம் போன்றவற்றுக்கு பல தடவைகள் அறிவித்தும் பயன் கிடைக்கவில்லை என்றும் அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர். (வ-9)

# பாடசாலைக்கு மாணவர்கள் சென்று வருவதில் இடர்கள்

## நெருக்கடிக்கு மத்தியில் பஸ் பயணம்

கிளிநொச்சி,ஜூன் 27
முக்கொம்பன் கிராமத்திலிருந்து கிளிநொச்சி, அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கு மாணவர்கள் செல்வதில் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
யாழ்ப்பாணத்திலிருந்து காலை 6 மணிக்கு புறப்படும் போக்குவரத்துச் சபை பஸ், பூநகரி, அரசபுரம், செக்காலைவழியாக முக்கொம்பன்கிராமத்தை சென்றடையும்போது அக்கராயன் மகா வித்தியாலயத்துக்குச் செல்லவேண்டிய மாணவர்கள் பயணிகள் நிறைந்த பஸ்ஸில் நெருக்கடிகள் மத்தியில் பயணிக்க வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.
அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கும் முக்கொம்பன் கிராமத்துக்கும் இடையில் மாணவர்கள் பயணிப்பதற்குத் தனியான பஸ் சேவையொன்றை ஆரம்பிக்குமாறு நீண்ட காலமாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.
அத்தகைய சேவையொன்று நடத்தப்பட்டால் மாணவர்கள் பாடசாலைக்கு இலகுவாகப் பயணிக்க முடியும் என்று அந்தப் பகுதி மக்கள் கூறினர். (ச-18)



பஸ்ஸில் முண்டியடித்து ஏறும் மாணவர்கள்



கிளிநொச்சி, அக்கராயன் குளத்தின் தண்ணீர் வெகுவேகமாக வற்றி வருவதால் குளத்தின் இடதுகரை வாய்க்கால் வறண்டு கிடப்பதைக் காணலாம். (ச-18)

# போதைப்பொருள் வைத்திருந்த இருவர் கைது

வவுனியா,ஜூன் 27
போதைப்பொருள் வைத்திருந்த இருவர் நேற்று முன்தினம் வவுனியாவில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா குற்றத் தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.
வவுனியா பிரதேசத்தில் போதைப் பொருளுடன் சிலர் நடமாடுவதாக கிடைத்த தகவலையடுத்து குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணையின் பேரில் சூசைப்பிள்ளையார் குளத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-402)

# சடலங்களை எரியூட்டும் பொறுப்பு ஒப்படைப்பு

வவுனியா, ஜூன் 27
வவுனியா நகர சபை நிர்வாகத்தின் கீழ் அமைந்துள்ள பூந்தோட்டம் மயானத்தில் சடலங்களை எரிக்கும் பொறுப்பு பூந்தோட்ட மயான அபிவிருத்திச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று வவுனியா நகர சபைச் செயலாளர் கே.சத்திய சீலன் தெரிவித்தார்.
விறகு மூலம் சடலங்களை எரியூட்டுவது சுற்றுச்சூழலைப் பாதிக்கும். அதனால் சடலங்களை மின்சாரத்தின் மூலம் எரியூட்ட வேண்டும் என்று அவர் கூறினார். சடலம் ஒன்றை எரிவாயு மூலம் தகனம் செய்வதற்கு 10,000 ரூபா கட்டணம் செலுத்த வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-402)

# ஊழியர்கள் போராட்டம்

## கரைதுறைப்பற்றில் பதினொரு அம்ச கோரிக்கைகளை முன்வைத்து

முல்லைத்தீவு, ஜூன் 27
அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் கரைதுறைப்பற்று பிரதேச சபை நுழைவாயிலுக்கு முன்னால் கவனவீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.
இந்தச் சங்கத்தின் முல்லைத்தீவுமாவட்டத்துக்கான இணைப்பாளர் சி.சற்குணராஜா தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை போராட்டம் நடத்தப்பட்டது. இந்தப் போராட்டத்தின்போது பாதிக்கப்பட்ட ஊழியர்கள் 11 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்துள்ளனர்.
2014 ஆம் ஆண்டுக்கான சீருடைவழங்கு, ஊழியர்களுக்குப் பதவி உயர்வு வழங்கு, பழிவாங்கல் இட மாற்றத்தை உடன் நிறுத்து, நீதி கிடைக்காவிட்டால்சாகும்வரைஉண்ணாவிரதம், ஊழியர்களுக்கு தரமுயர்வு வழங்கு, செயலரின் அதிகார துஷ்பிரயோகத்தை உடன் நிறுத்து, மேலதிக நேரம் கடமையாற்றும் ஊழியர்களுக்கு மேலதிகக் கொடுப்பனவை உடன் வழங்கு, சாரதிக்கான நியமனத்தை உடன் வழங்கு, பழிவாங்கல் இடைநிறுத்தத்தை உடன் ரத்துச் செய், ஊழியர்களைத் தகாத வார்த்தைகளால் பேசும் பொறுப்பதிகாரிகளை உடன் இடமாற்று போன்ற கோரிக்கைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் முன்வைத்துள்ளனர்.

**கோரிக்கைகளுக்கான தீர்வை இரு வாரங்களில் வழங்குவதாக கூறப்பட்டதையடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டது.**

அதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த முல்லைத்தீவு மாவட்ட வடமாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன் ஊழியர்களின் குறைகளைக் கேட்டறிந்ததுடன், அவற்றை நிவர்த்தி செய்யுமாறும் , அவர்களின் கோரிக்கைகளுக்கு தக்க பதிலை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.
அதனையடுத்து உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக அதிகாரிகளும் முல்லைத்தீவு மாவட்ட அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்க அதிகாரிகளும் சம்பவ இடத்துக்குச் சென்று ஊழியர்களின் கோரிக்கை குறித்து ஆராய்ந்துள்ளனர்.
ஊழியர்களிடம் கோரிக்கைகளுக்கான தீர்வை இரண்டு வாரங்களில் பெற்றுத் தருவதாக அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்க வடமாகாணத்துக்கான உள்ளூராட்சி மன்றங்களின் முல்லை மாவட்ட இணைப்பாளர் சி.நற்குணராஜா உறுதிமொழி அளித்தார். இதனை ஏற்றுக் கொண்ட ஊழியர்கள் கவனவீர்ப்பு போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர். (ச-415)

# புனரமைக்கப்படாத வீதி; சிரமத்துடன் பயணம்

வவுனியா, ஜூன் 27
வவுனியா, பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள வீதி இதுவரை புனரமைக்கப்படாமையால் பாடசாலை மாணவர்கள் உட்படப் பலரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
வவுனியா, பண்டாரிக்குளம் விபுலானந்தாக் கல்லூரி முன்பாகவுள்ள ஒரு கிலோமீற்றர் வரையான பாதையில் கிரவல் மண் கொட்டப்பட்டு சிறிது தூரம் பரவப்பட்டுள்ளது. முழுமையாக இந்த வீதி செப்பனிடப்படவில்லை. அதனால் மாணவர்கள் சுகாதார ரீதியிலான பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த வீதியைத் தார் வீதியாக புனரமைக்குமாறு பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தும் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும்,
இந்த வீதியை விரைவில் புனரமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-402)

# வவுனியா மாவட்டத்தில் இடர் குறித்து ஒத்திகை

வவுனியா, ஜூன் 27
வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு, மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இடர் முகாமைத்துவ ஒத்திகைகளை நடத்தியுள்ளதாக மாவட்ட இடர் முகாமைத்துவப் பணிப்பாளர் ரி.என். சூரியராஜா தெரிவித்தார்.
இரட்டை பெரியகுளம், ஆசிக்குளம், மதியாமடு, புளியங்குளம் ஆகிய கிராமங்களில் இடர் முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வும், இடர் முகாமைத்துவ ஒத்திகையும் இந்த வாரம் மேற்கொள்ளப்படவுள்ளதாக அவர் கூறினார். (ச-402)

# செட்டிகுளத்தில் குடிதண்ணீர் நெருக்கடி

மன்னார், ஜூன் 27
வவுனியா, செட்டிகுளம் கதிர்காமர் முகாமுக்கு அண்மித்த பகுதிகளில் வசித்துவரும் 150 குடும்பங்கள் குடிதண்ணீர் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.
இந்தப் பிரதேசத்தில் அனைத்து வீடுகளிலும் கிணறுகள் இருந்தும், கிணறுகள் நீரின்றி புழுதிப்படலங்களாகக் காணப்படுகின்றன என்று அந்தப் பகுதி மக்கள் கூறினர். இதனால் பல மைல் தூரம் சென்று குழாய்க் கிணறுகளில் இருந்து தண்ணீர் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். (ச-415)

# மத நல்லிணக்கம் ஏற்பட மன்னாரில் சர்வமத வழிபாடு

மன்னார்,ஜூன் 27
இலங்கையில் சிறுபான்மையினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் அடக்குமுறைகள் மற்றும் வன்முறைகளை இல்லாது ஒழித்து நாட்டில் இன, மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி சர்வமத வழிபாடு நடைபெற்றது.
கிறிஸ்தவ,இஸ்லாமிய, இந்து, பௌத்த மதத் தலைவர்கள் ஒன்றிணைந்து மேற்கொண்ட இந்த சர்வமத வழிபாடு நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 4 மணிக்கு மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.
இந்த வழிபாட்டை ஆர்.பி.ஆர். நிறுவனம்,மன்னார் மாவட்ட சர்வமத சபை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.
முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் இனிவரும் காலங்களில் நிகழாத வகையில் இன, மத பேதமின்றி நாட்டில் நல்லிணக்கம் ஏற்பட்டு சகல இனத்தவரும் புரிந்துணர்வுடன் வாழ இறை ஆசி வேண்டி குறித்த சர்வமத வழிபாடு நடைபெற்றது.
இந்த நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப், இந்து மதத் தலைவர்கள், கிறிஸ்தவ மதத் தலைவர்கள், மெதடிஸ்த திருச்சபையின் போதகர்கள், கத்தோலிக்க திருச்சபையின் அருட் தந்தையர்கள் மற்றும் அருட் சகோதரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
சர்வமத வழிபாட்டின் பின்னர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்கான மனு ஒன்றை மதத் தலைவர்கள் மன்னார் மாவட்ட செயலர் எம். வை. எஸ்.தேசபிரியவிடம் மாவட்ட செயலகத்தில் வைத்து கையளித்தனர். (ச-56)



சர்வமத வழிபாட்டில் மதத் தலைவர்கள்



# இன்ரெல் நிறுவனத்தின் புதிய அவதாரம்


மொபைல் சாதனங்கள் உட்பட கணினிகளுக்கான புரோசெசெர், சிப்ஸ் ஆகியவற்றை வடிவமைத்து k i > x | ! è W0 k ! | V! இன்ரெல் தற்போது அப்ளிக்கேஷன் வடிவமைப்பிலும் காலடி பதித்துள்ளது.

இதன்படி பொக்கெற் அவராஸ் என்ற அன்ரோயிட் மற்றும் ஐ.ஓ.எஸ். சாதனங்களில் பயன்படுத்தக்கூடிய அப்ளிக்கேஷனை வடிவமைத்துள்ளது.

இந்த அப்ளிக்கேஷன் ஆனது தமது குரல்பதிவுடன் கூடிய காணொலி குறுஞ்செய்திகளை பதிவு செய்யும் வசதியை பயனாளர்களுக்கு வழங்குவதுடன், அவற்றைக் கார்ட்டூன்களின் முகபாவனைக்கு மாற்றியமைக்கும் வசதியையும் கொண்டுள்ளது.

இதில் 40 வரையான கார்ட்டூன் கரக்டெர்கள் காணப்படுவதுடன் இவற்றின் விலை ஒவ்வொன்றும் 99 சதங்கள் ஆகும்.

இவற்றைக் கொள்வனவு செய்வதன் மூலம் மேலதிகமாக 20 க ரக்டெர்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.




# இணைய இணைப்பு இல்லாமல் பேஸ்புக் பயன்படுத்தலாம்

இணைய இணைப்பு இல்லாமல் பேஸ்புக்கைப் பயன்படுத்த புதிய வசதி ஒன்று அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

பொதுத்துறை நிறுவனமான பி.எஸ். என்.எல்., தன் வாடிக்கையாளர்களுக்கு இந்தப் புதுமையான வசதி ஒன்றை அளிக்கிறது.

இந்தநிறுவனத்தின் கைபேசி இணைப்பு கொண்டிருப்பவர்கள், தங்கள் தொலைபேசிகளில் இணைய இணைப்பு இல்லாமல் இருந்தாலும், பேஸ்புக் தளத்தைத் தொடர்பு கொள்ள முடியும் மூன்று நாள்களுக்கு ரூ.4, வாரத்துக்கு ரூ.10 மற்றும் மாதத்துக்கு ரூ.20 இதற்கென கட்டணமாகச் செலுத்த வேண்டும்.

இதற்கென, பி.எஸ்.என்.எல்.யு. ஓபியா மொபைல் என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இந்த வசதி யு.எஸ். எஸ்.டி. என்ற தொழில் நுட்பத்தின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. தற்போது மேற்கு மற்றும் வடக்கு மண்டலங்களில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு மட்டும் கிட்டுகிறது.

யு.எஸ்.எஸ்.டி. தொழில்நுட்பத்தை, முன்கூட்டியே பணம் செலுத்தி, பதில் அழைப்புகளை மேற்கொள்ளப் பயன்படுத்தலாம். இடம் சார்ந்த தகவல் வசதிகளைப் பெறலாம்.

மெனு வழங்கி அதன் பிரிவுகளுக்கேற்ப வசதிகளைத் தரலாம். தற்போது தொலைத் தொடர்பு துறையில் இயங்கும் நிறுவனங்கள், தங்கள் வாடிக்கையாளர்களுக்கு எச்சரிக்கைச் செய்திகளை அனுப்ப இதனைப் பயன்படுத்தி வருகின்றனர்.

பி.எஸ்.என்.எல். ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தால் இதன் வாடிக்கையாளர்கள் பேஸ்புக் தளத்தைதங்கள் கணக்கில் இணைய இணைப்பு பெறாவிடினும் அணுக முடியும். குறுஞ்செய்திகளைப் பாதுகாக்க இயலும். நண்பர்கள் விடுத்துள்ள கேள்வி மற்றும் வேண்டுகோள்களுக்குப் பதில் அளிக்க முடியும்.

# மவுஸ் பற்றிய சில குறிப்புகள்



கணினி பயன்படுத்தும்போது மவுஸ் பற்றிய முழுமையான பயனை நாம் அறிந்துகொள்வதில்லை.

குறிப்பிட்ட சில பணிகளுக்கு மட்டுமே மவுஸ் என்று எண்ணிக் கொண்டு, அதன் பல வசதிகளை அனுபவிக்காமல் விட்டுவிடுகின்றோம்.

**அதன் பயன்கள்:**

பெரும்பாலான டெக்ஸ்ட் எடிட்டர்களும் புரோகிராம்களும், மொத்த டெக்ஸ்ட் அல்லது நாம் தெரிவு செய்யும் டெக்ஸ்ட்டை ஹைலைட் செய்திட, \ i ï +சிவ்ற் கீயைப் பயன்படுத்த இடம் தருகின்றன.

தெரிவுசெய்ய வேண்டிய டெக்ஸ்ட்டின் தொடக்கத்தில் கிளிக் செய்யவும். பின்னர், சிவ்ற் கீயை அழுத்திக் கொண்டு, டெக்ஸ்ட் முடிவடையும் இடத்தில் கிளிக் செய்யவும்.

எந்தவித மவுஸ் இழுவை இல்லாமல், அரோ கீ அழுத்தாமல், இப்போது நீங்கள் விரும்பும் டெக்ஸ்ட் தெரிவுசெய்யப்

**டொக்கிமெண்ட் பக்கங்களின் ஊடாகச்செல்ல, தற்போது மவுஸின் ஸ்குரோல் வீலை அனைவரும் பயன்படுத்துகிறோம். இந்த ஸ்குரோல் வீலை இன்னும் சில பணிகளுக்குப் பயன் படுத்தலாம்.**



பட்டிருக்கும். இந்த வகையில் ஓல்ட் கீ வேறு ஒரு வகையான வசதியைத் தருகிறது.

ஓல்ட் கீயை அழுத்திக்கொண்டு, டெக்ஸ்ட்டின் ஊடாக மவுஸை இழுத்து ஹைலைட் முடியும்.

டொக்கிமெண்ட் பக்கங்களின் ஊடாகச்செல்ல, தற்போது மவுஸின் ஸ்குரோல் வீலை அனைவரும் பயன்படுத்துகிறோம். இந்த ஸ்குரோல் வீலை இன்னும் சில பணிகளுக்குப் பயன்படுத்தலாம். மவுஸின் ஸ்குரோல் வீல், ஒரு வீலாக மட்டுமல்ல, பட்டனாகவும் பயன்படுகிறது. மவுஸின் மூன்றாவது பட்டனாக இது செயற்படுகிறது.

இதனை அழுத்தினால், அது மவுஸின் மூன்றாவது பட்டனாகத் தனிப்பட்ட செயற்பாட்டைத் தரும். இதனைப் பயன்படுத்தி, லிங்க் ஒன்றில் கிளிக் செய்து, இணையப் பக்கத்தைத் திறக்கலாம்.

பிரவுசரின் மேலாக இணையத்தளங்களுக்கான டேப்பில் வீலை அழுத்தினால், அந்த இணையத்தளம் மூடப்படும்.

இணையத்தளப் பக்கம், வேர்ட் டொக்குமெண்ட், எக்ஸெல் ஸ்ப்ரெட் ஷீட் போன்றவற்றில், கொண்ட்ரோல் கீயை அழுத்திக் கொண்டு ஸ்குரோல் செய்தால், பெரியதாகவும், சிறியதாகவும் காட்டப்படும்.

சிவ்ற் கீயை அழுத்திக்கொண்டு, இணையப் பக்கங்களில், மேலும் கீழுமாக ஸ்குரோல் செய்தால், இணையப் பக்கங்களிடையே மேலும் கீழுமாகச் செல்லலாம்.

சில மவுஸ் வீல்களை, இடது வல தாகவும் நகர்த்தி, இணையப் பக்கத்தில் மேலும் கீழுமாகச் செல்லலாம். இரண்டு மற்றும் மூன்று முறை கிளிக், எந்தச் சொல்லையும், அதன் மீது டபிள் கிளிக் செய்து தேர்ந்தெடுக்கலாம். முழு வாக்கியத்தை அல்லது பந்தி முழுவதையும் தெரிவுசெய்ய, அதில் உள்ள ஒரு சொல்லில் மவுஸை வைத்து, 3 முறை கிளிக் செய்ய வேண்டும்.




# தொடர்ந்தும் முன்னிலை வகிக்கும் சீனாவின் விசேட கணினி

உலகம் முழுவதும் பயன்படுத்தப்பட்டு வரும் விசேட ï è M ï ' _ æ ! Vs | Tianhed2 கணினியே தொடர்ந்தும் முன்னிலை வகித்து வருகிறது.

சீனாவின் பாதுகாப்பு தொழில்நுட்பத்துக்கான தேசிய பல்கலைக்கழகத்தில் காணப்படும் இந்தக் கணினி 33.86 petaflops/s என்ற வேகத்தில் செயலாற்றக்கூடியதாக இருக்கின்றது.

முதன்மையான 500 விசேட கணினிகள் தொடர்பான தகவல்கள் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளன.

இவற்றுள் 63 தொடக்கம் 76 வரையான கணினிகள் சீனாவிலும், பிரிட்டனில் 30 கணினிகளும், பிரான்ஸில் 27, ஜேர்மனியில் 23, ஜப்பானில் 30 கணினிகளும் உள்ளடங்குகின்றன.



# கூகுள் பிளே மூவீஸ் சேவையை விஸ்தரிக்கும் கூகுள்

கூகுள் நிறுவனத்தின் பல்வேறு சேவைகளுள் கூகுள் பிளே மூவீஸ் சேவையும் ஒன்றாகும். இந்தச்சேவை ஆரம்பிக்கப்பட்டு சில மாதங்களே கடந்த நிலையில் மேலும் 21 நாடுகளுக்கு விஸ்தரிக்கப் படவுள்ளது. இதன்மூலம் புதிய திரைப் படங்கள், தொலைக்காட்சி தொடர்கள் போன்வற்றை கொள்வனவு செய்யவும் மொபைல் சாதனங்களில் பார்த்து மகிழவும் முடியும்.

**இந்தச் சேவையானது மேலும் 21 நாடுகளுக்கு விஸ்தரிக்கப்படவுள்ளது.**

இதேவேளை கூகுள் பிளே À Â ü சேவையையும் மேலும் 12 நாடுகளுக்கு விஸ்தரிக்க கூகுள் நிறுவனம் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இன்னும் எத்தனை காலம் தான்...

உடனுக்குடன் செய்ய வேண்டிய விடயங்களை சாக்குப் போக்குச் சொல்லி தாமதித்தால் சிறிய விடயங்களாக ஒரு காலத்தில் இருப்பவைகூட நாளடைவில் பெரும் விடயங்களாக விஸ்வரூபம் பெற்றுவிடுகின்றன.

போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டபோது உடனடியாகச் செய்யவேண்டிய விடயங்களை அரசு அதிக கரி சனையெடுத்து செய்துமுடித்திருந்தால் தற்போதைய நிலையை எதிர்கொண்டிருக்க மாட்டாது.

நீண்டகால அபிவிருத்தித் திட்டங்களை முன்னுரி மைப்படுத்திச் செயற்பட்டுவரும் அரசு, நல்லிணக்கம் பொறுப்புக்கூறும் கடப்பாடு ஆகிய விடயங்களில் உடனடியாக அர்த்தமுள்ளவகையில் நடவடிக்கைகளை எடுத்திருந்தால் சர்வதேசத்தின் முன்பாக தற்போது எதிர்நோக்கும் பாரிய சவாலைத்தவிர்த்திருக்க முடியும்.

போர் முடிவிற்குவரப்பட்டவுடன் தனக்கும் அரசுக்கும் தென்பகுதியில் இருந்த பேராதரவைப் பயன்படுத்தி தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வை அரசு முன்வைத்திருந்தால் இன்று எதிர்கொண்டிருக்கும் பல்வேறு நெருக்கடிகளை எளிதாக சமாளித்திருக்கமுடியும்.

அதைவிடுத்து யார் என்ன சொன்னால் என்ன நான் நினைத்ததை மாத்திரமே செய்வேன் என்று தான்தோன் றித்தனமாக செயற்பட்டதன் விளைவாக போர் இல்லாத நிலையிலும் சர்வதேசத்தின் அவதானத்திற்கு இலங்கை உள்ளாகிநிற்கின்றது.

போர் வெற்றியே இலங்கை எதிர்கொண்டிருந்த பிரச்சினைகளுக்கான இறுதித்தீர்வு. அதற்குப்பின்னர் வேறு பேச்சிற்கு இடமில்லை என்ற மமதையில் உழன்றுகொண்டு, வெளிநாட்டார் உள்நாட்டு விவகாரத் தில் இனிமேலும் தலையிட முடியாது என மார்தட்டிய வர்கள் இன்று என்ன செய்வதென்று தெரியாமல் அங்கலாய்த்துநிற்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

நேற்று முன்தினம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அறிவித்த நிபுணர்கள் குழுவில் இடம்பெற்றிருக்கும் மூவரின் தகைமைகளையும் அனுபவத்தையும் நிபுணத்துவ ஆற்றலையும் ஆராய்ந்துபார்க்கின்றபோது நடைபெறப் போகும் ஐ.நா.விசாரணையின் காத்திரத்தன்மையை விளங்கிக்கொண்டுவிடமுடியும்.

பின்லாந்தின் முன்னாள் ஜனாதிபதியும் சமாதானத்துக்கான நோபல்பரிசைப் பெற்றவரும் ஐ.நாவின் மூத்த இராஜதந்திரியாகவும் திகழ்ந்த மார்த்தி அகிட் சாரி, நியுஸிலாந்தின் முன்னாள் ஆளுநர் நாயகமும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசரும் கம்போடியாவின் யுத்தக்குற்ற நீதிமன்றத்தின் நீதிபதியாகவும் திகழ்ந்த ஸில்வியா ஹாட்ரைட் மற்றும் பாகிஸ்தான் உயர்நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரும் மதச் சுதந்திரத்தை கண்காணிப்பதற்கான ஐ.நாவின் முன்னாள் விசேட பிரதிநிதியுமான அஸ்மா ஜெஹாங்கீர் ஆகிய மூன்று நிபுணர்களது நியமனத்தை யடுத்து இலங்கையின் கடும்போக்கு சிங்கள தேசிய அமைப்பான தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி வசந்த பண்டார வெளியிட்டுள்ள கருத்து சிந்தனைக்குரியது. நவநீதம்பிள்ளை இலங்கைமீதான தனது செயற்பாட்டை நியாயப்படுத்துவதற்காக பலமான குழுவை நியமித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதிலிருந்து விசாரணைக்கு முற்றுமுழுதாக எதிராக இருக்கின்ற அமைப்பே நிபுணர் குழுவின் பலத்தை ஆமோதிக் கின்றமையை உணர்ந்து கொள்ளலாம்.

யதார்த்தம் இப்படியிருக்கையில் அரசோ ஐ.நா. விசாரணைக்கு ஒத்துழைக்க முடியாது என்று ஒதுங்கிநின்றுவிடமுடியாது. விரும்பினாலோ விரும்பா விட்டாலோ விசாரணைப் பொறிமுறை செயல்வடிவம் பெற்று முன்நகர்கின்றதென்பதை அரசு இதன் பின்னராவது உணர்ந்துகொண்டு ஐ.நா உள்ளிட்ட சர்வதேசத்தரப்புடன் ஒத்துழைத்துச் செயற்பட முன்வர வேண்டும்.

சர்வதேசத்தரப்பின் செயற்பாடுகள் பக்கச்சார் பானவை ;அதில் நம்பிக்கையில்லை என்று அரசு நியாயம் கற்பிக்காமல் நேரத்தை மேலும் வீணடிக்காமல் தனது மக்களின் எதிர்காலத்திற்காக இந்த நாட்டின் எதிர்காலத்திற்காக வறட்டுப்பிடிவாதத்தை தளர்த்திச் செயற்பட முன்வரவேண்டும்.

அப்படியில்லையேல் வெறும் பேச்சாக இருந்த ஐ.நா விசாரணைக்குழு யதார்த்தமாகியதைப் போன்றே வெறும் பேச்சாக இன்று பார்க்கப்படும் விடயங்கள் எதிர்காலத்தில் நிதர்சனமாகிவிடலாம். ஆகவே, உள்ளூர் வாக்காளர்களைக் கவர்வதற்காக வீறாப்பு வசனங் களைப் பேசி உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு சண்டித் தனம் காட்டும் வறட்டு அரசியலுக்கு முடிவுகட்டி அனைவரும் கௌரவத்துடன் வாழ வழிசெய்யும் அர்த்தமுள்ள அரசியலைச் செய்து இந்த நாடு எதிர்கொண்டுள்ள சவால்களை நேர்வழியில் எதிர்கொண்டு ஆக்கபூர்வ மான தீர்வுகளை எட்ட அரசு முன்வரவேண்டும்.



# போஹோ ஹராம் அமெரிக்காவின் கைக்கூலிகளா?

ராஜ்

நைஜீரியாவில் இயங்கும் போஹோ ஹராம் என்றழைக்கப்படும் ஆயுதக் குழுவொன்று அந்நாட்டு பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் சுமார் 200க்கும் அதிகமான மாணவிகளை கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கடத்திச் சென்றுள்ளது. போஹோ ஹராம் அமைப்பின் இந்தச் செயற்பாடு உலக மட்டத்தில் பலத்த அதிர்வலைகளை உண்டாக்கியுள்ளது.

போஹோ ஹராம் என்றழைக்கப்படும் குறித்த ஆயுதப் போராட்டக் குழு ஓர் இஸ்லாமிய இயக்கம் என்றும், அவர்கள் குறித்த மாணவிகளை இஸ்லாமுக்கு மதம் மாற்றிவிட்டார்கள் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த போஹோ ஹராம் இயக்கத்தின் செயற்பாடுகளைப் பொறுத்தமட்டில் அது அமெரிக்காவினால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஓர் இயக்கம் என்பதை உணர முடிவதாக நைஜீரிய செயற்பாட்டாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

சுமார் 170 மில்லியன் (17 கோடி) மக்களைக் கொண்ட நைஜீரியா, எரிசக்தி உற்பத்தியில் உலகில் 07 ஆவது இடம் வகிக்கின்றது. அமெரிக்காவுக்கு எரிசக்தி ஏற்றுமதி செய்வதில் உலகில் ஐந்தாவது இடம் நைஜீரியாவுக் குரியது.

நைஜீரியாவின் எரிசக்தி உற்பத்தி மீது கண்வைத்துள்ள அமெரிக்கா அதனை இலேசாக அடைந்து கொள்வதற்காக ஆடும் நாடகமே இந்த போஹோ ஹராமின் 200 மாணவிகள் கடத்தல் என்ற கோணத்தில் இப்போது தகவல்கள் வெளிவரத்தொடங்கியுள்ளன.

நைஜீரியாவின் தென்பகுதி எரிசக்தி உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் பகுதியாகும். தற்போது நைஜீரியாவின் வடக்கிலும் பெருமளவு எரிசக்தி கிடைக்கும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. வடபகுதியில் எரிசக்கி உற்பத்திக்கான செயற்பாடுகளை அந்நாட்டு அரசு முன்னெடுக்கவுள்ளது. போஹோ ஹராம் என்றழைக்கப்படும் குறித்த ஆயுதக் குழுவும் நைஜீரியாவின் வடக்குப் பகுதியில் தான் இயங்கி வருகின்றது.

200 மாணவிகள் கடத்தப்பட்ட விடயத்தில் கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்கா,குறித்த மாணவிகளை போஹோ ஹராம் இயக்கத்தினர் விடுவிக்காத பட்சத்தில் அவர்களுக்கு எதிராக இராணுவ நடவடிக்கையில் இறங்கப் போவதாக அறிவித்துள்ளது. அமெரிக்காவின் இந்த அறிவித்தலில் இருந்து போஹோ ஹராம் இயக்கத்தினரை இயக்குவதும், பாய்ந்தடித்துக் கொண்டு இராணுவ நகர்வுகளை மேற்கொள்ள முனைவதும் நைஜீரியாவின் எரிசக்தி உற்பத்தி மீது அமெரிக்கா கொண்டுள்ள ஆசையின் வெளிப்பாடு என்று நைஜீரிய மனித உரிமை ஆர்வலர்கள் கருதுகிறார்கள்.

ஈராக், ஆப்கானிஸ்தான், சிரியா வரிசையில் இப்போது நைஜீரியாவையும் இணைத்துவிட அமெரிக்கா ஆசைப்படுவதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. மேற்குறித்த நாடுகளில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலைகளை வைத்துக்கொண்டு தனது நலனுக்காகக் காய் நகர்த்தல்களைச் செய்துவரும் அமெரிக்கா இப்போது நைஜீரியாவையும் தனது கட்டுக்குள் வைத்திருக்க எண்ணுவதாகக் கூறப்படுகிறது.

நைஜீரியாவின் எரிசக்தி உற்பத்தியில் தலையிட்டு அதனை அபகரிப்பதற்கு அவர்கள் கைக்கொள்ளும் ஒரு யுக்தியே இந்த போஹோ ஹராம் தீவிரவாத நாடகமே தவிர வேறில்லை என விமர்சனங்கள் வெளியாகியுள்ளன.

> போஹோ ஹராம் என்றழைக்கப்படும் குறித்த ஆயுதப் போராட்டக் குழு ஒரு இஸ்லாமிய இயக்கம் என்றும் அவர் கள் குறித்த மாணவிகளை இஸ்லாமிய மதத்துக்கு மாற்றிவிட்டார்கள் என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த போஹோ ஹராம் இயக்கத்தின் செயற்பாடுகளைப் பொறுத்த மட்டில் அமெரிக்காவினால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட ஒரு இயக்கம் என்பதை உணர முடிவதாக நைஜீரிய செயற்பாட்டாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

200 க்கும் அதிகமான மாணவிகளைத் தாம் கடத்திவிட்டதாகவும், அவர்கள் அனைவரும் தற்போது இஸ்லாமிய மார்க்கத்தைத் தழுவிவிட்டதாகவும் போஹோ ஹராம் இயக்கத்தின் தலைவர் அபூபக்கர் ஷெகாவு பேசியுள்ள ஒரு வீடியோ வெளியிடப்பட்டது.

குறித்த மாணவிகளை விடுவிப்பதற்கான நிபந்தனை விதித்துப் பேசும் குறித்த வீடியோவில் கடத்தப்பட்ட மாணவிகள் அனைவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுவிட்டதாகக் கூறினார் அபூபக்கர் ஷெகாவு.

போஹோ ஹராம் மீது நடவடிக்கை எடுப்பது என்ற தோரணையில் நைஜீரியாவில் கால் பதிப்பதற்குத் திட்டமிட்டுள்ள அமெரிக்கா, பின்னர் படிப்படியாக அங்கு தனது காலை இறுக ஊன்றி அங்கிருக்கும் எண்ணெய் வளத்தைக் கையகப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள். இவ்வாறான நடவடிக்கைகளில் அமெரிக்கா கைதேர்ந்த ஒன்று என்றும் அவர்கள் குறிப் பிடுகிறார்கள்.

எது எவ்வாறாயினும் வளர்த்த கடா மார்பில் பாய்ந்தமை போன்ற நிலையை அமெரிக்கா இப்போது ஈராக்கில் நிதர்சனமாக எதிர்கொண்டுள்ளது. அங்கு அமெரிக்கப் படைகளால் பயிற்சியளிக்கப்பட்டவர்களே இப்போது கிளர்ச்சிப் படைகளாக உருவெடுத்து ஈராக்கின் பல நகரங்களைக் கைப்பற்றியுள்ளனர். இதனால் பலத்த நெருக்கடியை எதிர்கொண்டுள்ள அமெரிக்கா, போஹோ ஹராம் விடயத்திலும் மிகக் கவனமாக இருப்பதே நல்லது.



பண்டிதை திருமதி.பொன்.பாக்கியம்,
தலைவர் பண்டிதமணி நூல்
வெளியீட்டுச் சபை.

# பல்லாயிரம் சைவ ஆசிரியர்களை உருவாக்கித் தந்தவர் பண்டிதமணி


பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களது 115ஆவது பிறந்த தினம் இன்றாகும்

பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை 1986 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி இந்தப் பூவுலகை விட்டு பொன்னுலகு சென்றாலும், தமிழ் உள்ளவரை அவர் புகழ் நின்று நிலைக்கும்.

மட்டுவில் பகுதியில் வாழ்ந்த தருமன் என்றழைக்கப்பட்ட சின்னத்தம்பியருக்கும், கற்பின் செல்வியாகிய வள்ளியம்மைக்கும் சிதம்பர நடராஜப்பெருமானின் தரிசனப் பேற்றினாற் கிடைத்த ஒரேயொரு அருமருந்தன்ன புத்திரன் பண்டிதமணியாவார். இவர் தமது மூன்றாம் வயதில் தாயை இழந்தார். தந்தையின் பராமரிப்பில் வாழ்ந்த பண்டிதமணி ஐந்தாம் வகுப்புவரையே முறையான பாடசாலைக் கல்வியைப் பெற்றார். எனினும் பண்டிதமணி வாழ்ந்த உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளையினதும், அவர்களது புத்திரர்களதும் சூழல் பண்டிதமணியை மேலும் கல்வி கற்கத் தூண்டியது.

இந்த நாட்டில் சைவ சமயத்தையும் அதற்குக் கருவியாகிய தமிழ்மொழியையும் கற்பிக்கக் கற்றுவல்ல ஆசிரியர்களையும், மதகுருமார்களையும் உருவாக்க வேண்டும் என்னும் எண்ணத்தினால் நாவலர் பெருமானால் உருவாக்கப்பட்ட நாவலர் காவிய பாடசாலையில் கற்கும்பேறு பண்டிதமணிக்கு கிடைத்தது.

1917 ஆம் ஆண்டு பண்டிதமணி நாவலர் காவிய பாடசாலையில் சேர்ந்து கொண்டார். அங்கு சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், கைலாசபிள்ளை, வித்துவான் சுப்பையபிள்ளை, வித்தகம் கந்தையாபிள்ளை ஆகியோரிடம் பாடம் கற்றார். 1926 ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டித பரீட்சையில் முதலாம் பிரிவில் சித்தி பெற்றார். 1927 இல் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆசிரிய பயிற்சியும் பெற்றார். 1929 ஆம் ஆண்டு திருநெல்வேலி சைவசாரியார் பயிற்சிக் கலாசாலையில் தமிழ் பேராசிரியர் பதவி கிடைத்தது. 1929 ஆம் ஆண்டு தொடக்கம் 1959 ஆம் ஆண்டு வரையான முப்பது வருட காலமும் யாழ்ப் பாணம் செய்த தவப் பயனாகப் பல்லாயிரம் சைவ ஆசிரியர்கள் இந்த நாட்டில் உருவாகினர்.



பண்டிதமணி மட்டுவிலில் பிறந் தாலும் திருநெல்வேலியையே தமது இருப்பிடமாகக் கொண்டார். சைவாசிரியர் பயிற்சிக் கலாசாலை வளாகத்தில் ஒரு மும்மொழிக் காவிய பாடசாலையையும் நடத்திப் பல பண்டிதர்களை உருவாக்கினார். பண்டித மணிக்கென ஒரு கூட்டம் இருந்தது. அது கல்விக் கூட்டம். பண்டி தமணியவர்கள் தமது வீட்டில் சைவசித்தாந்த வகுப்பு நடத்தினார். ஆங்கில மேதைகள் பலர் ஆச்சிரமத்துக்கு வந்து சைவ சித்தாந்தம் கற்றனர்.

சைவசித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மையை ஆணித்தரமாக நம்மனசில் பதியவைத்தவர் எங்கள் பண்டிதமணியே, நம்வாழ்வில் நடப்பவையாகவும் நீதியே என்ற தத்துவத்தை நமக்கு உணர்த்திய ஞானத் தந்தையும் அவரே. 'நன்றும் தீதும் பிறர்தரவாரா' 'தீண்டாதே தீண்டப்படாதே' என்ற கருவூலக்கருத்துக்களைப் பதிய வைத்த மௌனத் தவமுனிவர். உப அதிபர் பொ.கைலாசபதியையும், பண்டிதமணியவர் களையும் நாம் கண்டதும் அவர்களிடத்தில் கற்றது நமது முன்னத் தவமேயாகும்.

பண்டிதமணியவர்களது நூற்றாண்டு விழாவின்போது இலங்கை அரசு அவரது பெயரில் முத்திரை வெளியிட்டது.

பண்டிதமணியவர்கள் பேசுவதிலும், எழுதுவதிலும் மிகவும் வல்லவர். எத்தனை முறை கேட்பினும் தெவிட்டாத பேச்சு அவர் பேச்சு. அவர் எழுத்துக்களோ வெறும் சொ ) கோ வைகள் அன்று. சிந்தித்துத் தெளிய வே ண்டி யவைகள். அவர் பல கவிதைகளும் எழுதி ள்ளார். பண்டிதமணியவர்களால் எழு தப் பெற்ற கந்தபுராணம் தட்ச காண்ட உரைநூல் பேராத னைப் பல்கலைக் கழகத்தில் யானைமீ ‖ ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டது.

நாட்டில் சைவ சமயத்தையும் அதற்குக் கருவியாகிய தமிழ் மொழியையும் கற்பிக்கக் கற்றுவல்ல ஆசிரியர்களையும், மதகுருமார்களை யும் உருவாக்க வேண்டும் என்னும் எண்ணத் தினால் நாவலர் பெருமானால் உருவாக்கப்பட்ட நாவலர் காவிய பாடசாலையில் கற்கும்பேறு பண்டித மணிக்கு கிடைத்தது.

ஆறடிக்கு மேலான அழகுத் தோற்றம், ஒளி சிந்தும் கண்கள், பூங்குமுதவாய், நெற்றியில் திரிபுண்டரமாகத் தரித்த விபூதிக்குறி, சந்தனத் திலகம், அதன்மேலே குங்குமம் மதுரகீதநாதம் எண்ணிலடங்காத நகைச்சுவைத்துணுக்கள் நவநவமாகத் தோன்றும் இலக்கிய நயங்கள் இலக்கணக் கட்டமைப்புக்கள் இவையே எங்கள் தமிழ்த் தந்தையின் தோற்றங்கள்


எங்கள் புறக்கண்ணிலும், அகக்கண்ணிலும் பதிந்துவிட்ட ஐயாவை என்றும் வழிபடுவதும் அவரிடம் கற்றாங்கு ஒழுகுவதுமே நாம் செய்ய வேண்டியவையாகும்.

பி.முத்துலிங்கம்,
ஓய்வு நிலை பிரதி
கல்விப் பணிப்பாளர்.

# தத்துவஞானமும் கணிதமும்

தத்துவஞானம் பிறந்த இடம் கிரேக்க தேசமாகும். தத்துவஞானம் என்பதன் பொருள் ஞானத்தை நாடல் என்பதாகும். கணிதம் என்பது சிந்தனை சார்ந்த, அனுபவம்சாரா விஞ்ஞானமாகும். கணிதமானது அட்சர கணிதம், கேத்திரகணிதம், வகையீட்டு நுண்கணிதம் ஆகிய பிரதான பிரிவுகளைக் கொண்டது. கேத்திர கணிதம் கிரேக்க நாட்டிலேயே வளர்ச்சி பெற்றது. கிரேக்க தத்துவஞானி பிளேட்டோ கலைக் கல்லூரி ஒன்றை நிறுவினார். அதன் நுழைவாயிலில் "கேத்திரகணிதம் அறியாதவன் இந்தக் கலைக் கல்லூரியில் நுழையாதிருப்பானாக" என்ற வாசகத்தைப் பொறித்தார். இதிலிருந்து தத்துவ ஞானத்துக்கும், கணிதத்துக்கும் இடையேயான தொடர்பை ஊகித்துக் கொள்ளலாம்.

கணிதத்தைக் கற்பதன் மூலமே தர்க்க ரீதியான சிந்தனையை வளர்க்க முடியும். பிளேட்டோவின் மாணவனான அரிஸ்டோட்டில் என்பவரே தர்க்கவியலின் தந்தை எனப் போற்றப் படுகின்றார். இவரே தர்க்கவியல் என்னும் நூலை எழுதினார். இனி மறுமலர்ச்சிக் காலத்தை நோக்கும்போது பிரான்சிய தத்துவஞானி ஒருவர் உடல், மனம் என்ற இருமைவாத தத்துவத்தை எடுத்துச் சொன்னார். அவரே அட்சர கணிதத்தையும், கேத்திர கணிதத்தையும் இணைத்தார்.



அடுத்து ஜேர்மன் தத்துவஞானி ஒருவர் மொனட் என்னும் தத்துவத்தைக் கண்டறிந்தார். ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு உயிரும் ஒரு மொனட் என்றார். மொனட் என்பது அதி உன்னதமான, அழகான, அதி அற்புதமான ஒன்றாகும். நவீன விஞ்ஞானத்தின் தந்தை எனப் போற்றப்படுகின்ற சேர் ஐசாக் நியூட்டன் என்பவர் வகையீட்டு நுண்கணிதத்துக்குப் பெரும் பங்காற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர் எழுதிய நூல் கணிதத்துறையில் அற்புதமான ஒன்றாகும்.

பொதுவுடைமைக் கோட்பாட்டின் மூல கர்த்தாவாகிய கார்ல் மார்க்ஸ் சிறந்த செயலூக்கம் உள்ள தத்துவ ஞானியாக போற்றப் படுகின்றார். தத்துவஞானி பேட்டன் ரஸல் தனது "மேலை நாட்டுத் தத்துவம்" என்ற நூலில் பொதுவுடைமைச் சித்தாந்தம் என்பது ஒரு கணித ரீதியான உருவாக்கம் என்கின்றார். இங்கிலாந்தின் அரசியல் பொருளாதாரத்தை ஆராய்வதற்காக மார்க்ஸ் வகையீட்டு நுண் கணிதத்தைக் கற்றார்.

20ஆம் நூற்றாண்டில் பிரித்தானியாவில் வாழ்ந்த தர்க்கவியல் அணுவாதத்தின் தந்தையான பிரபல தத்துவஞானி பேட்டன் ரஸல் என்பவர் கணிதவியலாளர் வைட் ஹெட் என்பவருடன் சேர்ந்து "பிறின் சிபியா மதமற்றிகா" என்னும் நூலை எழுதினார்.

குறியீட்டு அளவை இயலின் தந்தை இவரே எனப் போற்றப்படுகின்றார். 20 ஆம் நூற்றாண்டில் பிரபல பௌதிகவியல் விஞ்ஞானி அல்பேர்ட் ஐன்ஸ்டீன் மீது கேத்திர கணித நூல் ஒன்றே கணிதம் தொடர்பான தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர் தனது சார்பு வேக அணுசக்தி கோட்பாடுகளை உருவாக்குவதற்கு கணிதமே அடித்தளமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

அல்பேர்ட் ஐன்ஸ்டீன் இந்தப் பிரபஞ்சத்தை முழுமையாக பார்த்தமைக்கும், முப்பரிமாணத்திலிருந்து, நாற்பரிமாணத்துக்கு அகல் விரிவாக சென்றமைக்கும், அவர் இளமையில் கற்ற கேத்திர கணிதமும் ஒரு காரணமாக இருக்கலாம்.

இந்தக் கட்டுரை ஆசிரியரின் நோக்கம் கணிதம், தத்துவம் தொடர்பான விழிப்புணர்வை ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்துவதேயாகும். இன்று கணிதத்தை தத்துவார்த்தமாக அறிவியல்பூர்வமாக கற்கும், கற்பிக்கும் பாங்கு குறைவடைந்துள்ளது. குறுக்கு வழியிலேயே கணிதத்தை கற்க முனைகின்றார்கள்.

அல்பேர்ட் ஐன்ஸ்டீன் இந்தப் பிரபஞ்சத்தை முழுமையாக பார்த்தமைக்கும், முப்பரிமாணத்திலிருந்து, நாற்பரிமாணத்துக்கு அகல் விரிவாக சென்றமைக்கும், அவர் இளமையில் கற்ற கேத்திர கணிதமும் ஒரு காரணமாகவிருக்கலாம்.

எனவே ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஏனையோர் கணிதத்தில் பொதிந்திருக்கும் தத்துவம், இயங்கியல் என்பவற்றை புரிந்து அதன்படி கற்றால் நாமும் அறிவுச் சமுதாயத்தின் பங்காளிகளாவோம்.



# ராஜீவ் கொலைக் குற்றவாளிகளின் விடுதலை விசாரணை ஜூலை 7 இல்

புதுடில்லி, ஜூன் 27
இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டவர்களை விடுதலை செய்வது குறித்த வழக்கை இந்திய உயர்நீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு எதிர்வரும் ஜூலை மாதம் 7ஆம் திகதி விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த ஏப்ரல் மாதம் இந்த வழக்கு தொடர்பான விசாரணையில், அரசியல் சாசன அமர்வு இந்த வழக்கை மேற்கொண்டு விசாரிக்கும் என்று அப்போது இந்திய உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியாக இருந்த சதாசிவம் தலைமையிலான அமர்வு கூறியது.
இதனைத்தொடர்ந்து நேற்று வியாழக்கிழமை வெளியிடப்பட்ட தகவலில், இதன் மீதான விசாரணை எதிர்வரும் ஜூலை மாதம் 7ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படுமென அறிவிப்பு வெளியாகியுள்ளது.
ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டவர்களை விடுதலை செய்ய தமிழக அரசு எடுத்த நடவடிக்கைகளுக்கு எதிராக மத்திய அரசு தாக்கல் செய்த மனுவில், மரண தண்டனையைக் குறைக்க மனுக் கொடுத்த மூவரும் விடுதலை தொடர்பில் எந்தவிதமான கோரிக்கையையும் முன்வைக்காத போது எந்த அடிப்படையில் தமிழக அரசு அவர்களை விடுதலை செய்ய நட வடிக்கை எடுத்தது என்று கேள்வி எழுப்பப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

## பாரதிய ஜனதாக் கட்சியின் தேசியத் தலைவர் அமித் ஷா

புதுடில்லி, ஜூன் 27
பா.ஜ.க பொதுச் செயலாளர் அமித் ஷா, அக்கட்சியின் தேசியத் தலைவராகப் பதவி உயர்த்தப்படுவது ஏறத்தாழ உறுதியாகிவிட்டது.
இதற்கான அதிகார பூர்வ அறிவிப்பு எந்தநேரத்திலும் வெளியாகலாம் எனக் கட்சி வட்டாரம் தெரிவிக்கின்றது.
பிரதமர் நரேந்திர மோடியின் நெருங்கிய நண்பரான அமித் ஷா உத்தரப்பிரதேச பா.ஜ.க பொறுப்பாளராக இருக்கிறார்.
மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க உத்தரப் பிரதேசத்தில் 71 இடங்களை கைப்பற்றியது என்பது கவனிக்கத்தக்கது.
மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவின் அமோக வெற்றிக்குப் பின்னர் கட்சித் தலைவர் ராஜ்நாத் சிங் உள்துறை அமைச்சரானார்.
அதன் தொடர்ச்சியாக, அடுத்த தலைவர் யார் என்பது குறித்து பா.ஜ.கவின் மூத்த தலைவர்களுடன் பல்வேறு கட்டங்களாக ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.
ஆர்.எஸ்.எஸ். தலைவர்களிடமும் ஆலோசிக்கப்பட்டது. ஜே.பி. நட்டா, ஓம் மதூர் போன்ற மூத்த தலைவர்கள் பெயர்


அமித் ஷா

களும் பரிசீலிக்கப்பட்டன.
பிரதமர் நரேந்திர மோடி குஜராத்தைச் சேர்ந்தவர். அமித் ஷாவும் குஜராத்தைச் சேர்ந்தவர். அமித்ஷா பா.ஜ.க தலைவராக்கப்பட்டால், பிரதமரும், கட்சித் தலைவரும் ஒரே மாநிலத்தைச் சேர்ந்தவர்களாகவே இருப்பார்கள் என சலசலப்பு ஏற்பட்டது. இருப்பினும், பிரதமரும், அமித்ஷாவும் ஒரே மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்ற சர்ச்சை நிச்சயமாக அவரது பதவி அடுத்த நிலைக்கு உயர்த்தப்படுவதற்கு ஒரு தடையாக இருக்காது என மூத்த தலைவர் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார். (த)


பங்களாதேஷுக்குப் பயணமாகியுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஷ் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (த)

## அமைச்சர்கள் எவரும் கார் வாங்கக்கூடாது

### மோடி அதிரடி உத்தரவு

புதுடில்லி, ஜூன் 27
அமைச்சர்கள் எவரும் புதிய கார்களை வாங்க கூடாது என இந்திய பிரதமர் நரேந்திர மோடி உத்தரவிட்டுள்ளார்.
அண்மையில் மத்திய அரசின் திறைசேரி காலியாக இருப்பதாகவும், அதற்கு ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசே காரணம் எனவும் மோடி குற்றம் சாட்டியிருந்தார்.
எனவே நாட்டின் நிதி நிலைமையைச் சரி செய்யச் சில கசப்பான முடிவுகளை நடைமுறைப்படுத்தவேண்டும் என அவர் கூறியிருந்தார்.
ரயில் கட்டணம், சர்க்கரை மற்றும் சமையல் எரிவாயு உள்ளிட்ட அனைத்தும் விலை உயர்ந்து நாட்டின் மக்களைக் கசப்பான அனுபவம் பெறச் செய்துள்ளன.
இந்நிலையில் மக்களின் நிலை இவ்வாறு உள்ளதால், இனி அமைச்சர்களும் புதிய கார் வாங்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
மேலும் ஒரு லட்சத்துக்கும் அதிகமாக செலவழித்தால் அதற்கு அமைச்சர்கள், பிரதமர் அலுவலகத்திலிருந்து முன் கூட்டியே ஒப்புதல் பெறவேண்டும் என மோடி உத்தரவிட்டுள்ளார் எனப் பிரதமர் அலுவலகத் தகவல்கள் கூறுகின்றன. (த)

## சென்னை வருகிறார் மோடி


நரேந்திர மோடி

புதுடில்லி, ஜூன் 27
பிரதமர் நரேந்திர மோடி சென்னைக்கு வருவதையொட்டி சென்னை விமான நிலையத்தில் 5 அடுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
பிரதமர் மோடி, எதிர்வரும் 29ஆம் திகதி, பிற்பகல் ஒரு மணிக்கு டில்லியில் இருந்து தனி விமானத்தில் சென்னை வருகிறார்.
பின்னர், மாலை 3.30 மணிக்குத் தனி விமானத்தில் மீனம்பாக்கம் பழைய விமான நிலையம் வந்து சேரும் அவருக்கு முக்கிய பிரமுகர்கள் வரவேற்பு அளிக்கின்றனர்.
இதையடுத்து, பிரதமர் நரேந்திரமோடி தனி ஹெலியில் ஸ்ரீஹரிகோட்டாவுக்கு புறப்பட்டுச் செல்கிறார்.
ஸ்ரீஹரிகோட்டாவில் எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை பி.எஸ்.எல்.வி. சி-23 ரொக்கெட் காலை 9.43 மணிக்கு விண்ணில் ஏவப்படவுள்ளது.
இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காகவே மோடி சென்னை வந்து ஸ்ரீஹரிகோட்டாவுக்குச் செல்லவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## ஒபாமாவை முந்துகிறார் மோடி

புதுடில்லி, ஜூன் 27
டுவிட்டரில் அமெரிக்க அதிபர் ஒபாமாவை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி முந்தியுள்ளார்.
டுவிட்டரில் உள்ள தலைவர்களில் அமெரிக்க அதிபர் ஒபாமாவைப் பின் தொடர்பவர்கள் எண்ணிக்கையே இதுவரை அதிகமாக இருந்து வருகிறது.
ஆனால், அவரை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விரைவில் மிஞ்சிவிடுவார் என்று ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.
பர்சன் மார்ஸ்டெல்லர் என்ற குளோபல் பப்ளிக் ரிலேஷன்ஸ் மற்றும் கம்யூனிகேஷன்ஸ் என்ற நிறுவனம் தனது ஆய்வில் இதனைத் தெரிவித்துள்ளது.
டுவிட்டர் தளத்தில் அதிக நபர்கள் பின் தொடரும் உலகத் தலைவர்கள் பட்டியலில் அதிபர் ஒபாமா முதலிடம் வகிக்கிறார். 5ஆவது இடத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளார்.
மோடியைப் பின் தொடர்பவர்கள் எண்ணிக்கை 49,56,244, அமெரிக்க அதிபர் ஒபாமாவைப் பின் தொடர்பவர்கள் எண்ணிக்கை 49,73,061. ஆகவே இடைவெளி குறைந்து வருவதால் விரைவில் நரேந்திர மோடியை பின் தொடர்பவர்கள் எண்ணிக்கை ஒபாமாவைக் கடந்து சென்று முதலிடம் வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த)

## அம்மா மருந்தகங்கள் திறந்தார் ஜெயலலிதா

சென்னை, ஜூன் 27
கூட்டுறவுத் துறையின் சார்பில் நியாயமான விலையில் தரமான மருந்துகளை விற்பனை செய்யும் வகையில் காஞ்சிபுரம் மாவட்டம், நங்கநல்லூர் கூட்டுறவுப் பண்டக சாலையில் 10 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள அம்மா மருந்தகத்தைத் தமிழக முதல்வர் ஜெயலலிதா திறந்து வைத்தார்.
மேலும், 90 லட்சம் ரூபா செலவில் கடலூர், ஈரோடு, மதுரை, சேலம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 9 அம்மா மருந்தகங்களையும் அவர் திறந்து வைத்தார்.
இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசு செய்திக் குறிப்பில்: 'நியாயமான விலையில் தரமான மருந்துகளை விற்பனை செய்யும் வகையில் கூட்டுறவுத் துறையால் புதிதாக அம்மா மருந்தகங்கள் தொடங்கிட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.
நேற்றுத் திறந்து வைக்கப்பட்ட அம்மா மருந்தகங்கள், மக்கள் அதிகம் வந்து செல்லும் இடங்களான பஸ் நிலையங்கள், சந்தை போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. (த)

# தோல்விக்கு முழுக் காரணம் ஸ்டாலினின் தலைமையே

### தி.மு.க எம்.பி குற்றச்சாட்டு

சென்னை, ஜூன் 27
தி.மு.க., நடந்து முடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் சந்தித்த படுதோல்விக்கு முக்கிய காரணம், கட்சியின் பொருளாளர் மு.க.ஸ்டாலினின் பிரசார உத்தி மற்றும் தலைமையே என்று குற்றஞ் சாட்டுகிறார், தி.மு.க மாநிலங்களவை உறுப்பினர் கே.பி.ராமலிங்கம்.
இந்தியாவில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல்களில், தி.மு.க சந்தித்த படுதோல்வியை அடுத்து, கட்சித்தலைமை பல முக்கிய கட்சிப் பிரமுகர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது.
இந்த ஒழுங்கு நடவடிக்கைக் கடிதம் அனுப்பப்பட்ட தி.மு.க மாநிலங்களவை உறுப்பினரான, கே.பி.ராமலிங்கம் இது குறித்து கருத்து வெளியிடும் போது,
தனது தொகுதியான நாமக்கல்லில் மட்டும் தோற்றிருந்தால், அதற்கு தன்மீது பொறுப்புச் சுமத்த முடியும், ஆனால், கட்சி மாநிலம் முழுவதும் தோற்றிருக்கும் நிலையில், தோல்விக்கான அடிப்படைக் காரணங்களை ஆராய வேண்டும் என்றார்.


ஸ்டாலின் - கருணாநிதி

கட்சி நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றால், யார் ஆட்சி அமைப்பார்கள், யார் பிரதமர் என்பது போன்ற கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாத நிலையில் பிரசார வியூகம் வகுக்கப்பட்டது என்றார் ராமலிங்கம்.
மேலும், கட்சியின் பிரசாரத்துக்கு முழு முதல் பொறுப்பாக இருந்தவர் கட்சியின் பொருளாளர் மு.க.ஸ்டாலின் என்ற வகையில், அவரே தேர்தலின் தோல்விக்குப் பொறுப்பேற்க வேண்டும் என்றார் அவர்.
கட்சியின் தலைவர் என்று கூட்டணிக் கட்சிகள் தன்னை அங்கீகரிக்கவேண்டும் என்று ஸ்டாலின் விரும்பினார் என்றும், இதனாலேயே, விஜய்காந்த், ராமதாஸ் போன்றவர்கள் கட்சியின் கூட்டணியில் சேரத் தயக்கம் காட்டியதாகவும் அவர் கூறினார்.
மேலும், கட்சி வேட்பாளர் தேர்வு போன்றவற்றில் ஸ்டாலின் சரியான முடிவுகளை எடுக்கவில்லை என்பது ஏற்கனவே ஊடகங்களில் வந்த செய்திதான் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.
ஆனால் ஸ்டாலினை இந்த அளவுக்கு தேர்தல் குறித்த முடிவுகளில் ஆதிக்கம் செலுத்த அனுமதித்த கட்சித் தலைவர் கருணாநிதிக்கு இதில் பொறுப்பு இல்லையா என்று கேட்டதற்கு, கருணாநிதி சூழ்நிலையின் கைதியாக இருந்தார். எனவே அவருக்கு இதில் முழுப் பொறுப்பு இல்லை, ஆனால் இந்தக் கேள்வியை அவரிடம் தான் கேட்கவேண்டும் என்று கூறினார் ராமலிங்கம். (த)



சாலையோரத்தில் படுக்க வைக்கப்பட்டிருந்த மாற்றுத்திறனாளிப் பெண்ணொருவரைப் பாப்பரசர் பிரான்சிஸ் ஆசீர்வதித்துள்ளார். இத்தாலியில் உள்ள கலாப்ரி நகரில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு பாப்பரசர் பிரான்சிஸ் திரும்பி வந்துகொண்டிருந்தார். அந்தப் பாதையின் ஓரத்தில் மாற்றுத்திறனாளிப் பெண் ஒருவரை, அவரது குடும்பத்தினர் படுக்க வைத்திருந்தனர். இதனைக் கவனித்த பாப்பரசர், தனது காரை நிறுத்தச் சொல்லி அதிலிருந்து இறங்கி அப்பெண்ணை ஆசீர்வாதம் செய்ததோடு அவரது நெற்றியில் முத்தமிட்டார். (த)

## சாவிலும் ஒன்றித்த தம்பதி



வில்லியம் - லூசி

மொன்றியல், ஜூன் 27

கனடாவை சேர்ந்த தம்பதியர் சுமார் 11 மணி நேர இடைவெளியில் ஒருவர் பின் ஒருவராக உயிரிழந்துள்ளனர்.

கடந்த 54 ஆண்டுகளாகக் கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் வசித்து வந்த வில்லியம்- லூசி என்ற தம்பதியருக்கு மூன்று மகன்மார் உள்ளனர்.

மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வந்த இவர்களுக்கு புற்றுநோய் இருப்பதை மருத்துவர்கள் கண்டறிந்ததையடுத்து இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு ஒரே அறையில் சிகிச்சை பெற்று வந்தனர்.

இந்த நிலையில் கடந்த 18ஆம் திகதி 11 மணித்தியால இடைவெளியில் இவர்கள் இருவரும் உயிரிழந்துள்ளனர்.

தமது பெற்றோர்கள் மிகவும் இனிமையானவர்கள் என்றும் தம்மைச் சுற்றியிருப்போரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துவார்கள் எனவும் அவர்களது மூத்தமகன் டேவிட் தெரிவித்துள்ளார். (த)

## ஹிட்லரின் மோசடி அம்பலம்



அடோல்ப் ஹிட்லர்

பேர்ளின், ஜூன் 27

ஜேர்மன் சர்வாதிகாரியான அடோல்ப் ஹிட்லர், 17.5 மில்லியன் பவுண்ஸ் வரி ஏய்ப்பு செய்துள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தனது உருவத்துக்குக் கூடக் காப்புரிமை பெற்றார். அதனால் அவரது உருவம் பொறித்த தபால் தலைவிற்பனை மூலம் அவருக்குப் பணம்கிடைத்தது. மேலும், கூட்டங்களில் பேசுவதற்கும், பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்கும் கூடப் பணம் வசூலித்தார். ஆனால், இதற்கெல்லாம் வரி செலுத்தவில்லையாம். அவர் 17.5 மில்லியன் பவுண்ஸ் வரியை நிலுவையில் வைத்திருந்ததாகவும் தற்கொலை செய்து கொள்வதற்கு முன்பு, அவர் எழுதிய உயிலின்படி அவரது சொத்துகளின் தற்போதைய மதிப்பு 36 ஆயிரம் கோடி ரூபா என்றும் கண்டறியப்பட்டுள்ளது. (த)

## ஊதித் தள்ளும் பிரிட்டன் மாணவர்கள்

இங்கிலாந்தில் தினமும் சிகரெட் பிடிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகச் சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தக் கணக்கீட்டின் முடிவில் 16 வயதுக்கும் குறைவான மாணவர்களில் குறைந்தது 600 பேராவது தினமும் சிகரெட் பிடிப்பது தெரியவந்தது. 3.7 மில்லியன் சிறுவர்களில் 11 - 15 வயதுக்குட்பட்டவர்கள் 463 பேர் தினமும் புகைப்பிடிக்கும் பழக்கம் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

இதே அளவில் ஸ்கொட்லாந்து, வேல்ஸ், வடக்கு அயர்லாந்து பகுதிகளில் 55, 30, 19 என்ற எண்ணிக்கையிலும் உள்ளனர். பர்மிங்ஹாமில் 74,000 சிறுவர்களில் 9 பேரும், லண்டனில் 4,58,000 சிறுவர்களில் 67 பேரும் இந்தப் பழக்கம் உடையவர்களாக இருப்பது தெரியவந்துள்ளது. (த)

# ஒருங்கிணைந்த தேசமாக ஈராக் இனிமேல் இருப்பது சந்தேகமே

## ஒபாமாவிடம் கூறினார் இஸ்ரேல் ஜனாதிபதி

வாஷிங்ரன், ஜூன் 27

ஈராக் இனியும் ஒருங்கிணைந்த தேசமாக இருக்க சாத்தியம் இருப்பதாக தான் நினைக்கவில்லை என இஸ்ரேல் அதிபர் சிமோன் பெரிஸ், அமெரிக்க அதிபர் ஒபாமாவிடம் கூறியுள்ளார்.

ஈராக்கில் உள்நாட்டுப் பிரச்சினை அதிகரித்துள்ள நிலையில், அந்நாட்டு அரசியல் தலைவர்களுடன் ஐக்கிய எமிரேட்ஸ் மற்றும் இஸ்லாமிய நாடுகள் பேச்சு நடத்தி ஆலோசனை கூறவேண்டும் என அமெரிக்க அதிபர் ஒபாமா தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் இஸ்ரேல் அதிபர் சிமோன் பெரிஸ், அமெரிக்கா சென்றுள்ளார்.

அப்போது வெள்ளை மாளிகையில் ஓவல் அலுவலகத்தில், அதிபர் ஒபாமாவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

ஈராக் தற்போது பிளவுப்பட்டிருக்கும் நிலையிலிருந்து மீள



ஒபாமாவுடனான சந்திப்பில் சிமோன் பெரிஸ்

உள்நாட்டுத் தலைவர்கள் இணைந்து சுமுகமான நிலைப்பாட்டை கொண்டு வந்தால் சிறப்பாக இருக்கும் என்றே நான் எதிர்ப்பார்க்கிறேன்.

அங்கிருக்கும் 3 தரப்பினரும் இணைந்து செயற்படும் நிலையில், தகுந்த சமயத்தில் அமெரிக்காவும் தனது படைகளுடன் தயார் நிலையில் இருக்க வேண்டும். இராணுவத்தால் மட்டுமே இந்த முடிவு கொண்டுவரப் படக்கூடாது. ஆனால், ஈராக் கட்சிகள் இதனைச் செய்ய முன்வராது என்று நன்கு தெரிகிறது. ஆகையால் ஈராக் இரண்டாகப் பிரிக்கப்பட வாய்ப்பு உள்ளது இவ்வாறு பெரிஸ் அதிபர் ஒபாமாவிடம் கூறியதாகத் தகவல் வெளியாகி உள்ளது. ஒபாமா - பெரிஸ் சந்திப்பின்போது அமெரிக்காவில் இயங்கிவரும் யூத அமைப்புத் தலைவர்கள் சிலரும் உடனிருந்தனர். (த)

# நைஜீரியத் தலைநகரில் பெரும் குண்டு வெடிப்பு

## 21 பேர் பலி, 52 பேர் காயம்

அபுஜா, ஜூன் 27

நைஜிரியத் தலைநகர் அபுஜாவில் சனநெருக்கடி மிக்க மாவட்டத்தில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் 21 பேர் கொல்லப்பட்டதுடன் 52 பேருக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

வூசி மாவட்டத்திலுள்ள சந்தைக் கட்டடத்தொகுதியை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அந்த நாட்டுத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இந்தக் குண்டு வெடிப்புச் சத்தம் பல மைல்களுக்கு அப்பாலும் உணரப்பட்டதாகவும் பாரிய அளவில் புகை வெளியேறியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



குண்டுத்தாக்குதல் இடம்பெற்ற சந்தை

இந்தச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் எந்தவொரு குழுவும் இந்தத் தாக்குதலுக்கு இதுவரை உரிமை கோரவில்லை.

தலைநகர் அபுஜா மற்றும் நைஜிரியாவின் வட பிராந்தியத்தில் மதச் சார்புடைய ஆயுதக் குழுவொன்று பரவலாகத் தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

# இந்தியக் குடும்பத்தினர் மீது துப்பிய ஆஸி. இளைஞர்கள்

## மூன்று பேர் பொலிஸாரால் கைது

கான்பரா, ஜூன் 27

ஆஸ்திரேலியாவில் வாழும் இந்தியக் குடும்பத்தினர் மீது இனவெறி காரணமாக எச்சிலை உமிழ்ந்த இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் இந்திய வகை உணவுகளை விற்பனை செய்யும் உணவகம் ஒன்றை ராஜ் ஷர்மா என்பவர் நடத்தி வருகிறார். இந்த நிலையில், குயின்ஸ்லாந்தில் உள்ள தனது உணவகத்துக்கு வெளியே தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்.

அப்போது அந்த வழியே நடந்து சென்ற மூன்று இளைஞர்கள், ராஜ் ஷர்மாவின் உணவகத்தில் பணிபுரியும் ஒருவருடனும் பாதையில் சென்றவர்கள் சிலருடனும் அநாகரீகமாகப் பேசியுள்ளனர்.

இது போன்ற நிகழ்வுகள் அங்கு அடிக்கடி நடைபெறுவதால் தனது குடும்பத்தினரை அழைத்துக் கொண்டு ஷர்மா, உணவகத்தின் உள்ளே சென்றுள்ளார். அப்போது உணவகத்தின் உள்ளே நுழைந்த இளைஞர்கள், ஷர்மா மற்றும் அவரது குடும்பத்தினரை இழிவாக பேசியதோடு ஷர்மா குடும்பத்தினர் மீது எச்சிலை உமிழ்ந்துள்ளனர்.

இனவெறியை வெளிப்படுத்தும் விதமாக இடம்பெற்ற இந்தச் சம்பவம் குறித்து இப்ஸ்விச் நகர பாதுகாப்புச் சபையில் ஷர்மா முறைப்பாடு அளித்தார். அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுத்த பாதுகாப்புத் துறையினர், மூன்று இளைஞர்களையும் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

இவர்களில் இருவருக்கு பிணை வழங்கிய நீதிமன்றம், மோசமாக நடந்துக்கொண்ட ஒருவரைத் தடுத்து வைக்க ஆணை வழங்கி உத்தரவிட்டது. மீண்டும் அவரை ஜூலை 26ஆம் திகதி நீதிமன்றத்தில் முற்படுத்துமாறும் உத்தரவிட்டது. (த)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: தம்பதிகளிடையே ஒற்றுமை அதிகரிக்கும். விட்டுக்கொடுத்துப் போவார்கள். தந்தையாருடன் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். எதிர்கால முன்னேற்றத்தைக் கருதி சில முயற்சிகளை எடுப்பீர்கள்.



**இடபம்**: வெளிநாட்டுப்பயண முயற்சிகள் இனிதே நடைபெறும். சுயசார்பும் தன்னிறைவும் பெறுவீர்கள். புதிய வழக்குகளைச் சந்திக்க நேரிடலாம். நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினை நீங்கும். உடலில் சிறு சிறு உபாதைகள் ஏற்பட்டு மறையும்.



**மிதுனம்**: பதவி உயர்வு கிடைக்கும். வேலை நிமித்தமாக வெளிநாட்டுக்கு பயணம் செல்ல வேண்டி வரலாம். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அனைவருடனும் அனுசரித்து செல்வீர்கள். மிகுந்த தன்னம்பிக்கையுடையவரான உங்களுக்கு தெய்வ அனுகூலமும் சேர்ந்து இருப்பதால் சாதனைகள் புரிவீர்கள்.



**கடகம்**: நற்பலன்கள் ஏற்படவே செய்யும். அவற்றால் மனதில் உற்சாகம் பிறக்கும். சில மாற்றங்கள் வந்து சேரும். பதவி உயர்வுக்குரிய அறிவிப்பு வந்து சேரும். சிலருக்கு வெளியூருக்கு மாற்றலும் வரும். பெற்றோர் நலம் கவனிக்கப்பட வேண்டிய நாளிது. நல்ல பெயர் கிடைக்கும்.



**சிங்கம்**: மனதைச் சஞ்சலத்தில் ஆழ்த்தக் கூடாது. ஓரளவு நன்மைகள் வந்து சேரும். முயற்சிகள் அனைத்திலும் வெற்றிகள் கிடைக்கும். பதற்றத்தைத் தவிர்த்து நிதானத்தைக் கடைப்பிடியுங்கள். சிற்சில விரயங்கள் ஏற்பட்டாலும் அவை யாவுமே சுபச்செலவுகள் தான் என்பதை உணருங்கள். உங்கள் தன்னம்பிக்கை, திறமை, திறன் அதிகரிக்கும்.



**கன்னி**: ஓரிரு அதிர்ஷ்ட வாய்ப்புகளும் வந்து சேரும். எதிர்கால படிப்புகளுக்கான பணிகளை இப்போதே ஆரம்பிக்கலாம். நண்பர்கள் அனுகூலமாக இருப்பார்கள். கூடிய வரையில் அடுத்தவர் விடயங்களில் தலையிடுவதைத் தவிருங்கள். பெரியோர்களின் ஆலோசனைகளைக் கேட்டே எதையும் செய்வது நல்லது.



**துலாம்**: அரசியலில் உள்ளவர்களுக்கு பொறுப்பு வாய்ந்த பதவிகள் கிடைக்கும். மாணவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவார்கள். உத்தியோகத்தர்களுக்கு பொன்னான நாளிது. எதைத் தொட்டாலும் வெற்றிக்கனியை ருசிப்பீர்கள். எதிர்பார்த்தபடி தனவரவுகள் வந்து கொண்டிருக்கும்.



**விருச்சிகம்**: குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகன்று நிம்மதி பிறக்கும். தாய் மற்றும் தாய் வழி உறவினர்கள் மூலம் பாசம் அன்பு பெறுவீர்கள். அவர்களால் ஆதாயமும் கிடைக்கும். செல்வாக்கு உயரும். சொன்ன சொல்லைச் செயலாக்கிக் காட்டுவீர்கள். நீண்ட தூர பிரயாணங்களில் இருந்த தாமத நிலை மாறும்.



**தனுசு**: நண்பர்களால் பெருமை சேரும். உங்கள் விடாமுயற்சியால் வெற்றிகளைக் குவிப்பீர்கள். அலுவலகத்தில் கௌரவமும் செல்வாக்கும் அதிகரிக்கும். இருக்கும் பணியில் நினைத்தபடி இடமாற்றம் கிடைக்கும். தூர தேச பயணத்தை எதிர்நோக்கி இருப்பவர்களுக்கு வேலை உத்தரவாதம் கிடைக்கும்.



**மகரம்**: பொருளாதாரம் அபிவிருத்தி அடையும். கூட்டு வியாபாரம் செய்பவர்களிடத்தில் நம்பிக்கை அதிகரிக்கும். எதிலும் அடக்கமாகப் பேசுவீர்கள். எதிர்நோக்கியிருக்கும் சவால்களையும் சமாளிப்பீர்கள். சுவாரசியமான நபர்களைச் சந்திக்கும் வாய்ப்புகளைப் பெறுவீர்கள்.



**கும்பம்**: பொறுப்புகள் அதிகரிக்கும். பொறுமையால் சாதனைகள் புரிவீர்கள். எதிர்பார்த்தபடி பணம் மட்டும் கைக்கு வந்து செல்லும். எல்லா எதிர்ப்புகளையும், தடைகளையும் தாண்டிச் செல்வீர்கள். பேசப்பட்டுக் கொண்டிருந்த சுபகாரியங்களில் தோன்றிய சிக்கல்கள் விலகும்.



**மீனம்**: அரசல் புரசலாக உங்களைக் கேலி பேசியவர்கள்கூட தங்களது தவறான போக்கை மாற்றிக்கொள்வர். உங்களது நேர்மையின் மூலமாக எந்த தடங்கல்கள் வந்தாலும் சாதிப்பீர்கள். உங்களது தெய்வ பலத்தால் அத்தனை எதிர்ப்புக்களையும் சமாளிப்பீர்கள். வசதி வய்ப்புகள் அதிகரிக்கும்.

## நாளை

**ஆனி-14 சனிக்கிழமை | 28.06.2014**

திதி: பிரதமை பி.ப.03.18 வரை
நட்சத்திரம்: திருவாதிரை கா.06.41 வரை

சுபநேரம்: 02.55 - 04.25 வரை
இராகுகாலம்: 08.55 - 10.25 வரை

# விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



## ஞானமும் கர்மமும்

எண்ணத்தின் வலிமையிலிருந்து பேராற்றல் பிறக்கிறது. நுண்மையாக இருக்குமளவுக்கு ஒரு பொருள் ஆற்றல் மிக்கதாகிறது. வெளியில் புலனாகாத எண்ணத்தின் ஆற்றல் நெடுந் தொலைவில் இருப்பவர்களையும் கூடத் தூண்டும். ஏனெனில், மனம் ஒன்றே, அதேவேளையில் பலவாகவும் இருக்கிறது. உலகம் ஒரு சிலந்திக்கூடு; மனங்கள் சிலந்திப் பூச்சிகள்.

எங்கும் வியாபித்து இருக்கும் பரம்பொருளின் நன்மைகள் எவ்வளவோ, அவ்வளவே இந்தப் பிரபஞ்சம். அவரை நாம் புலன்களால் காணும்போது, இந் தப் பிரபஞ்சமாகப் புலப்படுகிறார். இது ஒரு மாயை. ஆகவே, இந்தப் பிரபஞ்சம் ஒரு பொய்த் தோற்றம்; சூரியன் காலையில் செந்நிறப் பந்தாகத் தோன்றுவது போல இதுவும் ஒரு குறையுடைய தோற்றமே. இவ்வாறே எல்லாத் தீமைகளும் கொடுமைகளும் குறைபாடுகளே; நன்மையின் தெளிவில்லாத தோற்றங்களே.

ஒரு நேர்கோட்டை நீட்டிக் கொண்டே போனால் அது ஒருவட்டம் ஆகிவிடும். நன்மையை நாடிச் செல்வோமானால் நாம் ஆன்மாவிடம் போய் நிற்போம். எல்லா ரகசியமும் நானே, கடவுளும் நானே. உடலும் நானே, மனிதனும் நானே, இந்தப் பிரபஞ்சத்தின் கடவுளும் நானே.

எதற்காக ஒழுக்கமும் தூய்மையும் தேவை? இவற்றால் ஒருவனது எண்ணம் வலிமை பெறுகிறது.

உண்மையான தன்மையை உணர்த்துவதன் மூலம் எண்ணத்துக்கு வலிமை தரும் ஒவ்வொன்றும் ஒழுக்கமே. இதற்கு மாறானதை விளைவிக்கும் ஒவ்வொன்றும் ஒழுக்கமின்மையாகும்.

ஒழுக்கத்தை அளக்கும் கருவி நாட்டுக்கு நாடு மாறுபடும்; மனிதனுக்கு மனிதன் மாறுபடும். சட்டங்களுக்கும் சொற்களுக்கும் இவை போன்றவற்றுக்கும் மனிதன் அடிமையாக இருக்கும் நிலையிலிருந்து அவன் விடுதலை பெற வேண்டும். இப்போது நாம் பெற்றிருக்கும் எண்ணம் சுதந்திர எண்ணமல்ல; ஆனால் நாம் சுதந்திரமாகும்போது, நமது எண்ணமும் சுதந்திர நிலை அடையும். இந்த உலகத்தைத் துறப்பதே துறவு. புலன்களின் மூலமே கோபமும் துன்பமும் தோன்றுகிறது. துறவு நிலை ஏற்படாத வரையில், ஆன்மாவும் அதைச் செயற்படுத்தும். விருப்பு வெறுப்பும் வெவ்வேறாகவே இருக்கும். இறுதியில் அவை ஒன்றாகும். மனிதன் ஒரு காலத்தில் விலங்காகவே இருந்தான்; பிறகு துறவு உணர்ச்சியைப் பெற்றான்.

# கைபேசிகளின் கதிர் வீச்சினால் உடலுக்குப் பாதிப்பில்லையாம்



கைபேசிகளில் இருந்து வெளியேறும் கதிர் வீச்சால் மனித உடலுக்குத் தீங்கு ஏற்படாது என்று ஆய் வில் தெரிய வந்துள்ளது. செல்லுலர் ஒபரேட்டர் அசோசியேஷன் சார்பில் மொபைல் போன்களில் இருந்து வெளியேறும் கதிர்வீச்சு குறித்து நிபுணர்கள் ஆய்வு மேற்கொண்டனர். இதில் கதிர் வீச்சால் பாதிப்பில்லை என்று அறியப்பட்டது. 'மொபைல் போன்' தொலைத்தொடர்பு கோபுரங்கள் மூலம் கதிர் வீச்சு பரவுவதாகவும், அதனால் புற்றுநோய் உள்ளிட்ட நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் ஆதாரமற்ற கருத்துக்கள் வெளியிடப்பட்டன. ஆனால் அனைத்து விஞ்ஞான பூர்வமான சோதனைகளுக்குப் பின்னர் மொபைல் போன் கதிர்வீச்சால் மனித உடலுக்கு தீங்கு எதுவும் ஏற்படாது என்று கண்டறியப்பட்டுள்ளது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 5 | 6 | | | | 1 | | |
| | | | | 7 | | 8 | | 5 |
| 8 | | 3 | 5 | | 6 | | 2 | |
| | | | 8 | | | | 5 | 2 |
| | 3 | | 2 | 4 | 1 | | 9 | |
| 4 | 8 | | | | 5 | | | |
| | 4 | | 3 | | 9 | 2 | | 1 |
| 3 | | 9 | | 1 | | | | |
| | | 5 | | | | 9 | 8 | 3 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 4 | 7 | 8 | 9 | 5 | 2 | 3 | 1 |
| 2 | 9 | 8 | 1 | 4 | 3 | 6 | 7 | 5 |
| 5 | 3 | 1 | 6 | 2 | 7 | 9 | 8 | 4 |
| 4 | 5 | 2 | 3 | 6 | 8 | 1 | 9 | 7 |
| 7 | 6 | 3 | 9 | 1 | 2 | 5 | 4 | 8 |
| 1 | 8 | 9 | 5 | 7 | 4 | 3 | 6 | 2 |
| 3 | 1 | 4 | 7 | 5 | 9 | 8 | 2 | 6 |
| 9 | 2 | 6 | 4 | 8 | 1 | 7 | 5 | 3 |
| 8 | 7 | 5 | 2 | 3 | 6 | 4 | 1 | 9 |

## கற்கைநெறிகள் ஆரம்பம்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டாம் அரையாண்டுக்கான பல்வேறு கற்கை நெறிகளை எதிர்வரும் ஆடி மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கவுள்ளது. இந்தக் கற்கை நெறிகள் யாழ்ப்பாணம், கைதடி, காரைநகர், சுன்னாகம், நல்லூர், சண்டிலிப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய தொழிற் பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளன.

இந்தக் கற்கை நெறிகளில் இணைய விரும்புபவர்கள் தங்களது அடையாள அட்டை மற்றும் கல்விச் சான்றிதழ்களுடன் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தி லுள்ள இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபை மாவட்ட செயலகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## நிர்வாகிகள் தெரிவு

சங்கானை, ஜூன் 27

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக ஆயுள்வேத பாதுகாப்புச் சபை நிர்வாகிகள் அண்மையில் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக மருத்துவர் செ.பரமசிவம்பிள்ளையும், உபதலைவர்களாக மருத்துவர் பி.கைலாயநாதனும், மருத்துவர் வெற்றிவேல் சத்திவேலும், செயலாளராக மருத்துவர் ரி.சிங்க அரியரட்ணமும், உப செயலாளராக மருத்துவர் கே.கணநாதனும், பொருளாளராக மருத்துவர் திருமதி கே.தவமணிதேவியும், கணக்காய்வாளராக மருத்துவர் நா.கணேசலிங்கநாதனும், நிர்வாக சபை உறுப்பினர்களாக மருத்துவர்கள் செ.வைத்தியலிங்கம், கோ.சிவப்பிரகாசம், எம்.சுகன்யா, எஸ்.சந்திராதேவி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ஓ-29)

* * *

வலிகாமம் வலய ஆங்கில ஆசிரியர் சங்க நிர்வாகிகள் அண்மையில் தெரிவு செய்யப்பட்டனர்.


தலைவராக திருமதி ஆர்.பகவதியும், செயலாளராக மருத்துவர் வெற்றிவேல் சக்திவேலும், உப தலைவர்களாக திருமதி எஸ்.பாலசுப்பிரமணியம், மற்றும் எம்.சிதம்பரநாதனும், உபசெயலாளராக திருமதி பி.கேசவனும், பொருளாளராக திருமதி எஸ்.ஜெயந்தனும், நிர்வாக சபை உறுப்பினர்களாக எஸ்.இரவீந்திரன், திருமதி எஸ்.மணிவண்ணன், திருமதி எம்.ஹரிகரன், திருமதி ஜெ.அபர்ணா ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஓ-29)

* * *

யாழ்ப்பாணம், ஜூன் 27

அளவெட்டி தனியார் பஸ் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் அண்மை யில் சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது.

இதன்போது தலைவராக மா.சகிக்குமார், உபதலைவராக பா.சுபாஸ்கரன், செயலாளராக ஆ.சந்திரமோகன், உபசெயலாளராக எஸ்.ஜெயக்குமார், பொருளாளராக பி.கோபிராஜ் ஆகியோரும் - நிர்வாக சபை உறுப்பினர்களாக 4 பேரும் - தெரிவு செய்யப்பட்டனர். இந்தக் கலந்துரையாடலின் போது சங்கத்தின் கையிருப்பில் இருந்து 50 ஆயிரம் ரூபா உரிமையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. (ஓ-14)



## சுற்றாடல் சார் பயிலமர்வு முகாம்

வலி.வடக்கு, ஜூன் 27

உடுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மற்றும் கிளிநொச்சி அன்னை சாரதாதேவி வித்தியாலயம் என்பன இணைந்து இரு பாடசாலைகளின் மாணவர்களுக்கும் சுற்றாடல் சார் பயிலமர்வு முகாம் ஒன்றை நடத்தியுள்ளன. தரம் நான்கு மற்றும் ஐந்தில் பயிலும் மாணவர்களுக்கே இந்தப் பயிலமர்வு நடத்தப்பட்டுள்ளது. உடுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த 40 மாணவர்களும், அன்னை சாரதாதேவி வித்தியாலயத்தைச் சேர்ந்த எண்பது மாணவர்களும் பயிலமர்வில் கலந்துகொண்டனர். இவ்வாறான பயிலமர்வுகள் மூலம் மாணவர்கள் சிறுவயதிலேயே தம்மிடையே கருத்துப் பரிமாற்றத்தை மேம்படுத்தக் கூடியதாக இருக்கும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-86)

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 27

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும், குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் குட்டிச்சுட்டி முன்பள்ளியின் விளையாட்டுவிழா நாளை மறுதினம் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிலைய முன்றிலில் இடம்பெறவுள்ளது.

இதில் முதன்மை விருந்தினராக முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.விமலநாதன் கலந்து கொள்வார். (க)

## நூல் வெளியீடு

மார்க்கண்டு அருட் சந்திரன் எழுதிய யாழ்ப்பாண நாடகப் பாரம்பரியத்தில் 'பெண் கலைஞர்கள்' என்னும் நூல் வெளியீடு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வலி.வடக்கு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறும்.

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபராகவும், வலி.வடக்கு பிரதேச செயலாளராகவும் கடமையாற்றிய அமரர் பத்தினியம்மா திலகநாயகம் போல் நினைவு நிதியத்தினரும், வலி.வடக்கு பண்பாட்டுப் பேரவையும் இணைந்து நூலை வெளியிடவுள்ளனர். நிதியத் தலைவர் ப.இராஜகோபாலன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் அறிமுக உரையை யாழ்.பல்கலைக்கழக வருகை தரு விரிவுரையாளர் இ.செல்வமனோகரனும், வெளியீட்டுரையை கிளிநொச்சி மாவட்டச் செயலக பிரதம எந்திரி ஆர்.சுரேஸ்குமாரும், ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக வருகை தரு விரிவுரையாளர் ந.கடம்பேஸ்வரனும் நிகழ்த்துவர். (வ-9)

## சுதர்சனக் கிரியா பயிற்சி நாளை

வாழும் கலைப் பயிற்சி பெற்றவர்களுக்கான சுதர்சனக் கிரியா பயிற்சி நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு மகேஸ்வரன் மண்டபத்தில் நடைபெறும். பயிற்சி எடுத்தவர்கள் வருகை தந்து பயன் பெறுமாறு என்று வாழும் கலை அமைப்பு அறிவித்துள்ளது. (ஓ)

## விபத்தில் காயமடைந்தவர் 9 தினங்களின் பின்னர் சாவு

தென்மராட்சி, ஜூன் 27

வீதி விபத்தில் சிக்கி காயமடைந்த குடும்பஸ்தரொருவர் சிகிச்சை பயனின்றி 9 தினங்களின் பின்னர் உயிரிழந்தார்.

கடந்த 18 ஆம் திகதி கொடிகாமத்துக்கு சைக்கிளில் சென்றபோது இராமாவில் கந்தசாமி கோயிலுக்கு முன்பாக டிப்பர் வாகனத்தால் மோதுண்டு காயமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

மீசாலை கிழக்கைச் சேர்ந்த சிவகுரு செல்வராசா (வயது -52) என்பவரே உயிரிழந்தவராவார்.

மரணம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். திடீர் சாவு விசாரணை அதிகாரி சி.சி.இளங்கீரன் மூலம் இறப்பு விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (வ-9)





இராணுவத்தினருக்குச் சொந்தமான பஸ் ஒன்றும் தனியார் லொறி ஒன்றும் நேற்று கோப்பாய் சந்தியில் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின. யாழ்ப்பாணத்தில் இருந்து கோப்பாய் நோக்கிச் சென்று கொண்டிருந்த லொறியும் கொக்குவிலில் இருந்து கைதடி நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவ வாகனமுமே ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின. இந்த விபத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. ஆயினும் இரு வாகனங்களும் சிறிய சேதங்களுக்கு உள்ளாகின. (ஓ-21)

## வெங்காயச் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

அளவெட்டி, ஜூன் 27

அளவெட்டி, கந்தரோடை, மல்லாகம் பகுதி விவசாயிகளில் அனேகமானவர்கள் வெங்காயச் செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர்.

சில இடங்களில் குறைந்த அளவில் குரக்கன், சாமை, கச்சான் போன்ற உப உணவுப் பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. கடந்த வருடம் மழையில்லாமையால் நெற் செய்கை நட்டத்தை ஏற்படுத்தியதாகவும் மழை பெய்யாததால் சிறுதானியப் பயிர்களான உழுந்து, பயறு, எள்ளு, சாமை போன்றவற்றை செய்கை பண்ண முடியவில்லை எனவும், அதன் காரணமாகவே அதிகளவு வெங்காய உற்பத்தியில் ஈடுபட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். (க-36)

## நெல்லியடியில் இன்று நிதியியல் குறித்து விழிப்புணர்வு நிகழ்வு

நெல்லியடி, ஜூன் 27

இலங்கை மத்திய வங்கியின் உயர் அதிகாரிகளும், இலங்கை வங்கி அபிவிருத்திப் பிரிவினரும் இணைந்து நெல்லியடி வாடிக்கையாளருக்கும் சுய முயற்சியாளர்களுக்கும் விவசாயப் பெருமக்களுக்கும் நிதியியல் சம்பந்தமான ஆலோசனைகளும் விழிப்புணர்வுகளும் ஏற்படுத்தவுள்ளனர். இந்த நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நெல்லியடி தடாங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஓ)

### கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை
திருமதி வாசுகி சுதாகரன் அவர்களின் அன்புத் தந்தை
**சுந்தரம் குணராஜா**
அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லுறவு மன்றம்,
யா/செங்குந்த இந்துக் கல்லூரி.
(49378)(10.6)

### கண்ணீர் அஞ்சலி




எமது வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவன திட்ட முகாமையாளராக கடமையாற்றும்
**செங்குட்டுவன் (சேரன்), நக்கீரன் (தலைவர்- சுகவாழ்வுக்கான பயணம்)**
ஆகியோரின் அன்புத் தந்தை
**சுந்தரம் குணராஜா**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இயக்குநர் சபையினரும், ஊழியர்களும், வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனம்.
சிவன்கோயிலடி, வட்டுக்கோட்டை.

### மரண அறிவித்தல்

**குணரத்தினம் சற்சொரூபன் (ரூபன்)**
(முன்னாள் கணினி போதனாசிரியர்)



பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணத்தினைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியினைத் தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட குணரத்தினம் சற்சொரூபன் (ரூபன்) 19.06.2014 வியாழக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.06.2014) சனிக்கிழமை ஜேர்மனி Schillerstr, 60, 72800 Eningen இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் கோயில் வீதி,
பண்டத்தரிப்பு. 077 621 5223 (49378)(4.6.3)
தகவல்: குடும்பத்தினர்.

**பார்வையிடலாம்**

நாரந்தனை வடக்கு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ள வேலைகளுக்கான கூறுவிலை கோருவதற்குக் கடந்த 24.06.2014 உதயனின் 8ஆம் பக்கத்தில் விளம்பரம் பிரசுரமாகியிருந்தது. அதன்படி வேலைகளை 06.07.2014 ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணி முதல் பி.ப.5.00 மணிவரை பார்வையிடலாம் (24.06.2014 உதயனில் பிரசுரமாகிய விளம்பரத்தில் இந்தத்திகதி தவறுதலாக பிரசுரமாகவில்லை) என்பதை அறியத்தருகின்றோம்.
தொடர்புகளுக்கு: 077 778 0479

கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுண்டு (2 கொரிந்தியர் 3:17)
**விடுதலை ஆராதனை (சுகமளிக்கும் ஆராதனை)**
தீராத வியாதியா? தொழில் நஷ்டமா?
கடன் தொல்லையா? குடும்ப பிரச்சினையா?
பாவக் கட்டா? பிசாசின் தொல்லையா?
பில்லி சூனியமா? திருமணமாகவில்லையா?
பிள்ளையில்லையா?
**வாருங்கள் இயேசு உங்களை விடுதலையாக்குவார்.**
தேவசெய்தி: போதகர் S.V.M. பினெகாஸ்
கிழமை : வெள்ளி 4 மணி
திகதி : 27.06.2014
**தேவ வசன சபை**
THE WORD OF GOD CHURCH அட்டகிரி வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.
(49377)(10.6.3) தொடர்புகளுக்கு: 077 154 2245

**கடை வாடகைக்கு**

திருநெல்வேலி சந்திக்கு அருகில் ஆடிய பாதம் வீதியில் 16'x70' அளவை கொண்ட (இணைந்த குளியலறை) 6 கடைகள் வாடகைக்குண்டு. முழுவதும் மாபிள் பதித்தது. வாகன தரிப்பிட வசதியுண்டு.
தொ.பே: 077 668 1547

## ஜி.சீ.ஈ. உயர்தர கணித விஞ்ஞான மாணவருக்கு முன்னோடிப் பரீட்சை

கொழும்பு, ஜீன் 27

மொறட்டுவைப் பல்கலைக் கழக பொறியியல்பீட தமிழ் மாணவர்களால் நூலகம் நிறுவனத்தின் பள்ளிக்கூடம் நிகழ்ச்சித் திட்டத்துடன் இணைந்து வருடாந்தம் நடத்தப்படும் ஜி.சீ.ஈ. உயர்தர கணித, விஞ்ஞான மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை, இம்முறை நாளை சனிக்கிழமை தொடக்கம் அடுத்த மாதம் 13 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இந்த முன்னோடிப் பரீட்சை 5 ஆவது முறையாக 14 மாவட்டங்களில் தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடத்தப்படவுள்ளது.

பரீட்சை வினாத்தாள்கள் திருத்தப்பட்டு, மாணவர்களுக்கு புள்ளித்திட்டத்துடன் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் இசற்-புள்ளி அடிப்படையில் மாவட்ட ரீதியாகவும், அகில இலங்கை ரீதியாகவும் வரிசைப்படுத்தப் பட்டு பெறுபேறுகள் இணையத்தளம் மற்றும் ஊடகங்கள் வாயிலாகவும் வெளியிடப் படும்.

மேலும் கல்வி நிலையில் பின்தங்கிய பிரதேசங்களில் மாணவர்களின் நன்மை கருதி வினாத்தாள் தொடர்பான கலந்துரையாடல்களும் ஒழுங்கு செய்யப்படவுள்ளன.

பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மாணவர்களும் பாடசாலைகளிலோ தனியார் கல்வி நிலையங்களிலோ பரீட்சையை நடத்த விரும்புவோரும் Web- www.moracta mils. org e-mail-moraet amils2 016gmail. com என்ற இணையத்தள முகவரி, ஈமெயில் முகவரிகளுடன் தொடர்பு கொள்ளலாம். (வ)

# வேண்டாம் மிருகவதை

## நல்லை ஆதீன முதல்வர் வேண்டுகோள்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற சிவபெருமான் ஆன்மாக்கள் மீது கொண்ட கருணையால் அவைகள் உய்யும் பொருட்டு ஐந்தொழில்களையும் புரிகின்றார்.

அந்த வகையில் இறைவனால் படைக்கப்பட்ட உயிர்களைத் துன்புறுத்துவதற்கு மனிதப் பிறவி எடுத்த எமக்கு எந்தவிதமான அதிகாரமுமில்லை.

இவ்வாறு தெரிவித்துள்ளார் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிய ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்.

ஆண்டவன் படைப்பில் சகோதரத்துவம், இரக்கம், கருணை, அன்பு, அகிம்சை, ஆதரவு யாவும் பேணப்பட வேண்டும்.

புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்துள்ள நாம் பிற உயிர்கள் மேல் இரக்கம் காட்ட வேண்டுமே தவிர அரக்க குணம் காட்டக்கூடாது.

மனிதன் மனிதனாக வாழ வேண்டுமேயொழிய மிருகமாக வாழ்தல் கூடாது. மனித உருவிலிருந்து கொண்டு மாபாதகச் செயலைச் செய்தலாகாது. ஆன்மா லயப்படும் இடம்தான் ஆலயம். இங்கே ஆகமத்துக்குப் புறம்பான வழிபாட்டு முறை விரும்பத்தக்கதல்ல.

இறைவன் குடிகொண்டிருக்கும் கோயிலை நாம் புனிதமாக வைத்திருக்க வேண்டும்.

ஆன்மாக்களைத் துன்புறுத்தல் கூடாது.

ஆகவே, உயிர்கள் மீது பரிவும் கருணையும் காட்டி வாழ்தலே சிறப்பைத் தரும்.

எமது காலில் ஓர் ஊசி தைத்தால் 'ஓ'வென்று அலறித் துடிக்கின்றோமே! அதுபோல் தானே மற்ற உயிர்களுக்கும் இருக்கும். ஆதலால் கருணையோடு வாழ்ந்து உயிர்களிடம் பாசமும் நேசமும் காட்டி வாழத் தலைப்படுவோமாக என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## நெல்லியடி நகர அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல்

வடமராட்சி, ஜீன் 27

நெல்லியடி நகர அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையில், சபையின் தவிசாளர் பொ. வியாகேசு தலைமையில் இடம்பெறவுள்ளது.

கலந்துரையாடலில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொண்டு ஆலோசனை வழங்குமாறு தவிசாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-173)


### கண்ணீர்க் காணிக்கை

எமது பாடசாலையின் ஆசிரியர் திருமதி வ.அம்பிகைபாலன்
அவர்களின் பாசமிகு தந்தை
**சுந்தரம் குணராஜா**
அவர்களின் பிரிவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, ஆத்மாசாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

ஆசிரியர் கழகம், யா/பெரியபுலம் ம.வி



### மரண அறிவித்தல்

**சின்னத்துரை ஆனந்தநடராஜா**
(ஓய்வுபெற்ற பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்)



யாழ்ப்பாணம், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை ஆனந்தநடராஜா 25.06.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- சிவக்கொழுந்து தம்பதியரின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், சுதாகர் (கனடா), மயூறினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சுஜித்தா (கனடா), சஞ்சுதன் (கனடா), இரதீஸ்கண்ணா, கீர்திகா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற ஆனந்தலக்சுமி மற்றும் தியாகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான தங்கரத்தினம், நடேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஹேனு ஷாவின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற குருபாலசிங்கம் மற்றும் கந்தையா இராசரத்தினம், காலஞ்சென்ற யோகேஸ்வரி மற்றும் கனகரட்ணம், தயாபரன், கேசவன், தில்லைநாதன், காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன் மற்றும் பானுமதி(கனடா), காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை இராசரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், நாகமுத்து இராசரத்தினம், நித்தியானந்தன் ஆகியோரின் சகலனும், சுகந்தினி (கொழும்பு), குருபரன்(கனடா), குணபரன் (கனடா) ஆகியோரின் சிறியதந்தையும், கேமதிவ்யம்(கனடா), கோபிசன் (கனடா), லோகிசன் (கனடா) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.06.2014 ஞாயிற்றுக் கிழமை மு.ப.10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

36/22, ஆசிரி வீதி, தோணிக்கல், வவுனியா.
T.P:024 222 5809, 0015142907842

தகவல்: மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.
(48357) (4.6.3)


## இலவச பயிற்சி வகுப்புகள்

தென்மராட்சி, ஜீன் 27

தென்மராட்சி கலை மன்றத்தினர் சாவகச்சேரி அம்பிகா மருந்தக அனுசரணையுடன் சங்கீதம், பண்ணிசை ஆகிய இலவச பயிற்சி வகுப்புகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளனர்.

பயிற்சி வகுப்புகளில் இணையவுள்ளோர் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு மன்றத் தலைவர் க.மோகனராஜலிங்கம் அறிவித்துள்ளார்.

மன்றத்தால் ஏற்கனவே நடனம், ஓர்கன், மிருதங்கம், கிற்றார் ஆகிய வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)


### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி நளாயினி ஆனந்தசெந்தூரன்
அவர்களின் அன்பு மாமனார்
**சுந்தரம் குணராஜா**
அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (49381) (45.6.3)

**யாழ். இந்து ஆரம்ப பாடசாலை சமூகம்.**


## விவசாய விருது வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், ஜீன் 27

விவசாயம் செய்வோர் மற்றும் கால்நடை வளர்ப்போரை ஊக்குவிக்கும் முகமாக ஆண்டுதோறும் மத்திய விவசாய அமைச்சும் தேசிய விவசாய வியாபார சபையும் இணைந்து நடத்தும் விவசாய விருது வழங்கும் வைபவம் இந்த ஆண்டும் நடத்தப்படவுள்ளது.

நாடளாவிய ரீதியில் சிறந்த விவசாயிகளைக் கௌரவிப்பதற்கான இந்த நிகழ்வை நடத்தி வருகின்றன. அந்த வகையில் இந்த ஆண்டுக்கான விவசாய விருதுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சகல பயிர்ச் செய்கையாளர்கள் மற்றும் கால்நடை வளர்ப்போரும் இந்த விருதுக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பப் படிவங்களை அந்தந்தப் பகுதி விவசாயப் போதனாசிரியரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (ஓ)


### 31ஆம் நாள் நினைவஞ்சலி

**திருமதி செபமாலை அலோசியஸ்**

அன்னைமடியில் 20.10.1956

மண்ணின் மடியில் 28.05.2014



எமது குடும்ப விளக்கின் மரணச் சடங்கிலும் இறுதிக்கிரியைகளிலும் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று (27.06.2014) வெள்ளிக்கிழமை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பாஷையூர்.
077 889 4248

கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரிகள்.
(47128)(45.6.3)



### மரண அறிவித்தல்

**சுப்பிரமணியம் தற்பரன்**



மடத்தடி, அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தற்பரன் 24.06.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் -சகிலாதேவி தம்பதியரின் அன்பு மகனும், கஜேந்திரன் (அச்சுவேலி), தனஞ்சயன்(பிரான்ஸ்), நிதர்சன்(பிரான்ஸ்), மகிதனன்( A/L 2014, யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), காயத்திரி (தரம்-10, புனித/சென். திரேசாள் மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சரோஜாதேவி (பிரான்ஸ்), கௌசல்யா தேவி(ஜேர்மனி), கயல்விழி (ஜேர்மனி) ஆகியோரின் பெறாமகனும், மதுமிதா, விதுசிகா, நிஜிகா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பயிற்றோலை அச்சுவேலி தெற்கில் அமைந்துள்ள வீட்டில் நாளை மறுதினம் (29.06.2014) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, மு.ப. 10 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பயிற்றோலை, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. (49364)(4.6.3) தகவல்: குடும்பத்தினர்.


## யெகோவாவின் சாட்சிகளின் வட்டார மாநாடு

யாழ்ப்பாணம், ஜீன் 27

"கடவுளுடைய வார்த்தை கற்பிக்கப் பிரயோசனமுள்ளது" என்ற தலைப்பிலான இருநாள் மாநாடு எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 9.40 மணி தொடக்கம் பிற் பகல் 3.55 வரை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும். (வ)


### கண்ணீர் அஞ்சலி



யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை தரம் - 1B இன் வகுப்பாசிரியை
திருமதி நளாயினி ஆனந்த செந்தூரன்
அவர்களின் பாசமிகு மாமனார்
**சுந்தரம் குணராஜா**
அவர்கள் 25.06.2014 புதன்கிழமை சிவபதமடைந்த செய்தி கேட்டு கவலையடையும் அதேவேளை, அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரின் ஆத்மா நல்லவண்ணம் சாந்தி பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

தரம் -1B, மாணவர்களும், பெற்றோரும்.
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை,
(49365) (12.3.6)

**J.C.B (பைக்கோ) வாடகைக்கு**



குறிப்பு : போக்குவரத்துக் கூலி அறவிடப்பட மாட்டாது.

தொடர்பு : 021 224 1466 (யாழ்ப்பாணம்),
077 7712 482 (சுன்னாகம்),
077 9847285 (பருத்தித்துறை),

**புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்**

(49380) (10) 207, K.K.S. வீதி, சுன்னாகம்.

**உதயன்**

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

**நாய்க்குட்டி விற்பனைக்கு**

2 மாதம் நிரம்பிய உயர்தர ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு.

தொடர்பு: 077 5877 179 (49385) (10)

**YOGIS**

Institute of Beauty
Therapy, Hair Dressing & Home Science (Pvt) Ltd

குறுகிய கால அழகுக்கலை பயிற்சிகள்
கேக் ஐசிங் பயிற்சிகள்
புதிய வகுப்புக்கள் 28.06.2014
ஆரம்பமாகவுள்ளன.
சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

Regd No: PV 98755 [சி/10160] [4.3.6]

**Mrs.Yogini Shanmuganathan**

Diploma in Aesthetics & Cosmetology (India)
Diploma in Advanced Bridal Make-up& Character Make-up (India)
Diploma in Advanced Modern Make -up Course with Air Brush Make-up (India)
Diploma in Home Economics (Srilanka)
T.P: 077 716 4923, 021 222 2796


## முதியோருக்கு விநாடி வினாபோட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்27

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினர் இந்த வருட சர்வதேச முதியோர் தினத்தையொட்டி அனைத்துப் பிரதேச முதியோர்களுக்கும் இடையிலான விநாடி வினாப் போட்டியை ஜூலை மாதம் யாழ்ப்பாணத்தில் நடத்தவுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள மாவட்ட மட்ட விநாடி வினாப் போட்டிகளில் கலந்து கொள்ளக் கூடிய தென்மராட்சி பிரதேச முதியோர்கள் தமது பெயர் விவரங்களை தென்ம ராட்சி பிரதேச செயலக கிராம சேவகர் பிரிவில் எதிர் வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யுமாறு தென்மராட்சிப் பிரதேச முதியோர் பேரவைத் தலைவர் மருத்துவர் எஸ்.எஸ். அருளானந்தம் அறிவித்துள்ளார்.

மாவட்ட மட்ட முதியோர்களுக்கான விநாடி வினாப் போட்டிகள் மாகாண, தேசிய மட்டங்களில் நடத்தப்பட்டு கொழும்பில் நடைபெறும் சர்வதேச முதியோர் தின நிகழ்வில் பரிசில்கள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## டெங்கு விழிப்புணர்வு ஓவியப் போட்டி முடிவுகள்

தென்மராட்சி, ஜூன் 27

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் இடை நிலைப் பிரிவு மாணவர்களிடையே நடத்தப்பட்ட டெங்குவிழிப்புணர்வு ஓவியப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப் பட்டுள்ளன. சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரும் தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையினரும் இணைந்து ஓவியப் போட்டியைநடத்தினர். வெற்றிபெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

முதலாம் இடம் - மோகதீஸ்வரி (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), இரண்டாம் இடம் - இ.செந்தாழன் (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.), மூன்றாம் இடம் -ம.டினுஜா (உசன் இராம நாதன் ம.வி.), ஆறுதல் பரிசில்கள் -ச.லதுஷிகன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கோ. டெல்சிகா (உசன் இராம நாதன்ம.வி.), பா.சுகிர்தன் (வரணி மத்திய கல்லூரி), யோ.யதுஷன் (மீசாலை வீர சிங்கம் மத்திய கல்லூரி), பி.சிந்துஷன் (கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி). (வ-9)

## மூங்கிலாறு மருத்துவமனை புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

மூங்கிலாறு பிரதேசத்துக்கான மருத்துவமனையின் புனரமைப்புச் செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள மூங்கிலாறு கிராமத்தில் இயங்கி வரும் மருத்துவமனை, தற்போது சொந்த இடத்தில் அல்லாது தற்காலிகமாக ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இந்த நிலையில் அந்தப் பிரதேச மருத்துவமனைக்கான நிரந்தரக் கட்டடத்தைச் சுகாதார அமைச்சின் நிதியுதவியுடன் 20 மில்லியன் ரூபா செலவில் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (வ-55)


**வாக்களிப்பதற்கு பதிவு செய்யப்பட்டிருத்தல் கட்டாயத் தேவைப்பாடாகும்**

வாக்கு உங்கள் உரிமை



2014 வருடாந்த தேருநர் இடாப்பு மீளாய்வின் களக் கணக்கெடுப்புப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

தேருநர்களைக் கணக்கெடுக்கும் படிவத்தை இதுவரை பூர்த்தி செய்து கையளிக்கவில்லையெனின்

உடனடியாக செயற்படவும்

தேருநர்களைக் கணக்கெடுக்கும் படிவங்களை சரியாகப் பூர்த்தி செய்து பிரதேசத்தின் கிராம அலுவலரிடம் அல்லது தான் வதியும் மாவட்டத்தின் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவிப் பதியும் அலுவலரிடம் உடனடியாகக் கையளிக்கவும். படிவங்கள் கிடைக்கப்பெறவில்லையாயின் உடனடியாக மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தை அல்லது கிராம அலுவலரை விசாரிக்கவும்.

2014 ஆண்டிற்காக நீங்கள் வாக்காளரொருவராகப் பதிவு செய்யப்பட்டுள்ளதை நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள்.

தொலைபேசி இல.: 011 2868441,42,43
மின்னஞ்சல் : info@slelections.gov.lk
இணையத்தளம் : www.slelections.gov.lk

தேர்தல்கள் ஆணையாளர்
தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை, இராஜகிரிய.
27.06.2014 (C/14811)(10)

**மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்கள்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு மாநகர | 011-2872247 | அம்பாந்தோட்டை | 047-2256248 | குருநாகல் | 037-2222369 |
| கொழும்பு மாவட்ட | 011-2867472 | யாழ்ப்பாணம் | 021-2222655 | புத்தளம் | 032-2265246 |
| கம்பஹா | 033-2222047 | கிளிநொச்சி | 021-2285664 | அநுராதபுரம் | 025-2222551 |
| களுத்துறை | 034-2222266 | மன்னார் | 023-2222289 | பொலன்னறுவை | 027-2222012 |
| கண்டி | 081-2233187 | வவுனியா | 024-2222311 | பதுளை | 055-2222424 |
| மாத்தளை | 066-2222422 | முல்லைத்தீவு | 024-3248356 | மொனராகலை | 055-2276315 |
| நுவரெலியா | 052-2222325 | மட்டக்களப்பு | 065-2224312 | இரத்தினபுரி | 045-2222023 |
| காலி | 091-2234028 | அம்பாறை | 063-2224342 | கேகாலை | 035-2222561 |
| மாத்தறை | 041-2222305 | திருகோணமலை | 026-2222304 | | |

**Calling for applications**

Applications are hereby called by the Director Human resources from qualified persons with testimonials to fill the vacancies existing at Northern central Hospital, 342, Palaly Road, Jaffna. Suitable candidates will be called for an interview at short notice.

1. Retired attorney at Law (Labour relations)
2. Accountant
3. Asst. Pharmacists
4. Cashiers
5. Billing officers.

NORTHERN CENTRAL HOSPITAL
342 PALALY ROAD,
JAFFNA.

Director,
Human Resources.


## மரண அறிவித்தல்

### திருமதி ஜெயரஞ்சிதம் மகாதேவன் (கிளி)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், சுதுமலை வடக்கை வதிவிடமாக வும் தற்போது பிரான்சில் வசித்து வந்தவருமான திருமதி ஜெயரஞ்சிதம் மகாதேவன் 23.06.2014 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகாதேவனின் அன்பு மனைவியும், அப்பாத்துரை-நல்லம்மா தம்பதியரின் மருமகளும், சசிகலா (ஜேர்மனி), தேவரஞ்சித் (ஜேர்மனி), திருஞானசம்பந்தர் (ஷாம்-கட்டார்), தேவகுமார் (ஜேர்மனி), மேகலா (பிரான்ஸ்), கௌசலா(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், தயாபரன், ரஞ்சினி, துஷ்யா, ஜெயதாரணி, மகேஸ்வரன், சுதர்சன் ஆகியோரின் அன்பு மாமியும், பரமேஸ்வரி (இலண்டன்), இரத்தினபூபதி (சுதுமலை), காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் சிவதாசன் (முன்னாள் கிராம அலுவலர்- சுதுமலை தெற்கு.) ஆகியோரின் மைத்துனியும், வினித்தா, ஜெனித்தா, பவிதா, பவித்திரன், பவீன், ஜீவிதா, நிதுக்ஷன், மாதேஷ், குணேஷ், அஜேஷ், ஜனா, கணாடீபன், கஜானி, ஜானுஷன், தேனுகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 30.06.2014 பிரான்சில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஈஞ்சடி, சுதுமலை வடக்கு, மானிப்பாய். (49386) (10)

தகவல்: பொ.சிவகுமார்.

## மரண அறிவித்தல்

### தம்பையா சண்முகலிங்கம்



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சண்முகலிங்கம் (இளைப்பாறிய உப அதிபர், இணுவில் மத்திய கல்லூரி) 26.06.2014 சிவபதமடைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.06.2014 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் மேற்கு, இணுவில். (49381)(10)

தகவல் : குடும்பத்தினர்.


**முன்பள்ளிக் கல்வி டிப்ளோமா கற்கைநெறி - 2014/2015**
**புதிய பிரிவு ஆரம்பம்**

ஆறுதல் நிறுவனத்தினால் நடத்தப்படும் முன்பள்ளிக் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியானது கடந்த மூன்று வருடங்களாக வெற்றிகரமாக நடைபெற்று முடிவடைந்திருக்கின்றது. அடுத்த வருடத்துக்கான புதிய பிரிவுகள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வலயமட்டத்தில் இரு தேசிய மொழிகளிலும் ஆரம்பமாகவிருப்பதனால் ஆர்வமும், விருப்பும் உடைய க.பொ.த (சா/த) ஐ பூர்த்தி செய்தவர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். தங்கள் வலய முன்பள்ளிக் கல்வி உதவிப் பணிப்பாளரைத் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களை யூலை 05ஆம் திகதி முதல் பெற்றுக் கொள்ளலாம். விரும்புவோர் எமது பணிமனையுட னும் நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவத்துக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது.
விண்ணப்ப முடிவுத் திகதி: 30.06.2014

* மேலதிக தகவல்களுக்கு 021 221 7092 தொடர்புகொள்ளவும்


## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியலட்சுமி சிவகுரு



தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், நவாலி வடக்கு நாச்சிமார் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியலட்சுமி சிவகுரு நேற்று (26.06.2014) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசகடி வைத்தியர் சரவணமுத்து-முத்தம்மா தம்பதியரின் மகளும், தம்பையா-தெய்வானை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான குமாரகுலசிங்கம், பழனிவேல், பரராஜசிங்கம், செல்வரதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவசரவணபவன் (டென்மார்க்), சிவபாக்கியம், சிவனேஸ்வரி (குமரன் கல்வி நிலையம்), சிவயோகம், சிவகுமார் (முன்னாள் A.C.I LTD EVINAI) ஆகியோரின் பாசமிகு தாயும், A.சுதாகரனின் பெரிய தாயும், தேவமனோகரி, சிவபாலன், சாரதாதேவி ஆகியோரின் மாமியும், கபிலன் (டென் மார்க்), மிதுலா (டென்மார்க்), கனிபன் (டென்மார்க்), நஜீபன், சிவகஜன், சிவசொரூபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2014) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் மதியம் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நவாலி ஆரயம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாச்சிமார் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய். (49384) (10)

தகவல்: குடும்பத்தினர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### முஸ்லிம்களை

ணையைச் சமர்ப்பித்து உரையாற்றி ஆளுங்கட்சி உறுப்பினர் அ.அஸ்மின்,

"கடந்த 15 ஆம் திகதி அளுத்கமவில் இடம்பெற்ற சம்பவங்கள், பொலிஸ், விசேட அதிரடிப்படையினர் முன்னிலையிலேயே நடைபெற்றன. பொலிஸாரிடம் பாதுகாப்பு கோரிய பல சந்தர்ப்பங்களில் அவை மறுக்கப்பட்டுள்ளன. மேலும் இந்தத் தாக்குதலால் 4 உயிரிழப்புக்கள், 120 வியாபார நிலையங்கள், 180 வீடுகள், 2 ஆடைத் தொழிற்சாலைகள், தலா ஒவ்வொரு கோழிப் பண்ணை, ஆட்டுப்பண்ணை என்பன அழிக்கப்பட்டுள்ளன.

இவ்வளவும் நடந்த பிறகு ஜனாதிபதி குறித்த இடத்திற்கு பயணம் செய்தார். அதன்பின்னர் 21 ஆம் திகதி ஒரு வார இடைவெளியில் நோ லிமிட் காட்சியறை தீவைக்கப்படுகின்றது. பதற்றமான சூழ்நிலை பாணந்துறைப் பிரதேசத்திலும் உருவாக்கப்படுகின்றது. 40 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

1983 ஆம் ஆண்டில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற கலவரத்தைப் போல இன்று முஸ்லிம்களுக்கு எதிராக இன்னொரு கலவரத்தை தூண்ட முனைகின்றனர்" - என்று தெரிவித்தார்.

பிரேரணையை வழிமொழிந்து உரையாற்றிய இ.இந்திரராசா, "தமிழ் மக்களுக்கு எதிராக அரங்கேற்றப்பட்ட கொடிய போரினால் முள்ளிவாய்க்கால் அடையாளப் படுத்தப்பட்டது போன்று பொதுபல சேனா உள்ளிட்ட இனவாதக் குழுவின ரால் முஸ்லிம்களுக்கு தர்ஹா நகரம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு தமிழர்கள் என்ற சிறுபான்மை இனத்தை அழித்தொழித்த அரசு தற்போது மற்றொரு சிறுபான்மையினமான முஸ்லிம்களை அழிக்க முற்படுகின்றது"- என்று கூறினார்.

இதன் பின்னர் உரையாற்றிய ஆளுங்கட்சி உறுப்பினர் கேசவன் சயந்தன்,

"இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்ற காலத்தில் மாத்திரம் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற நிறுவனங்கள் செயலிழந்து போகின்றன" என்று குறிப்பிட்டார்.

"இணக்க அரசியல் நடத்துவோருக்கு கிடைத்த பரிசு இது. தமிழ் மக்களுக்கு எதிராக அர சுடன் இணைந்து முஸ்லிம்கள் செயற்பட்டிருந்தனர். இந்தக் கலவரம் எமக்கு உணர்த்தியுள்ள செய்தி, இலங்கையில் சிறுபான்மையினம் போராடித்தான் வாழவேண்டும். எமது சகோதரர்கள் கடந்த காலங்களில் ஆயுதங்கள் தூக்கியமை சரியானதே."- என்று தெரிவித்தார் சுகிர்தன்.

அதன்பின்னர் எம்.கே.சிவாஜிலிங்கம் கருத்துத் தெரிவிக்கையில், "ஐ.நாவில் உரையாற்றிய இலங்கைப் பிரதிநிதி 1990 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம்களைவெளியேற்றியமையை இனச் சுத்திகரிப்பு என்ற குறிப்பிட்டிருந்தார். அப்படியானால் அளுத்கமவில் நடந்தது இனப்படு கொலை என்று அவர் ஒப்புக் கொள்வாரா?" என்று கேள்வி யெழுப்பினார்.

திருமதி அனந்தி சசிதரன் உரையாற்றும்போது, "முள்ளிவாய்க்காலில் தமிழ்த் தேசிய இனம் அழிக்கப்பட்ட போது முஸ்லிம்கள் யாரும் குரல் கொடுக்கவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்ட போது, சிங்கள மக்களுடன் சேர்ந்து முஸ்லிம்களும் வெடி கொழுத்தி கொண்டாடினார்கள். ஜெனீவாவில் இன்றும் அரசுக்காக குரல் கொடுக்க வருவது முஸ்லிம் பெண்களே. அவர்கள் தமிழ்த் தேசிய இனத்தின் பெண்களுக்கு நடந்த கொடுரங்களை ஏற்கத் தயாராக இல்லை" என்று தெரிவித்தார்.

விந்தன் கனகரட்ணம் கருத்துத் தெரிவிக்கும்போது, "தமிழர்களுக்கு எதிராக பயங்கர வாதச் சட்டமும், அவசரகாலச் சட்டமும் பயன்படுத்தும் போது அதனை நீடித்து தமிழ் மக்கள் மீது ஏவிவிடுவதற்கு முஸ்லிம்களும் துணை நின்றனர்" என்று குற்றஞ்சாட்டினார்.

த.சித்தார்த்தன் கூறும்போது, "ஆயுதப் போராட்டம் ஆரம்பமான பின்னர் கிழக்கு மாகாணத்தில் கல்முனையில், விசேட அதிரடிப் படையினர் முஸ்லிம்களில் ஒரு பகுதியினரை தம்முடன் இணைத்துக் கொண்டு தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதனால் தமிழ், முஸ்லிம் மக்கள் இருவரிடத்திலும் தீராத பகை தோன்றியது. இந் தப் பகைமைகளையப்பட்டு முஸ்லிம்களும், தமிழர்களும் ஒன்றாக இணைய வேண்டும் என்பதற் காகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அஸ்மினுக்கு நியமன உறுப்பினர்பதவி வழங்கியது. இது நல்லிணக்கத்துக்கான எமது சமிஞ்சை" - என்றார்.

இதன் பின்னர் உரையாற்றிய எதிர்கட்சித் தலைவர் சிதவராஜா, "நாமும் இந்தச் சம்பவத்தை கண்டிக்கின்றோம். எமது கட்சி அன்றிலிருந்து இன்று வரை முஸ்லிம்களுக்காக குரல் கொடுத்து வருகின்றது. இங்கிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டபோது நீங்கள் யாரும் குரல் கொடுக்கவில்லை. நாம் குரல் கொடுத்தோம். அன்று மௌனிகளாகவே இருந்தீர்கள்" - என்றார்.

இ.ஆர்னல்ட் உரையாற்றுகையில், "1995 ஆம் ஆண்டு ஓயாத அலை நடவடிக்கையின் போது 2 ஆயிரம் இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அப்போது சிங்கள அரசு எந்தவொரு பிரதேசத்திலும் தமிழ் மக்கள் மீதோ முஸ்லிம் மக்கள் மீதோ கைவைக்கவில்லை. ஏனெனில் தமிழர்களின் பாதுகாப்புக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்தார்கள். அவர்கள் இல்லையென்றதன் பின்னரே இந்தத் தாக்குதல்கள் இடம்பெறுகின்றன" - என்று குறிப்பிட்டார்.

இறுதியாக உரையாற்றிய வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம். இனவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவோரைக் கண்டிக்கின்றோம்.

இவ்வாறான நடவடிக்கைகளின் பின்னணியை நாம் ஆராய வேண்டும். 1958 ஆம் ஆண்டு கலவரம் இடம்பெற்றது. அந்தக் காலத்தில் தமிழர்கள் இந்த நாடு முழுவதும் இருந்தார்கள். இந் தக் கலவரத்தின் பின்னர் தமிழர்கள் குறித்தொதுக்கப்பட்ட பிரதேசங் களிற்குள் முடக்கப்பட்டார்கள்.

1983 ஆம் ஆண்டு கலவரம் இடம்பெறுவதற்கு முன்னர், தென்பகுதியில் தமிழர்கள் எந்தெந்த பிரதேசங்களில் எந்தெந்த வீடுகளில் வாழ்கின்றனர், வக்காளர் பெயர்ப் பட்டியல் என்ப வற்றை எல்லாம் எடுத்துக் கொண்டு, 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டமையை சாட்டாக வைத்து தமிழர்கள் மீது இனக்கலவரத்தை நடத்தினர்.

அதன் நோக்கம் தென்பகுதியிலிருந்து தமிழர்களை விரட்டியடிப்பது. ஆனால் முஸ்லிம் கள் மீது தற்போது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின் நோக்கம், அவர்களை வர்த்தக - வணிக ரீதியிலிருந்து விரட்டியடிப்பது. அதில் நட்டத்தை ஏற்படுத்துவதாகும். எமக்கு பொலிஸ் அதிகாரம் தர முடியாது என்கின்றனர். ஆனால் சிங்களப் பொலிஸாரால் சிறுபான்மை இனங்களுக்குப் பாதுகாப்பில்லை. இனிவரும் காலங்களில் இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறாமல் இருக்க வேண்டுமாயின், தமிழ் பேசுவோர் என்ற அடிப்படையில் முஸ்லிம்களும் - தமிழர்களும் ஒன்றிணையவேண்டும்" - என்று தெரிவித்தார். (ந-5)

### 85 பேருக்கு

இலங்கையின் தென் பகுதியிலுள்ள பல மாவட்டங்களில் டெங்கு நோய் தீவிரமாக பரவி வருகின்றது. குறிப்பாக கொழும்பு மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பல் அதிகமாக காணப்படுகின்றது.

டெங்கு நோய் பரம்பலை சுகாதாரத் திணைக்களத்தினால் மட்டும் கட்டுப்படுத்த முடியாது. அதனைக்கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், பாடசாலைகள், பொது அமைப்புக்கள், பொது மக்கள் அனைவரது ஒத்துழைப்பும் அவசியமாகவுள்ளது. எனவே, உடனடியாக சம்பந்தப்பட்டவர்கள் பின் வரும் செயற்பாடுகளை முன்னெடுத்து டெங்கு நோயை கட்டுப்படுத்த உதவுமாறு வேண்டுகிறோம். வர்த்தக நிலையங்கள் உரிமையாளர்களால் துப்பரவு செய்ய ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

வைத்தியசாலைகள் உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் பங்களிப்புடன் துப்பரவு செய்யப்பட வேண்டும், தனியார் கல்வி நிலையங்கள் உரிமையாளர்களால் துப்பரவு செய்ய ஏற்பாடு செய்யப்பட வேண்டும், வணக்கத்தலங்கள் சம்பந்தப்பட்ட அறங்காவலர் சபையின் ஏற்பாட்டில் சிரமதான அடிப்படையில் துப்பரவு செய்யப்பட வேண்டும்.

பொதுச்சந்தைகள், மயானங்கள் போன்ற பொது இடங்கள் உள்ளூராட்சி மன்றங்களால் துப்பரவு செய்யப்பட வேண்டும், கழிவு நீர் வாய்க்கால்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களினாலும் உள்ளூராட்சி மன்றங்களினாலும் துப்பரவு செய்யப்பட வேண்டும், பிரதேச மட்டத்தில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் நோக்கில் பிரதேச செயலாளர் பிரதேச டெங்கு கட்டுப்பாட்டுக் குழுக்கூட்டத்தை உடனடியாக கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போது யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய் தீவிரமாக பரவி வரும் நிலையில் காய்ச்சல் ஏற்படும் நோயாளர்கள் பின்வரும் ஆலோசனைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்துகிறோம்.

தற்போதைய சூழ்நிலையில் காய்ச்சல் ஏற்படும் போது அது டெங்கு காய்ச்சலாக இருக்கலாம். எனவே, காய்ச்சல் ஏற்படும் நோயாளர்கள் பூரண ஓய் வில் இருக்க வேண்டும். வேலைக்கு செல்பவர்களும், மாணவர்களும் விடுமுறை பெற்று வீட்டில் ஓய்வெடுக்க வேண்டும், வீட்டிலும் கடுமையான வேலையேதும் செய்யாது பூரண ஓய்வில் இருக்க வேண்டும், பொதுவாக டெங்கு காய்ச்சலின் பின் விளைவுகள், இறப்புக்கள் காய்ச்சல் தணிந்த பின்னரே ஏற்படுவது வழமை. எனவே காய்ச்சல் தணிந்த பின்னரும் இரண்டு நாள்களிற்கு ஓய்வு அவசியம், மாணவர்கள் காய்ச்சல் ஏற்படும் காலத்தில், விளையாட்டுகளில் பங்குபற்றுவதை தவிர்க்க வேண்டும். கடந்த காலங்களில் டெங்கு காய்ச்சலுடன் பரசிற்றமோல் வில்லைகளை போட்டுக்கொண்டு விளையாட்டுக்களில் பங்குபற்றிய இரண்டு மாணவர்கள் அநியாயமாக உயிரிழந்ததை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

காய்ச்சலின் போது போதிய நீராகாரங்களை அருந்தி உடலின் நீர்த்தன்மை வற்றாமல் பார்த்துக்கொள்ளவேண்டும், சில நோயாளர்கள் பரசிற்றமோல் வில்லைகளை அளவுக்கு அதிகமாக பாவித்து சுய வைத்தியம் செய்வதனை அவதானிக்க முடிகிறது இதனால் ஈரல் பாதிக்கப்பட்டு இறப்பு ஏற்படலாம். எனவே காய்ச்சல் ஏற்படும் நோயாளர்கள் சரியான வைத்திய ஆலோசனையின்படி பரசிற்றமோல் வில்லைகளை பாவிக்க வேண்டும். குறிப்பாக குழந்தைகளுக்கு இது மிக மிக அவசியம், மேலும் காய்ச்சலுடன் மயக்கம், வயிற்றுவலி, வாந்தி, வயிற்றோட்டம் போன்ற அறிகுறிகள் காணப்படும் நோயாளர்கள் காலந்தாழ்த்தாது உடனடியாக தகுந்த வைத்திய ஆலோசனையைப் பெற வேண்டும். எனவே, யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து எமது பங்களிப்பை வழங்க முன்வர வேண்டும்"- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

### பொலிஸ்

அனந்தி சசிதரன் தனக்கு உயிர் அச்சுறுத்தல் காணப்படுகின்றது என்று தெரிவித்து பொலிஸ் பாதுகாப்புப் பெற்றிருந்தார். அதே போன்று ஏனைய இரு மாகாண சபை உறுப்பினர்களான கஜதீபன் மற்றும் சுகிர்தன் ஆகியோரும் தமக்கும் அச்சுறுத்தல் உள்ளது என்று தெரிவித்து பொலிஸ் பாதுகாப்புப் பெற்றிருந்தனர்.

இந்தநிலையில் அனந்திக்கும் ஏனைய இரு மாகாண சபை உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பு திடீரென நேற்றுமுன்தினம் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பில் நேற்று நடைபெற்ற வடக்கு மாகாண சபை அமர்வில் இடம்பெற்ற விவாதத்தின் போதே அனந்தி சசிதரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விவாதத்தின்போது, "எனக்கு பாதுகாப்பு வேறு வழி தெரியவில்லை. ஒன்றில் நான் ஐ.நாவிடம் பாதுகாப்புக் கோரமுடியும். இல்லாவிட்டால் எனக்கு நவீன துப்பாக்கி ஒன்று வாங்கித் தாருங்கள். நான் பார்த்துக் கொள்கின்றேன்" - என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வழங்கப்பட்ட பாதுகாப்பு மீளப் பெறப்படுவது தொடர்பில் யாழ்.மாவட்ட பிர திப் பொலிஸ்மா அதிபர் ரொஹான் டயஸால் மாகாண சபை உறுப்பினர்களுக்குக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது. அதில், "தங்களின் பாதுகாப்புக்காக மெய்பாதுகாப்பு உத்தியோகத் தர்களைப் பெற்றுக் கொள்வதற்காக, சட்டம் மற்றும் ஒழுங்கு சம்பந்தமான அமைச்சின் மூலம் அதற்கான அனுமதியை பெற்று நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். எனது பதவி நிலைக்குரிய அதிகார எல்லையின் பிரகாரம், தங்களுக்கு நெருங்கிய பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பெற்றுக் கொள்வதற்கு போதுமான அதிகாரங்கள் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்"- என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்களின் பாதுகாப்பு மட்டுமே திட்டமிட்டு மீளப் பெறப்பட்டுள்ளது என்று மாகாண சபை உறுப்பினர்கள் குற்றஞ் சாட்டுகின்றனர். (ந-5)

### மூன் குழுவினர்

ததை வரவேற்றுள்ள சர்வதேச மன்னிப்புச் சபை சில வருடங்களுக்கு முன்னர் இலங்கை தொடர்பாக ஆராய்வதற்காக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட குழுவினர் முடித்த இடத்தில் இருந்து புதிய விசாரணைகள் ஆரம்பமாக வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அக்குழுவினர் நம்பகத் தன்மை மிக்க தகவல்களை பெற்றுக் கொண்டனர், அந்த தகவல் கள் உறுதிப்படுத்தப்பட்டால் அது இலங்கையில் போர்க் குற்றமும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றமும் இடம்பெற்றதை உறுதிப்படுத்தப்படும். தற்போதைய விசாரணைகள் மிக ஆழமாக முன்னெடுக்கப்பட வேண்டும். குற்றச்செயல்களுக்கு காரணமான தளபதிகள், அவர்களது உயரதிகாரிகள் போன்றோரும் விசாரிக்கப்படவேண்டும் எனவும் கோரியுள்ளது மன்னிப்புச் சபை. மேலும் மன்னிப்புச்சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"இலங்கையில் இழைக்கப் பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் சர்வதேச சட்டங்களின் கீழான குற்றங்கள் குறித்து விசாரணை செய்வதற்கான குழுவுக்கு உதவுவதற்காக ஐ.நாவின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, மனித உரிமை விவகாரத்தில் நீண்டகால அனுபவம் மிக்க மார்த்தி அகிட்சாரி, சில்வியா ஹாட் ரைட், அஸ்மா ஜெகாங்கீர் ஆகியோரை அறிவித்துள்ளார். இலங்கையின் நீண்ட உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் என்ன நடைபெற்றது என்பதை அறி வதற்கான முயற்சியில் இதுவொரு வர வேற்கத்தக்க முன்னேற்றமாகும்.

இலங்கையில் மிக மோசமான மனித உரிமை மீறல்கள் தொடர்வதற்கு காரணமான சட்டத்தின் பிடியிலிருந்து விலக்களித்தல் செயற்பாட்டை முடிவுக்கு கொண்டுவருவதிலும் இந்த விசாரணைகள் முக்கிய மானவையாகும்.

கண்ணால் கண்டவர்களின் சாட்சியங்கள் மற்றும் சர்வதேச மன்னிப்புச்சபை, ஐ.நா., பல அரசு சார்பற்ற அமைப்புகளிடமுள்ள ஆதாரங்களின் அடிப்படையில் இரு தரப்பும் படுகொலைகள், காணாமற் போகச் செய்யப்படுதல் உட்பட யுத்தக் குற்றங்கள் மற்றும் சர்வசே சட்டங்களின் கீழான குற்றங்களில் ஈடுபட்டுள்ளமை தெரியவருகிறது.

விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனித கேடயங்களாக பயன் படுத்தினர், சிறுவர்களை பலவந்தமாக படையணிகளில் சேர்த்தனர். மோதலில் சிக்குண்ட மக்கள் உணவோ, குடிநீரோ மருத்துவ வசதிகளோ இன்றி தத்தளித்துக்கொண்டிருந்த பகுதிகள் மீது இலங்கை இராணுவம் எறிகணை தாக் குதல்களை மேற்கொண்டது. மோதல் முடிவடைந்த பின்னர் ஆயிரக்கணக்கான மக்கள் வலுக்கட்டாயமாக மூடப்பட்ட முகாம்களில் இராணுவப்பாதுகாப்பின் கீழ் வைக்கப்பட்டனர். விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்பட்டவர்கள் தனி யாக தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர், காணமல்போயினர்.

சர்வதேச மன்னிப்பு சபை இலங்கை அரசை விசாரணைகளுக்கு முழுமையாக ஒத்துழைக்குமாறு மீண்டும் வேண்டுகோள் விடுக்கிறது.

விசாரணைகள் வலுவானவையாகவும், ஆழமானவையாகவும் அமைவதற்கான அரசியல் மற்றும் ஏனைய ஆதரவை ஐ.நாவும், சர்வதேச சமூகமும் வழங்க வேண்டும். சாட்சியங்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும்.

குறிப்பாக, விசாரணைகள் ஐ.நா. செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட குழுவினர் முடித்த இடத்தில் இருந்து ஆரம்பமாக வேண்டும். அவர்கள் நம்பகத் தன்மை மிக்க தகவல்களை பெற்றுக் கொண்டனர். அந்த தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்டால் அது இலங்கையில் போர்க் குற்றமும் மனித குலத் திற்கு எதிரான குற்றமும் இடம்பெற்றதை உறுதிப்படுத்தும். தற்போதைய விசாரணைகள் மிக ஆழமாக முன்னெடுக்கப்பட வேண்டும். குற்றச் செயல்களுக்கு காரணமான தளபதிகள், அவர்களது உயரதிகாரி கள் போன்றோரும் விசாரிக்கப் படவேண்டும் - என் றுள்ளது. (ந-சி)

### அணைந்தன

அதன்பின்னர் அனைவரையும் எழுந்து நிற்குமாறு நீதிபதி கூறினார். அனைவரும் எழுந்த பின்னர் மின்குமிழ்கள் அணைக்கப்பட்டன. நீதிபதி தனது தீர்ப்பை அறிவித்தார்.

இலங்கை ஜனநாயகக் குடியரசின் ஜனாதிபதி தீர்மானிக்கும் ஒரு தினத்தில் நீர் தூக்கிட்ட நிலையில் உயிர் பிரியும்வரை தூக்கில் தொங்கவிடப்படுவீர் - என்று அறிவித்து விட்டு அங்கிருந்து சென்றார். அத்துடன் நீதிமன்று கலைந்தது.

### மூவர்

பேச்சாளர் மாரி ஹார்ப்.

"நல்லாட்சி - மனித உரிமை விவகாரம் - நல்லிணக்கம் மற்றும் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் ஆகிய நடவடிக்கைகள் என்பன தொடர்பில் நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்கு இலங்கை அரசு காத்திரமானதும் ஸ்திரமானதுமான தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஐ.நா. விசாரணைக்குக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். விசாரணைக்கான ஆலோசனைக்குழுவில் திறமையான மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பது வரவேற்கத்தக்க விடயம்"- என்று தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேஜ் கருத்துத் தெரிவிக்கையில்,

"இலங்கையில் நடந்தவற்றைக் கண்டறிந்து நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக ஐ.நாவின் 25 ஆவது அமர்வில் பிரேரணை கொண்டு வரப்படுவதற்கு பிரிட்டனும் முக்கிய பங்காற்றியிருந்தது. விசாரணை மேற்கொள்வதற்கு மூன்று பேர் கொண்ட நிபுணர் குழுவை நியமித்தமையை வரவேற்கின்றோம். இலங்கையில் உண்மையான நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு இந்த விசாரணை உதவும். இலங்கை அரசு இந்த விசாரணைக்குஒத்துழைக்க வேண்டும் என்று நாம் வலியுறுத்துகின்றோம்" - என்று தெரிவித்துள்ளார். (ந-5)

### அடித்து

தூக்குத் தண்டனை விதித்துத், தீர்ப்பளித்துள்ளது யாழ். மேல் நீதிமன்றம்.

1997ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி சுன்னாகத்தைச் சேர்ந்த பொன்னன் கதிரவேலு என்பவர் பலமாகத் தாக்கப்பட்ட நிலையில் மருத்தவமனையில் சேர்க்கப்பட்டார். ஆயினும் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்தார். அந்தத் தாக்குதல் சம்பவத்தில் அவரது மகள் மற்றும் உறவினர் ஒருவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை நவரத்தினம் மற்றும் அவரது மகன்களான பிரதீஸ்வரன் மற்றும்சாகீஸ்வரன் ஆகியோர்கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராகப் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில், விசாரணைகளின் முடிவில் தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. நவரத்தினம் குற்றச்சாட்டில் இருந்து விடுவிக்கப்பட்டார். சாகீஸ்வரனுக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. பிரகீஸ்வரன் மீதான கொலைக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதை அடுத்து அவருக்கு தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்த யாழ். மேல் நீதிமன்றம். (ந-4)




# பிரான்ஸுடன் அபாரமாக ஆடி சமநிலை செய்தது ஈக்குவடோர்

உலகக் கிண்ண உதைபந்தாட்டப்போட்டியில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் ஈக்குவடோர் அணியும் பிரான்ஸ் அணியும் மோதின. ஆட்டத்தின் 4ஆவது நிமிடத்தில் ஈக்குவடோரின் மிண்டா பவுல் செய்தார். ஆட்டத்தின் 7ஆவது நிமிடத்தில் பிரான்சின் போக்பா அடித்த பந்தை ஈக்குவடோர் அணியின் மிண்டா லாவகமாகத் தடுத்தார். ஆட்டத்தின் 15ஆவது நிமிடத்தில் பிரான்சின் சிசோகோ அடித்த பந்தை ஈக்குவடோர் கோல்காப்பாளர் டோமிங்கஸ் லாவகமாகச் செயற்பட்டுத் தடுத்தார்.

ஆட்டத்தின் 35ஆவது நிமிடத்தில் ஈக்குவடோரின் நோபோ அடித்த பந்தை கொசியன்லி லாவகமாகப் பாய்ந்து தடுத் தார். 38ஆவது நிமிடத்தில் பிரான்சின் பொக்பா அடித்த பந்தை ஈக்குவடோரின் கோல் காப்பாளர் டோமிங்கஸ் லாவகமாகப் பாய்ந்து தடுத்தார். முதல் ஆட்டம் முடியும் வரை இரு அணி களும் கோல் எதுவும் அடிக்கவில்லை.

இரண்டாவது பாதி தொடங்கப்பட்ட பின் ஆட்டத்தின் 47 ஆவது நிமிடத்தில் பிரான்சின் கிரீஸ்மன் அடித்த பந்தை ஈக்குவடோரின் டோமிங்கஸ் தடுத்தார். ஆட்டத்தின் 50 ஆவது நிமிடத்தில் ஈக்குவடோரின் வலன்சியாவுக்கு சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டது. 62ஆவது நிமிடத்தில் பிரான்சின் மட்டுயிடி அடித்த பந்தை ஈக்குவடோர் அணியின் கோல் காப்பாளர் டோமிங்கஸ் பாய்ந்து தடுத்தார்.

82ஆவது நிமிடத்தில் ஈக்குவடோரின் இபாரா அடித்த பந்தை பிரான்சின் லோரிஸ் தடுத்தார். 83ஆவது நிமிடத்தில் ஈக்குவடோரின் குவாகுவாவுக்கு மஞ்சள் அட்டை வழங்கப்பட்டது. இறுதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காத சூழ்நிலையில் ஆட்டம் சமநிலையானது.

ஆட்ட நாயகனாக ஈக்குவ டோர் அணியின் கோல் காப்பாளரான டோமிங்கஸ் தேர்வு செய்யப்பட்டார். (த)

# 43 வயதில் கொலம்பிய வீரர் சாதனை



பாரிட் மோன்ட்டிரகன்

ஜப்பானுக்கு எதிரான ஆட்டத்தில் 85 ஆவது நிமிடத்தில் கொலம்பிய கோல் காப்பாளர் டேவிட் ஓஸ்பினாவுக்கு பதிலாக மாற்றுக் கோல் காப்பாளராக பாரிட் மோன்ட்டிரகன் களம் இறக்கப்பட்டார். இதன் மூலம் 84 ஆண்டு கால உலகக் கிண்ண உதைபந்தாட்ட வரலாற்றில் அதிக வயதில் பங்கேற்றவர் என்ற அரிய பெருமையை மோன்ட்டிரகன் பெற்றிருக்கிறார்.

இவருக்கு தற்போது வயது 43 ஆண்டு 3 நாள்கள் ஆகிறது. இதற்கு முன்பு 1994ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தில் கமரூன் வீரர் ரோஜர் மில்லா தனது 42 ஆண்டு 39 நாளான வயதில் கலந்து கொண்டதே சாதனையாக இருந்தது.

இன்னும் சில சிறப்புகளும் மோன்ட்டிரகன் வசம் வந்து சேர்ந்துள்ளன. இவர் ஏற்கனவே 1994 ஆம் ஆண்டு மற்றும் 1998 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளிலும் விளையாடி இருக்கிறார். 16 ஆண்டுகள் கழித்து இந்த உலகக் கிண்ணத்தில் காலடி எடுத்து வைத்திருப்பதன் மூலம் நீண்ட இடைவெளிக்குப் பிறகு உலகக் கிண்ணத்தில் ஆடியவர் என்ற பெருமையும் கிடைத்துள்ளது.

அத்துடன் ஒரு வீரராக நீண்ட காலம் உலக கிண்ணத்தில் ஆடியவர் (1994 முதல் 2014ஆம் ஆண்டு வரை மொத் தம் 20 ஆண்டுகள்) என்ற சாதனை யும் இனி அவரது பெயரில் பதிவாகும். (த)



# ஈரானை 3-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி அசர வைத்தது பொஸ்னியா

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் நடந்த இரண்டாவது ஆட்டத்தில் ஈரானும் பொஸ்னியாவும் மோதின.

ஆட்டத்தின் 4ஆவது நிமிடத்தில் பொஸ்னியாவின் செகோ அடித்த பந்தை ஈரானின் கோல் காப்பாளரான ஹகிகி அற்புதமாகத் தடுத்தார். ஆட்டத்தின் 23ஆவது நிமிடத்தில் செகோ ஒரு கோல் அடித்துக் கணக்கை ஆரம்பித்தார். ஆட்டத்தின் முதல் பாதி முடிவடையும் போது போஸ்னியா ஒரு கோலால் முன்னிலை பெற்றது. சிறிது நேர இடைவெளிக்குப் பின் ஆட்டத்தின் இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கியது. ஆட்டத்தின் 59ஆவது நிமிடத்தில் பொஸ்னியாவின் ஜானிக் கோல் அடித்து அசத்த 82ஆவது நிமிடத்தில் ஈரானின் ரெசா ஒரு கோல் அடித்தார். அடுத்த நிமிடத்திலேயே பொஸ்னியாவின் வர்சஜெவிக் தன் பங்குக்கு ஒரு கோல் அடித்தார்.

இரண்டாவது பாதி ஆட்டத்தின் முடிவில் 3-1 என்ற கோல் கணக்கில் ஈரானை வீழ்த்தியது பொஸ்னியா. ஆட்ட நாயகனாக பொஸ்னியாவின் செகோ தேர்ந்தெடுக்கப்பட்டார். (த)

# தங்கக் காலணி யாருக்கு?

உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் அதிக கோல் அடிக்கும் வீரருக்கு தங்கக் காலணி வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தமுறை இந்த விருதுக்கான போட்டியில் பிரேசிலின் நெய்மர், ஜேர்மனியின் முல்லர், நெதர்லாந்தின் ரோபன் ஆகியோர் போட்டி போடுகின்றனர்.

இந்தமுறை தங்கக் காலணி விருதை நெய்மர் பெற இயலாது போகும் என இந்திய உதைபந்தாட்ட நட்சத்திர வீரர் பாய்சங் பூட்டியா கருத்து தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலை யில் நெய்மர் 4 கோலுடன் முதலிடத்திலும், பென்சிமா (பிரான்ஸ்), ரொட்ரிக்கஸ் (கொலம்பியா), முல்லர் (ஜேர்மனி), ரோபன் (நெதர்லாந்து), பெர்சி (நெதர்லாந்து) தலா 3 கோல்களுடன் 2ஆம் இடத்திலும் உள்ளனர். (த)



தங்கக் காலணி

# ஹொண்டூரசை வீழ்த்தியது சுவிஸ்

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் ஹொண்டூரஸ் அணியும் சுவிட்சர்லாந்து அணியும் மோதிக் கொண்டன. தொடக்கம் முதலே சுவிட்சர்லாந்து வீரர்களின் ஆதிக்கம் காணப்பட்டது.

ஆட்டம் தொடங்கிய 3ஆவது நிமிடத்தில் சுவிட்சர்லாந்தின் ஷாகிரி அடித்த பந்தை ஹொண்டூரஸ் கோல் காப்பாளர் வல்லாடரஸ் லாவகமாகத் தடுத்தார். ஆனால் 6ஆவது நிமிடத்தில் ஷாகிரி கோல் அடித்து சுவிஸ் அணியின் கோல் கணக்கை தொடக்கினார். ஆட்டத்தின் 16ஆவது நிமிடத்தில் தனக்குக் கிடைத்த நேரடி உதை வாய்ப்பை கோலாக மாற்றத் தவறினார் ஷாகிரி. ஆட்டத்தின் 30ஆவது நிமிடத்தில் ஷாகிரி மீண்டும் ஒரு கோல் அடித்து தங்கள் அணியின் கோல் கணக்கை 2 ஆக உயர்த்தினார். ஆட்டத்தின் 45ஆவது நிமிடம் வரை வேறு கோல்கள் எதுவும் அடிக்கப்படாமல் இருந்த போது முதல் பாதி ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் தொடங்கப்பட்ட பின் ஆட்டத்தின் 52ஆவது நிமிடத்தில் ஹொண்டூரசின் பெங்ஸ்டன் அடித்த பந்தை சுவிஸ் அணியின் ரொட்ரிக்கஸ் கோல் விழாமல் தடுத்தார். ஆட்டத்தின் 66ஆவது நிமிடத்தில் ஹொண்டூரசின் பாலா சியோசுக்கு மஞ்சள் அட்டை வழங்கப்பட்டது.

ஆட்டத்தின் 71ஆவது நிமிடத்தில் ஷாகிரி தனது மூன்றாவது கோலையும் அடித்து அசத்தினார்.


ஆட்டத்தின் 78ஆவது நிமிடத்தில் ஹொண்டூரசின் நஜர் அடித்த பந்தை சுவிஸ் கோல் காப்பாளர் பெங்காலியோ லாவகமாகப் பாய்ந்து தடுத்தார்.

இரு அணிகளும் மேற்கொண்டு கோல் எதுவும் அடிக்கப்படாத நிலையில் இரண்டாவது பாதி முடிவுக்கு வந்தது. இறுதியில் 0-3 என்ற கோல் கணக்கில் ஹொண்டூரசை சுவிட்சர்லாந்து வீழ்த்தியது. ஆட்டநாயகனாக ஷாகிரி தேர்ந்தெடுக்கப்பட்டார். (த)



## காளியம்பாள், பல்கலை ஆட்டங்களில் அசத்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 27
குருநகர் பாடும்மீன் விளை யாட்டுக்கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தும் உதை பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழகமைதா னத்தில் இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் புதன் கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணி களின் விவரங்கள் வருமாறு:
காளியம்பாள் விளையாட்டுக்கழக அணிக்கும் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
யாழ்.பல்கலைக்கழக அணிக்கும் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் யாழ். பல்கலைக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (து-23)



வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெற்று வருகின்றது. இதில் தட்டெறிதல் போட்டியில் தனது அபாரத் திறமையை வெளிப்படுத்தும் வீரர் ஒருவர். (து-21)


### காணி விற்பனைக்கு

கச்சேரி, புங்கன்குள புகையிரத ஸ்ரேசன், கண்டி வீதி அருகாமையில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு- செ.க. சண்முகலிங்கம்
57/1 புங்கன்குளம், அரியாலை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0214925006


## மரண அறிவித்தல்



### மரியாம்பிள்ளை நீக்கிலஸ் கனகரட்ணம்

ஒட்டகப்புலத்தை பிறப்பிடமாகவும், இல.368/1 பிரதான வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.மரியாம்பிள்ளை நீக்கிலஸ் கனகரட்ணம் நேற்று முன்தினம் (25.06.2014) புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சமத்தர் பொன்னையா-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பேரின்பநாயகம் (அப்பாச்சி) -கிறிஸ்ரீனா தம்பதியிரின் அன்பு மருமகனும், மேரிலலிதாவின் பாசமிகு கணவரும், யுலின் பெர்ணான்டோ (லண்டன்), அமல நிறோஜன் (U.S Hotel) கிறிஸ்ரி நிசாந்தன் (புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சர்மிளா (லண்டன்)வின் மாமனாரும், காலஞ்சென்ற சமத்தர் குணரட்ணம் (வைத்தியர்),மேரி (லண்டன்),காலஞ்சென்ற கிறேசியன் மற்றும் நேசரத்தினம், நவமணி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகராணி (லண்டன்),காலஞ்சென்ற லோறன்ஸ் மரியதாஸ் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற மேரிதவமணி,மற்றும் மேரி நவமணி (கனடா), புஸ்பவதி, அருமைநாயகம், சாந்தகுமாரி (கனடா), சத்தியகுமாரி (கனடா), குணரட்ணம் (கனடா), விஜயகுமார்,அல்பேட் (கனடா), வித்தியா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (28.06.2014) சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு புனித திருமுழுக்க அருளப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 368/1 பிரதான வீதி. யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 320 6399
0766370260

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

## மரண அறிவித்தல்



### திருமதி கனகலட்சுமி குமாரவேல்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகலட்சுமி குமாரவேல் நேற்று (26.06.2014) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற குமாரவேல் அவர்களின் அன்பு மனைவியும், பராசக்தி (அமெரிக்கா), சிறிஸ்காந்தா (இலங்கை மின்சாரசபை, திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஈஸ்வரகுமார்,பிறேமதா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம், சிதம்பரப்பிள்ளை மற்றும் சுகிர்தலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேல், வள்ளிநாயகி, பரிமளாதேவி, தில்லைநாயகி மற்றும் ஆறுமுகம், திலகவதி, ஞனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுதா, சுபேந்திரன், ஜெயந்திரன், விஜயலக்சுமி, ஞானலக்சுமி ஆகியோரின் பெரியதாயாரும், சிவகாமி, பாலசுப்பிரமணியம், தெய்வநாயகி, உமையாள், நகுலேஸ்வரன், ஜெகதீஸ்வரன்-ஆனந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், விசாகன், நதீசன், ஹரிஷ்யாம், ஜனகஜன், ஜெயகாந்தன், ஜெயபிரியா, ஜெயதீபா, ஜெயபிரகாஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி, வட்டுக்கோட்டை
021 22 50426

தகவல்:
பிள்ளைகள்

## உதிக்கும் திசை நடத்தும் உதைபந்தாட்டப் போட்டி



யாழ்ப்பாணம், ஜூன் 27
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு உதிக்கும் திசை விளையாட்டுக்கழகம் நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் உதிக்கும் திசை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
புதன்கிழமை, வியாழக் கிழமைகளில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு;
புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் இரணப்பாலை சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் உடுப்புக்குளம் அலைஓசை விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாதமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
வெற்றி தோல்வியைக் காண்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
இதில் இரணப்பாலை சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் புதுக்குடியிருப்பு சுப்பர் றாங் விளையாட்டுக் கழகஅணியைஎதிர்த்துபேராறு றோயல் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.
இதில் புதுக்குடியிருப்பு சுப்பர் றாங் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (து-23)

## இன்றைய ஆட்டம்

வலி.வடக்கு, ஜூன் 27
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி தினத்தை முன்னிட்டு யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 11பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு:-
பிற்பகல் 3.30 மணி-ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம் எதிர் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம்.
மாலை 4.30 மணி-வடமராட்சி கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்ப்பாணம் ஐக்கிய விளையாட்டுக்கழகம்.
இரவு 7.00 மணி-சாவற்கட்டு ஆதவன் விளையாட்டுக் கழகம் எதிர் இளவாலை பெரியவிளான் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம்.
இரவு 8.00 மணி-புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் எதிர் தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக் கழகம். (து-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்.ஜூன் 27
முல்லைத்தீவு புதுகுடியிருப்பு உதிக்கும் திசை விளையாட்டுக்கழகம் நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் உதிக்கும் திசை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஒற்றுமை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அலம்பில் இளம்பறவை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சுப்பர் றாங் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (து-23)

★ ★ ★

யாழ்ப்பாணம்.ஜூன் 27
கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழகம் நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.
இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் காலிறுதியாட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நெடிய காடு விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (து-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 27
தும்பளை கருணையுள்ளம் விண்மீன் நற்பணி மன்றத்தின் அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் றெஜின் போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இமையாணன் இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக் அணியை எதிர்த்து சிவகுமாரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (து-23)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 27
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகத்துடன் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல், இரவு ஆட்டங்களாக இடம்பெற்று வருகின்றன.
இன்று வெள்ளிக்கிழமை பி.ப.3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யாழ். ஐக்கிய விளையாட்டுக்கழக அணி மேதவுள்ளது.
இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆதவன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பெரியவிளான் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (து-23)

★ ★ ★

ரொப்பாஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழகம், மகாத்மா சனசமூக நிலையம் என்பன யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் மகாத்மா விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன.
இன்று வெள்ளிக்கிழமை இரவு 7மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ரெட் றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக (சிவப்பு) அணியை எதிர்த்து காளியம்பாள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. இரவு 7.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (து-23)

# தடகளப் போட்டிகளில் 19 சாதனைகள் மூன்றாம் நாளில் மட்டும் முறியடிப்பு

வலி வடக்கு, ஜூன் 27

வட மாகாண கல்வித் திணைக் களத்தினால் மாகாண கல்வி வலயப் பாடசாலை அணிக ளுக்கு இடையே நடத்தப்படும் தடகளப் போட்டிகளில் மூன் றாம் நாளான நேற்று முன் தினம் புதன்கிழமை 19 சாத னைகள் முறியடிக்கப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம்புதன்கிழமை முறியடிக்கப்பட்ட சாதனை களுடன் இதுவரை 32 சாத னைகள் இம்முறை முறியடிக் கப்பட்டுள்ளன.

17 வயதுப் பிரிவு பெண்களுக் கான 200 மீற்றர் ஓட்டப்போட் டியில் முல்லைத்தீவு விசுவ மடு மகா வித்தியாலய வீராங் கனை பி.தனுஜா 28:8 என்ற பழைய சாதனையை முறிய டித்து 27:9 எனப் புதிய சாதனை யைப் பதிவு செய்ததுடன் வர்ண விருதையும் பெறுகின்றார்.

19 வயதுப் பிரிவு பெண்கள் 800 மீற்றர் ஓட்டத்தில் வவுனியா பூவரசங்குளம் மகா வித்தியா லய வீராங்கனை கே.நிர்மதி கடந்த காலச் சாதனையான 2:38:2 என்ற சாதனையை முறியடித்து 2:37:5 என்ற புதிய சாதனையைப் படைத்து வர்ண விருதையும் பெறுகின்றார்.

நீளம் பாய்தலில் முல்லைத் தீவு வித்தியானந்தாக் கல்லூரி வீராங்கனையான ஜே.நிதர் சனா பழைய சாதனையான 5.19 மீற்றர் என்ற சாத னையை முறியடித்து 5.21 மீற் றர் என்ற புதிய சாதனையை பதிவு செய்ததுடன் வர்ண விருதையும் பெறுகின்றார்.

21 வயதுப் பிரிவு பெண்களுக் கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் அளவெட்டி அரு ணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த வீராங்கனை எ.பௌத் திரா 2.75 மீற்றர் என்ற பழைய சாதனையை முறியடித்து 2.96 மீற்றர் பாய்ந்து புதிய சாதனை யைப் பதிவு செய்ததுடன் வர்ண விருதையும் பெறுகின்றார்.

15 வயதுப் பிரிவு ஆண்களுக் கான குண்டு போடுதல் போட் டியில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியைச் சோந்த வீரன் ஆர்.இசைவர்மன் 10.84 மீற்றர் என்ற பழைய சாத னையை முறியடித்து 11.43 மீற்றர் என்ற புதிய சாதனை யைப் பதிவு செய்ததுடன் வர்ண விருதையும் பெறுகின்றார்.

17 வயதுப் பிரிவு ஆண்களுக் கான தடை தாண்டல் ஓட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் மத் திய கல்லூரி வீரன் பி.நிரூஜன் பழைய சாதனையான 1:02:6 செக்கன் என்ற சாதனையை முறியடித்து 1:00:3 என்ற புதிய சாதனையைப் பதிவு செய்த துடன் வர்ண விருதையும் பெறுகின்றார்.

மன்னார் கருங்கண்டல்றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த ஜே.தனுஜன் 1:02:6 என்ற பழைய சாதனையை முறிய டித்து 1:01:6 என்ற புதிய சாத னையை பதிவு செய்ததுடன் வர்ண விருதையும் பெறு கின்றார்.

வட்டுக்கோட்டை இந்துக் கல் லூரியைச் சேர்ந்த ஜே.சிவ கரன் பழைய சாதனையான 1:02:6 என்ற சாதனையை முறியடித்து 1:02:2 என்ற புதிய சாதனையை பதிவு செய்த துடன் வர்ண விருதையும் பெறுகின்றார்.

வவுனியா சுந்தரபுரம் சரஸ் வதி வித்தியாலயத்தைச் சோந்த கே.குகனேஸ்வரன் பழைய சாதனையான 1:02:6 என்ற சாதனையைமுறியடித்து 1:02:3 என்ற புதிய சாதனையைப் பதிவு செய்ததுடன் வர்ண விருதையும் பெறுகின்றார்.

கோலூன்றிப் பாய்தல் போட் டியில் அளவெட்டி அருணோ தயாக் கல்லூரியைச் சேர்ந்த வீரன் கே.நெப்தலி ஜொய்சன் பழைய சாதனையான 3.40 மீற்றர் என்ற சாதனையை முறியடித்து 3.86 மீற்றர் என்ற புதிய சாதனையைப் பதிவு செய்ததுடன் வர்ண விருதையும் பெறுகின்றார்.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியைச் சேர்ந்த எம். தனீஸ் பழைய சாதனையை முறியடித்து 3.40 மீற்றர் என்ற புதிய சாதனையை பதிவு செய்த துடன் வர்ண விருதையும் பெறுகின்றார்.

தெல்லிப்பழை மகாஜனாக் கல் லூரியைச் சேர்ந்த எஸ். டிலக் சன் 3.35 மீற்றர் பாய்ந்து வர்ண விருதையும் பெறுகின்றார்.

19 வயதுப் பிரிவு ஆண்களுக் கான உயரம் பாய்தல் போட் டியில் இளவாலை புனித ஹென் றியரசர் கல்லூரி வீரன் கே.இராஜ்குமார் பழைய சாத னையான 1.84 மீற்றரை முறியடித்து 1.85 மீற்றர் என்ற புதிய சாதனையைப் பதிவு செய்துள்ளார்.

கோலூன்றிப் பாய்தல் போட்டி யில் அளவெட்டி அருணோ தயாக் கல்லூரியைச் சேர்ந்த என்.சாள்ஸ் அன்ரனி பழைய சாதனையான 3.71 மீற்றர் என்ற சாதனையை முறிய டித்து 3.90 மீற்றர் என்ற புதிய சாதனையை பதிவு செய்த துடன் வர்ண விருதையும் பெறுகின்றார்.

21 வயதுப் பிரிவு ஆண்களுக் கான 200 மீற்றர் ஓட்டப் போட் டியில் மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயத் தைச் சேர்ந்த வீரன் எஸ்.அம லதாஸ் 23:8 என்ற பழைய சாதனையை முறியடித்துப் புதிய சாதனையாக 23:5 என் பதைப் பதிவு செய்துள்ளார்.

400 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் முல்லைத்தீவு மத் திய கல்லூரியைச் சேர்ந்த வீரன் எஸ்.விதிஸ்டன் பழைய சாதனையான 58:6 என் பதை முறியடித்து புதிய சாத னையாக 57:6 என்பதைப் பதிவு செய்ததுடன் வர்ண விருதையும் பெறுகின்றார்.

உயரம் பாய்தல் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரியைச் சேர்ந்த வீரன் கே.தனுஜன் 1.86 மீற்றர் என்ற பழைய சாதனையை முறியடித்து புதிய சாதனை யாக 1.94 மீற்றர் என்பதைப் பதிவு செய்ததுடன் வர்ண விருதையும் பெறுகின்றார்.

இதே போட்டியில் மன்னார் நானாட்டான் மகா வித்தி யாலய வீரன் ஜீ.அன்றூ டிலக் சன் 1.86 மீற்றர் என்ற பழைய சாதனையை முறியடித்து 1.94 மீற்றர் என்ற பதிய சாத னையைப் பதிவு செய்து வர்ண விருதையும் பெறுகின்றார்.

4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியா லய வீரர்கள் 46:4 என்ற பழைய சாதனையை முறிய டித்து 45:7 என்ற புதிய சாத னையைப் பதிவு செய்ததுடன் வர்ண விருதையும் பெறுகின் றனர். (த-86-23)

## பளை மத்தி. மாணவருக்கு கராத்தேயில் பதக்கங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 27

வடமாகாணப் பாடசாலை களுக்கு இடையிலான கராத்தே போட்டியில் பளை மத்திய கல்லூரி மாணவர்கள் 3 தங்கப் பதக்கம், ஒரு வெள்ளிப் பதக்கம், ஒரு வெண்கலப் பதக்கம் வென்று முதல் முறையாகத் தேசிய மட்ட கராத்தே போட்டியில் பங்கு பற்றவுள்ளனர்.

பதக்கங்கள் பெற்ற மாணவர் களின் விவரங்கள் வருமாறு:

15 வயதுப்பிரிவு குழு நிலை காட்டாப் போட்டியில் ர.பிரசாத் தங்கப் பதக்கத்தையும் வி.சதுர் ஷன் தங்கப் பதக்கத்தையும் சு.சஞ்சீபன் தங்கப் பதக்கத் தையும் பெற்றுள்ளனர்.

15 வயதுப்பிரிவு குமித்தே போட்டியில் பொ.சஞ்சீபன் வெள்ளிப் பதக்கத்தையும், 17வயதுப்பிரிவு குமித்தே போட்டியில் த.தனுஷன் வெண்கலப்பதக்கத்தையும் பெற்றுள்ளனர். (த-23)



கராத்தேயில் வெற்றி பெற்ற அணியினர்



வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் இடம்பெற்று வருகின்றது. இதில் மூன்றாம் நாளான நேற்று முன்தினம் அஞ்சல் ஓட்டப் போட்டியில் ஆர்வத்துடன் பங்கேற்ற வீரர்கள். (த-21)

## தொடர்ச்சிகள்

### சிறப்புரிமை

என்று தெரிவித்தார்.

"தமிழ் மக்கள் மீதான இனப் படுகொலைகளில் இருந்து பாதுகாக்க சர்வதேச பொறி முறையை ஏற்படுத்துமாறு வேண்டுகோள்", "மனித உரிமை கள் சபை ஆணையாளர் அலு வலகம் தனது விசாரணைக் கால எல்லையை நீடிக்க வேண்டும். இனப்படுகொலை உட்பட சகல குற்றங்களையும் 1974 ஆம் ஆண்டிலிருந்து விசாரிக்க வேண்டும்", "ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரி மைகள் சபையின், இலங்கை யில் நடைபெற்ற போர்க் குற் றங்கள், மானுடத்துக்கு எதி ரான குற்றங்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு இலங்கையிலோ அல்லது இந்தியாவிலோ விசாரணை களை நடத்தி நிறைவு செய்ய வேண்டும்"- என்ற மூன்று பிரேரணைகளும் கடந்த 12 ஆம் திகதி பேரவைச் செயல கத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதும், அவை நிகழ்சி நிரலில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டி னார்.

அத்துடன் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் இப்போது அனுமதி தந்தாலும் சபை அமர் வில் பிரேரணையை சமர்ப்பிக்க தாம் தயாராக இருக்கின்றேன் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த அவைத் தலைவர்,

"எமக்கு கட்சி இருக்கின்றது. அதன் தலைமைத்துவம் இருக் கின்றது. அரசியல் ரீதியாக இவ் வாறான கொள்கை ரீதியாக முடிவு எடுக்க வேண்டியவர்கள் அவர்கள். அவர்களது பதிலைக் கோரி கடந்த 18 ஆம் திகதி கடி தம் அனுப்பியுள்ளேன். இன்ன மும் பதில் கிடைக்கவில்லை. அதன் பின்னர் இதனைப் பார்த் துக் கொள்ளலாம்" என்றார்.

ஆனால், தான் போதிய அவகா சம் வழங்கியதாவும், கட்சி கூட் டத்தைக் கூட்டாதது கட்சியின் பிழை எனவும் சுட்டிக்காட்டிய சிவாஜிலிங்கம், சபாமண்ட பத்தின் நிலத்தில் அமர்ந்து கொண்டார்.

அதையடுத்து முதலமைச்சர் மற்றும் அவையின் ஏனைய உறுப்பினர்கள், அவைத் தலை வர் ஆகியோர், "உறுப்பினர் கொண்டு வந்த பிரேரணை மீது எமக்கு மாற்றுக் கருத்து இல்லை. இவ்வாறான விடயங் கள் தொடர்பில் தீர்மானிப்ப தற்கு 8 பேர் கொண்ட குழுவை கட்சி நியமித்திருக்கின்றது. எனவே அரசியல் ரீதியான இவ்வாறான முடிவுகளை கட்சி யின் அனுமதியின்றிச் செய்ய முடியாது. கட்சியிடமிருந்து இதற்குரிய பதிலை அடுத்த அமர்வுக்கு முன்னதாகப் பெற்று அதற்கமைய பிரேரணையை சேர்த்துக் கொள்வதைப் பற்றித் தீர்மானிக்கலாம்" என்று பதில ளித்தனர்.

அதன்பின்னர் பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதன், ஆளுங்கட்சி உறுப்பினர்க ளான த.சித்தார்த்தன், பிறிமுஸ் சிராய்வா ஆகியோர் சிவாஜி லிங்கத்துக்கு கை கொடுத்து எழுப்பி அவரது ஆசனத்தில் அமர வைத்தனர். (ற-5.86)

### ரூ. 12லட்சத்து

தொகை அத்துடன் முற்பணம் ஏதும் செலுத்தப்பட்டிருப்பின் அது தொடர்பான விவரங்களை வழங்குமாறு வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவ ராஜா, முதலமைச்சரிடம் கேள்வி யெழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த முதலமைச் சர், "இந்தக் கேள்வியை எழுப்பியமைக்கு எதிர்கட்சித் தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இதன் மூலம் எமது சபை வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுகின்றது என்பதை வெளிக்காட்ட முடிந்துள்ளது. இவை யாவும் பிரதமசெயலாளர் அலுவலகத்தினாலேயே ஒழுங்கமைத்துத் தரப்பட்டன. பல்வேறு திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்கள், அமைச் சர்களின் வதிவிடங்கள், முதல மைச்சரின் வதிவிடம் என்பவற் றுக்காக மாதாந்தம் 12 லட்சத்து 57 ஆயிரத்து 500 ரூபா நிதி வாடகையாகச் செலுத்தப்படு கின்றது."- என்று தெரிவித்தார்.

அப்போது, வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவா ஜிலிங்கம், மேற்படி வாடகை விலை மதிப்பீட்டுத் திணைக் களத்தின் மதிப்பீட்டுக்கு அமை யவா செலுத்தப்படுகின்றது என்று கேள்வியெழுப்பினார். இதற்கு அடுத்த அமர்வில் பதில ளிப்பதாக முதலமைச்சர் தெரி வித்தார். (ற-5)



# நைஜீரியாவுடன் போராடி வென்றது ஆர்ஜென்ரீனா

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று இரவு இடம்பெற்ற ஆட்டத்தில் நைஜீரியாவுடன் கடுமையாகப் போராடி வெற்றி பெற்றது ஆர்ஜென்ரீனா. நைஜீரியா ஆட்டம் முழுவதும் ஆர்ஜென்ரீனாவுக்குக் கடுமையான நெருக்கடியைக் கொடுத்தது. ஆயினும் தனது அசத்தலான ஆட்டத்தின் மூலம் ஆர்ஜென்ரீனாவை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார் நட்சத்திர வீரர் லயனல் மெஸ்ஸி.

ஆட்டத்தின் ஆரம்பமே அதிரடியாகத்தான் இருந்தது. ஆட்டம் ஆரம்பமாகி 3ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனாவின் நட்சத்திர வீரர் லயனல் மெஸ்ஸி முதலாவது கோலைப் போட்டார். இதற்கு உடனடியாகப் பதிலடி கொடுத்தது நைஜீரியா. 4 ஆவது நிமிடத்தில் அந்த அணியின் வீரர் அஹ்மெட் முசா கோல் போட்டார். இதனால் ஆட்டம் சமநிலை ஆனது. இதன் பின்னர் இரு அணிகளும் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தின. மைதானத்தில் இரு அணிகளும் மாறி மாறி கோல் கம்பத்தை நோக்கிப் பந்தை நகர்த்தின.

ஆட்டத்தின் 45ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி மீண்டும் அதிரடி காட்டினார். ஆர்ஜென்ரீனா அணிக்காக அவர் இரண்டாவது கோலைப் போட 2:1 என முன்னிலை பெற்றது ஆர்ஜென்ரீனா. இந்த முன்னிலை நீண்ட நேரம் நீடிக்கவில்லை. 47 ஆவது நிமிடத்தில் நைஜீரியாவின் அஹ்மெட் முசா மீண்டும் ஒரு கோலைப் போட்டு ஆட்டத்தை சமப்படுத்தினார்.

இதனை அடுத்து இரு அணிகளின் ஆட்டத்திலும் அனல் பறந்தது. நைஜீரியா தனக்குக் கிடைத்த பல வாய்ப்புக்களை நழுவவிட்டது. ஆர்ஜென்ரீனாவின் மார்க்கோஸ் றோஜோ ஆட்டத்தின் 50 ஆவது நிமிடத்தில் ஒரு கோலைப் போட்டு தனது அணியின் வெற்றியை உறுதி செய்தார். இதனால் ஆர்ஜென்ரீனா 3:2 என்ற கோல் கணக்கில் நைஜீரியாவை வென்றது. ஆட்ட நாயகனாக ஆர்ஜென்ரீனாவின் நட்சத்திர வீரர் மெஸ்ஸி தெரிவானார். (த)

# போர்த்துக்கல் பரிதாபம்

கானாவுக்கெதிரான ஆட்டத்தில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டிய போதும் புள்ளிகள் அடிப்படையில் ஜேர்மனியும் அமெரிக்காவும் முன்னிலையில் உள்ளதால் பரிதாபமாக வெளியேறியது போர்த்துக்கல் அணி.

இந்த உலகக் கிண்ண போட்டியில் எதிர்பார்க்கப்பட்ட போர்த்துக்கல் அணி தொடரில் இருந்து வெளியேறியமை போர்த்துக்கல் அணித் தலைவர் றொனால்டோவின் ரசிகர்களை பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. நேற்றைய ஆட்டத்தில் கானாவுக்கெதிராக இரண்டு கோல்களை அடித்து அசத்தினார் றொனால்டோ. பதிலுக்கு கானாவும் ஒரு கோலைப் போட்டது. ஆயினும் போதிய புள்ளிகளைப் பெறாமையால் போர்த்துக்கல், கானா அணிகள் இந்தத் தொடரில் இருந்து வேளியேறின. (த)



# சர்வதேச கிரிக்கெட் சபை தலைவராக ஸ்ரீனிவாசன்



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவரான ஸ்ரீனிவாசன் சர்வதேச கிரிக்கெட் சபையின், தலைவராக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் நேற்று இடம்பெற்ற வருடாந்த கூட்டத் தொடரிலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஸ்ரீனிவாசன் இந்திய உயர் நீதிமன்ற விசாரணை காரணமாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவராக செயற்படுவதற்குத் தடைவிதிக்கப்பட்டது. இந்நிலையில் இந்தத் தீர்மானம் தமக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாகவும், கிரிக்கெட்டை முன்னேற்றும் பொருட்டு தனது முழுமையான பங்களிப்பை வழங்கப்போவதாகவும் ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபையில், தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள திருத்தமானது சிறப்பாகத் தமது திறமைகளை வெளிப்படுத்தும் எந்த வொரு அணிக்கும் டெஸ்ட் கிரிக்கெட் மற்றும் முக்கிய போட்டிகளில் விளையாடுவதற்கு வாய்ப்பினை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

FALC FRENCH LANGUAGE CENTRE
REGISTERED FRENCH CENTRE.
FRENCH CLASSES
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diplomas in French..
818 க்கும் மேற்பட்ட மாணவர்கள் French கற்றுச் சென்றுள்ளனர்...
நவீன முறையிலான கற்பித்தல்கள் Audio, Video மூலம்......
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி..
Note: தரமான ஆசிரியரை தெரிவு செய்து பணம், நேரத்தை விரயமாவதை தவிருங்கள்.
எம்மிடம் கற்ற அதிகமானோர் France, Canada வில் வேலை செய்கிறார்கள்...
ஆரம்பம்:05.07.14 Sat 10.30am. No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
ஆரம்பம்: 04.07 Fri 3.30pm. No.181, 1st Floor, Main Street, நெல்லியடி
021 320 2973
0779 789 456

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மரண அறிவித்தல்



### சுந்தரம் குணராஜா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் குணராஜா 25.06.2014 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - சிவபாக்கியம் தம்பதியரின் மகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், ரவீந்திரராசன், கீதாராணி (ஜேர்மனி), வசுந்தராதேவி (ஆசிரியர், யாழ்/பெரியபுலம் ம.வி), வள்ளுவன் (நோர்வே), வாசுகி (ஆசிரியர் - செங்குந்தா இந்துக்கல்லூரி), செங்குட்டுவன் (VDF,மாருதி ரெடிமிக்ஸ்), நக்கீரன் (யாழ்.போதனா வைத்தியசாலை), ஆனந்தசெந்தூரன் (எதிர்காலப் பசுமை உலகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்மநாகபூசனி, பரமானந்தன் (ஜேர்மனி), அம்பிகைபாலன் (பாலசாயி), சாயீஸ்வரி (நோர்வே), றேமளா, நிரஞ்சனி, நளாயினி (ஆசிரியர் - யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் மாமனாரும், குந்தவி, மயூரன், மதுமதி, ராம், அபிராமி, சங்கீர்த்தனன், பிரகதீசன், நந்திதா, ஆதித்தியா, சாருகேசன், கவிசாயினி, ஜனனி, சுருதி, கேதாரநாத், லஷ்சுமிநாத், சாம்பவி, சாய்பிரியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2014) வெள்ளிக்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

'செந்தூரகம்,'
தாவளையடி லேன், திருநெல்வேலி.
(49370)
(12.3.6)
தகவல்:
குடும்பத்தினர்.

SLAS
திறந்த.மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைகளுக்கான வகுப்புக்கள் உங்கள் வசதிக்கு ஏற்ப மூன்று பிரிவுகளாக நடைபெறுகின்றன. (விரும்பியபிரிவில்இணையலாம்)
பிரிவு I
சனி, ஞாயிறு பி.ப.1.00 தொடக்கம் 5.00மணிவரை
பிரிவு II
ஞாயிறு 9.30 -4.00 மணிவரை
பிரிவு III
திங்கள் முதல் வியாழன் வரை பி.ப. 5.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை
கணக்காளர்
புதிய பிரிவு II
ஞாயிறு (29/6)
காலை 9.00 மணி
பிரிவு I இற்கான வகுப்புக்கள் சனி, ஞாயிறு காலை 10-5 மணிவரை தொடர்ச்சியாக நடைபெறுகின்றன.
T.P.0754164564
யாழ்ப்பாணக் கல்லூரி,
பட்டப்படிப்புகள் பிரிவு

இலங்கை
நிர்வாகசேவை
SLAS
போட்டிப் பரீட்சை விசேட வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
ஒவ்வொரு சனியும் 8.30-3.30 வரை நடைபெறும்.
விரிவுரையாளர்கள்
P. உமாசங்கர்
P.கமல்தாசன்
நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி,யாழ்.நகர்
தொ.பே.0774696695

A/L CHEMISTRY
2016 பிரிவு மாணவர்களின் இரசாயன அலை பரீட்சை இல-10 இல் 75 % புள்ளிகளுக்கு மேல் பெற்ற முதல் 50 மாணவர்களின் விவரத்தை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஏனைய மாணவர்களுக்கு மேலதிக பின்னூட்டல் வகுப்புக்கள் நடைபெறும்.
ஆசிரியர் திரு. சு.சுரேஸ்குமார் BSc (Hons) MBA (Lon)
THE SCIENCE CORNER
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Aat (srilanka)
Foundation,intermediate,final
Qualification:- GCE O/L 6 PASSES Or GCE A/L 2PASES
MEDIUM - TAMIL & ENGLISH
further Details:
JAFFNA COLLEGE
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna
021 222 3382

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.06.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.